# பரலோகம்

## எப்படி இருக்கும்?

ஆன்ட்ரு தேவ்



# பரலோகம் எப்படியிருக்கும்?

சகோ. ஆன்ட்ரு தேவ்

(இயேசுவின் இயக்கம்)

*Bible Calls*

CHENNAI. INDIA

**Heaven**

**Brother Andrew Dev ©**

Edition : Nov. 2010

Published by Bible Calls, Chennai. Cell : 94444 98080

Contact : The Jesus Mission, P.O. Box 1040, Chennai-10

E- mail : thejesusmission@yahoo.com

Website : thejesusmission.org

Printed at Student Offset Services, Chennai -1

**Price : Rs. 40/-**

இப்புத்தகச்செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்க்கவும். ஆசிரியரின் அனுமதியில்லாமல், இப்புத்தகத்திலுள்ள செய்திகள் அச்சிடப்படவோ அல்லது மொழிபெயர்க்கப்படவோ கூடாது.

# அணிந்துரை

சுவிசேஷகர் ஆன்ட்ரு தேவ் அவர்கள் எழுதிய 'பரலோகம் எப்படி இருக்கும்?' என்ற புத்தகம் என் கையில் கொடுக்கப்பட்டது. அதனை நான் வாசிக்கும் போது கர்த்தர் சகோதரனுக்குக் கொடுத்த வெளிப்படுத்தல்களை நினைத்து கர்த்தரைத் துதித்தேன். பரலோகம் என்றால் என்ன? அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பல பெயர்கள், அங்குள்ள மகிமை, சிறப்புத்தன்மைகள், மனுஷர் உள்ளத்தில் எழும்பும் பல கேள்விகளுக்கு உள்ள பதில்கள் முதலானவைகளும், அங்கு செல்வோரின் ஆவிக்குரிய நிலைமை யாவும் இப்புத்தகத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

வேத வசனத்தின் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிற இப்புத்தகம் உண்மையிலேயே வாசிக்கிறவர்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். குறிப்பாக , கர்த்தருக்கு ஊழியம் செய்கிற போதகர்கள், சுவிசேஷகர்கள் யாவருக்கும் இது மிகவும் உபயோகமாயிருக்கும். அன்பு சகோதரன் ஆன்ட்ரு எழுதிய வேதாகம விளக்கம், தூர் உபதேசம், நெரிந்த நாணல் முதலான புத்தகங்களை ஏற்கெனவே நான் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிப்பதற்கு இவை போன்ற புத்தகங்கள் இக்காலத்தில் இன்னும் அதிகம் வெளியிடப்பட வேண்டும்.

சகோதரனின் பலவித ஊழியங்களையும் நான் கேள்விப்பட்டு மகிழுகிறேன். சுவிசேஷ ஊழியங்கள், வாலிபர்கள் மத்தியில் செய்யும் ஊழியம், சகோதரிகள் ஊழியம், இலக்கிய ஊழியம் மற்றும் மருத்துவ ஊழியம் யாவற்றையும் இவர்கள் தேவ அன்போடும், ஆவியின் நிறைவோடும் செய்து வருகின்றார்கள். சகோதரரின் மனைவி டாக்டர் ஜெயராணி ஆன்ட்ரு அவர்களும் கர்த்தருடைய ஊழியத்தைத் தன் கணவரோடு இசைந்து செய்வதைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். தேவன்தாமே இவர்களின் ஊழியத்தை இன்னும் ஆசீர்வதிக்குமாறு நான் ஜெபிக்கிறேன். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

23–08–02 — **பாஸ்டர் M. K. சாம் சுந்தரம்**

சென்னை — அப்போஸ்தல கிறிஸ்தவ சபை

# திறந்த வானத்தின் வாசலை நோக்கி...

பரலோகம் நம் தாய் வீடு என்பதால் அந்த வீட்டைக் குறித்து நாம் ஒவ்வொருவரும் ஆசையோடு வாஞ்சிக்கிறோம். இந்த மகிமை நிறைந்த மகா தேசத்தை மனித அறிவினால் கற்பனை செய்தாலும் அதன் முழுமையையும் ஒருவராலும் அறிந்துகொள்ள முடியாது. என்றாலும் பரலோகத்தின் மேலுள்ள நமது ஆசை ஒருநாளும் குறைந்துபோனதில்லை. வேதத்தில் பரலோகத்தை மையப்படுத்தி செய்திகள் கூறப்பட்டிருந்தாலும் அதை நாம் புரிந்துகொள்வதற்கு வசதியாக பரலோகத்தின் செய்திகளை வரிசைப்படுத்தி இப்புத்தகத்தில் கூறியிருக்கிறேன்.

பரலோகத்தின் ஆரம்பப்படி முதல் அதன் கடைசி செய்திவரைக்கும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற எல்லா வசனங்களையும் ஆராய்ந்து உங்களுக்குக் கொடுக்கும்படி எனக்கு உதவின பரிசுத்த ஆவியானவரை வணங்குகின்றேன். தேவன் இல்லை எனக் கூறும் நாத்திகன் கூட இப்புத்தகத்தை வாசித்தால் பரலோகத்திற்கு வரவேண்டுமென வாஞ்சிக்கவே விரும்புகிறேன். அத்தனை மகிழ்ச்சி நிறைந்த இவ்விடத்தை ஒரு மனிதனும் இழந்துவிடக்கூடாது என்பதே என் ஆசையாகும்.

இப்புத்தகத்தை எழுதி முடித்துவிட்டு என் அறையிலிருந்து வெளியே வந்தபோது பரலோகத்தைக் குறித்த நம்பிக்கை எனக்குள் பல மடங்கு வளர்ந்தது. பூமிக்குரிய வாழ்க்கை மேல் சலிப்பும் வெறுப்பும் பெருகியதோடு பரலோகத்தில் வீற்றிருக்கும் தேவன் மீது விசுவாசமும் வளர்ந்ததை உணர்ந்தேன். இதே உணர்வை நீங்களும் இதை வாசித்து முடித்தபின் பெற்றுக்கொள்வீர்களென நானும் நம்புகின்றேன்.

இப்புத்தகத்திற்கு அணிந்துரை எழுதி என்னை ஆசீர்வதித்த கனத்திற்குரிய ஐயா பாஸ்டர் சாம் சுந்தரம் அவர்களுக்கு என் அன்பையும் நன்றியையும் கூறிக்கொள்கிறேன். தேவன் இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரையும் பரலோகத்தில் சேர்ப்பதோடன்றி மனுக்குலம் முழுவதையும் தம்மண்டை இழுத்துக்கொள்ள வேண்டுமென விரும்பி உங்களை வாழ்த்துகிறேன்.

07–07–2002
சென்னை

**ஆன்ட்ரு தேவ்**
இயேசுவின் இயக்கம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பரலோகம் - முன்னுரை | |
| 1. | பரலோகம் என்றால் என்ன ? | 7 |
| 2. | பரலோக இராஜ்யத்தின் தன்மைகள் | 16 |
| 3. | பழைய ஏற்பாட்டில் பரலோகம் | 19 |
| 4. | பரலோகமும் கிறிஸ்துவும் | 20 |
| 5. | பரலோகமும் பரிசுத்த ஆவியானவரும் | 21 |
| 6. | பரலோகம் எப்படி இருக்கும் ? | 22 |
| 7. | புதிய எருசலேமைப் பற்றிய சிறப்புகள் ? | 45 |
| 8. | பரலோகில் தேவன் எவ்விதம் இருக்கிறார் ? | 52 |
| 9. | பரலோகத்தில் எவைகள் இருக்கும் ? | 54 |
| 10. | பரலோகத்தில் எவைகள் இருக்காது ? | 55 |
| 11. | பரலோகம் எங்கே இருக்கிறது ? | 57 |
| 12. | ஒருவர் மரித்த உடனே பரலோகம் செல்வாரா ? | 71 |
| 13. | ஆவி பிரிந்ததும் சரீரம் எப்பொழுது பரலோகம் செல்லும் ? | 74 |
| 14. | பரலோகத்தில் ஒருவரையொருவர் அடையாளம் காண முடியுமா ? | 76 |
| 15. | பரலோகத்தில் நமது பெயர்கள் மாற்றப்படுமா ? | 77 |
| 16. | மரித்தபின் சரீரம் மண்ணுக்கும், ஆவி விண்ணுக்கும் பிரிந்து விடுகிறது. இவைகள் எப்பொழுது மீண்டும் சந்திக்கும் ? | 78 |
| 17. | தற்கொலை செய்துகொண்டவர்கள் பரலோகம் செல்வார்களா ? | 79 |
| 18. | அகால மரணமடைந்த விசுவாசிகள் நித்தியத்தை எங்கே செலவிடுவர் | 81 |

| | | |
|---|---|---|
| 19. | ஒருமுறை கூட இயேசுவைக் குறித்த கேள்விப்படாது இறந்தவர்கள் பரலோகம் செல்வார்களா ? | 83 |
| 20. | சிறு பிள்ளைகள் மரணம் அடைந்தால் பரலோகம் செல்வார்களா ? | 84 |
| 21. | மிருகங்கள் பரலோகம் செல்லுமா ? | 85 |
| 22. | இரட்சிக்கப்பட்ட கணவனும், இரட்சிக்கப்பட்ட மனைவியும் பரலோகத்தில் கணவன் மனைவிகளாக இருப்பார்களா ? | 86 |
| 23. | மகிமையின் உருவம் என்றால் என்ன ? | 88 |
| 24. | யாரெல்லாம் பரலோகம் செல்வர் ? | 90 |
| 25. | பரலோகத்தில் நம் சரீரம் எப்படி இருக்கும் ? | 92 |
| 26. | பரலோகத்தில் குழந்தைகள் வளருவார்களா ? | 93 |
| 27. | பரலோகத்தில் எல்லாரும் ஒரே அளவில் சந்தோஷமாக இருப்பார்களா ? | 94 |
| 28. | இரட்சிக்கப்படாத நம்முடையவர்கள் நரகத்திலிருந்தால் பரலோகில் நம்மால் மகிழ்ச்சியாய் இருக்க முடியுமா ? | 96 |
| 29. | பரலோகத்தில் நாம் எத்தனை நாள் இருப்போம் ? | 98 |
| 30. | பரலோகத்தில் நாம் எப்படி இருப்போம் ? | 99 |
| 31. | பரலோகத்தில் நாம் என்ன செய்வோம் ? | 100 |
| 32. | பரலோகம் செல்வதற்கு என்ன செய்யவேண்டும் ? | 102 |

# பரலோகம்

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது, தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் (ஆதி. 1:1–2). வானத்தையும் பூமியையும் படைத்தது நம்முடைய தேவனாகிய கர்த்தர். வேத வசன அடிப்படையில் அவர் படைத்த அண்டசராசரங்களை பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். குறிப்பாக அவற்றை பரலோகம், பூலோகம், நரகம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இதில் பரலோகம் நரகம் ஆகிய இரண்டும் நம் கண்களுக்குப் புலப்படாத இடத்தில் இருக்கின்றன. ஆனால் பூமி மட்டும் நம்முடைய கண்களுக்குக் காணப்படுவதாலும் அதில் நாம் வாழ்வதாலும் பூமியைக் குறித்த பல உண்மைகள் நமக்குத் தெரிந்திருக்கிறது.

பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது (சங்.24:1). பூமியை அவர் மனுபுத்திரனுக்குக் கொடுத்தார் (சங்.115:16 ). மனுபுத்திரராகிய நாம் இந்த பூமியில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மரித்து இந்த பூமியிலே அடக்கம் பண்ணப்படுகிறோம். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கை முழுவதும் இந்த பூமியிலேயே துவங்கி இந்த பூமியிலேயே முடிந்து விடுகிறது. பல ஆயிரந் தலைமுறைகள் இதே பூமியில் வாழ்ந்து வாழ்க்கையை முடித்து இருக்கின்றனர். இந்த பூமியில் வம்சங்களும் தலைமுறைகளும் கடந்துசென்றாலும் பூமி அன்று முதல் இன்று வரை நிலையாகவே இருக்கின்றது. காரணம் பூமியைப் படைத்தவர் நிலையானவராய் இருப்பதால் அதைத் தம் கட்டுப்பாட்டில்

வைத்து பாதுகாத்து வருகிறார். இந்த பூமியைப் பராமரித்து வருகிற தேவன் பரலோகத்தில் வீற்றிருக்கிறார். அவர் வீற்றிருக்கும் இடத்தை சற்று ஆழமாக தியானிக்கவே இப்புத்தகத்தை எழுதியுள்ளேன். பரலோகத்திற்குள் சென்று அங்குள்ள அனைத் தையும் தெரிந்து கொள்வதற்கு இந்த பூமியைக் குறித்த சில குறிப்புகளோடு நமது தியானத்தைத் துவக்குவது நல்லது.

தேவனால் படைக்கப்பட்ட இந்த பூமி 5,974,000,000,000,000,000,000 டன் எடைகொண்டதாகும். அதாவது நமது அன்றாட அளவின்படி பூமியின் எடை 5,974,000,000, 000,000,000,000,000.00 கிலோ ஆகும். பூமியின் மொத்த சுற்றளவு 51,01,00,500 சதுர கிலோ மீட்டராகும். இத்தனை பெரிய பூமியை நீர், நிலம் என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். பூமியின் மொத்தப் பரப்பளவில் 36,11, 49,700 சதுர கிலோ மீட்டர் நீரால் பரவியிருக்கிறது. பூமியின் மீதமுள்ள பகுதி 14,89,50,800 சதுர கிலோ மீட்டர் நிலமாகப் பரவியுள்ளது. அதாவது பூமியானது தனது பரப்பளவில் 71% நீராகவும், 29 % நிலமாகவும் இருக்கின்றது.

நீராகப் பரவியிருக்கும் பகுதி நான்கு பெருங்கடல்களாலானது. பசிபிக், அட்லாண்டிக், இந்திய, ஆர்டிக் பெருங்கடல் என நான்கு கடல்கள் பூமியின் பெரும் பகுதியை நிரப்பியிருக்கின்றன. பசிபிக் கடல் 16,52,42,000 (35.25%) சதுர கி.மீ, அட்லாண்டிக் கடல் 8,23,62,000 (20.9%)சதுர கி.மீ, இந்தியப் பெருங்கடல் 7,35,56,000 (14.65%) சதுர கி.மீ, ஆர்டிக் கடல் 1,39,86,000 (3.9%) சதுர கி.மீ என பூமியை ஆக்கிரமித்துள்ளது.

பூமியில் நிலமாக உள்ள பகுதிகளை ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அண்டார்டிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா என ஏழு கண்டகளாகப் பிரிக்கலாம். இதில் ஆசியா 44,026,000 (29.81%) சதுர கி.மீ, ஆப்பிரிக்கா 30,271,000 (20.49%) சதுர கி.மீ, வட அமெரிக்கா 24,258,000 (14.42%) சதுர கி.மீ, தென் அமெரிக்கா 17,823,000 (11.24%) சதுர கி.மீ, அண்டார்டிக்கா 13,209,000 (8.94%) சதுர கி.மீ, ஐரோப்பா 10,404,000 (7.04%) சதுர கி.மீ, ஆஸ்திரேலியா 7,682,000 (5.20%) சதுர கி.மீ, பரப்பளவைக் கொண்டுள்ளன.

தேவன் பூமியை மூன்றில் ஒரு பங்கை நிலமாகப் படைத்ததின் பயன்களை ஆழமாகப் புரிந்துகொண்டால் அவரது ஞானத்தை நாம் மகிமைப்படுத் தலாம். தேவன் பூமியை நீரால் மட்டும் நிரப்பாமல் மனிதன் வாழ்வதற்குரிய இடமாக நிலத்தையும் நிர்ணயித்துக் கொடுத்தார். பூமி முழுவதும் நிலமாகப் படைத்திருந்தால் அதன் பக்க விளைவுகள் ஏராளமாக இருந்திருக்கும்.

அல்லது பூமியில் 71% நிலமாகவும் 29% நீராகவும் கொடுத்திருந்தால் மக்கள் தொகை அதிகமாக இருந்திருக்கும். அத்துடன் இன்னல்களும், பஞ்சங்களும், வறுமையும் பெருகியிருக்கும். 29சதவிகித நிலப்பரப்பில் மக்கள் வசிக்கும்போதே இத்தனை பிரிவினைகளோடும் போட்டி மனப்பான்மைகளோடும், யுத்த வெறி யோடும் மக்கள் இருப்பார்களென்றால் 71 சதவிகித நிலத்தில் மக்கள் குடியமர்ந் திருந்தால் உலகத்தின் நிலை என்னவாயிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாது. எனவேதான் தேவன் மனிதன் குடியிருக்கும் நிலப்பரப்பைக் குறைத்தே படைத்திருக்கிறார்.

இந்த பூமியில் ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் வாழ்வதற்குத் தேவையான சகலமும் இருக்கின்றன. அப்படியே உலகம் முழுவதிலும் உள்ள 4 முதல் 6 தலை முறை மக்கள் ஒரே நேரத்தில் வாழ்வதற்குத் தேவையான அனைத்து அத்தியாவசியப் பொருட்களும், இயற்கையும் வசதியும் போதுமான அளவிற்கு இருக்கின்றன. இன்னும் இந்த பூமியில் மனிதன் ஆக்கிரமிக்காத பகுதிகளும், மனிதனே குடிகொள்ளாத இடங்களும், கணக்கில்லாமல் கிடக்கின்றன. தேவனே இந்த நிலப்பகுதியையும், நீர்ப்பகுதியையும் அளவோடு நிர்ணயித்து அதில் வாழவும் அதில் உள்ளவைகளை ஆண்டு கொள்ளவும் மனிதனுக்கு அதிகாரம் தந்துள்ளார்.

மேற்கூறிய செய்திகளும் அளவுகளும் பூமியைக் குறித்த பல துல்லியமான புள்ளி விவரங்களை நமக்கு தெரிவிக்கின்றன. இந்த பூமியைக் குறித்து பல ஆயிரக் குறிப்புகளை நம்மால் கூறமுடியும். என்றாலும் அவைகளைக் குறித்து இப்பொழுது ஆராயாமல் பரலோகத்தைக் குறித்து அறிந்து கொள்வதற்கே நாம் விரும்புகிறோம். இங்கு என்னதான் வசதிகள் இருந்தும் பூமிக்குரிய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு பரலோகத்திற்குரிய வாழ்க்கை வாழும்படி நாம் விரும்புவதால் நாம் அதைக் குறித்து தியானிக்கவும் , அதன் இரகசியங்களைக் கண்டறியவும் ஆசைப்படுகிறோம்.

பரலோகத்தைக் குறித்து முழு உலகிலுமுள்ள மக்களிடையே பொதுவாக கீழ்காணும் கருத்துக்களே நிலவி வருகின்றன. பரலோகமோ நரகமோ நாமாக ஏற்படுத்திக் கொள்கின்ற ஒன்று என ஒரு கூட்ட மக்கள் கருதுகின்றனர். ஆனால் நமது நடைமுறை வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்ளது போலவே நமது பரலோக வாழ்க்கையையும், நரக வாழ்க்கையையும் நாமே தீர்மானித்து விடுகிறோம் என்பதே உண்மை. பரலோகம் என்பது நமக்காக இனி உருவாகப் போகும் ஒன்றல்ல, அது ஏற்கெனவே மனிதன் உருவாகும் முன்னே நித்திய நித்தியமாய் இருக்கிறது. தேவன் தமது அன்பினால்

மனுக்குலத்திற்காக அதை ஆதியிலே உருவாக்கியிருக்கிறார்.

பரலோகம் என்பது இந்த பூமிக்குரிய வாழ்வின் தொடர்ச்சியே என்றும், இந்தப் புவி வாழ்வின் தொடர்ச்சியை நாம் வேறொரு இடத்தில் போய் வாழப்போகிறோம் என்றும் பலர் நினைக்கின்றனர். பரலோகம் என்பது பூமிக்குரிய வாழ்வைப் போன்ற இன்னும் ஒரு வாழ்வு என்றால் அதை யார் விரும்புவார்? அதில் பிரவேசிப்பதற்குக் கடினமான முயற்சிகளை யார் எடுக்க முன்வருவார். பரலோக வாழ்வு பூமிக்குரிய வாழ்வின் அடுத்த பகுதியாய் இருந்தாலும் அது பூமிக்குரிய இந்த வாழ்க்கையைப் போல சபிக்கப்பட்ட வாழ்க்கையாய் இருக்காது.

பரலோகம் என்பது எந்த ஒரு அலுவலும் இல்லாத செயலற்ற இடமாகவும், அமைதியாய் இளைப்பாறி ஓய்வு எடுக்கும் இடமாகவும் இருக்கும் என இன்னும் பலர் நினைக்கின்றனர். ஆனால் மக்கள் நினைப்பதுபோல் பரலோகம் நிசப்தமாக இளைப்பாறி உறங்கும் இடமல்ல. தேவன் ஏதேனில் மனிதனை உருவாக்கிய நாளில் அவனை செயலற்றவனாய் வாழ்வதற்கு உருவாக்கவில்லை. பரலோக ஏதேனும் அப்படியே செயல்படும் இடமாக இருப்பதால் அங்கே சோம்பலாய் யாரும் இருக்கமுடியாது.

பரலோகம் என்பது மனிதனுடைய சரீர ஆத்தும ஆவிக்குரிய தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் இடம் என பலர் கருதுகின்றனர். ஆனால் பூமியில் மனிதனுக்கு இருக்கும் எல்லா உணர்ச்சிகளும், அதன் தேவைகளும் பரலோகத்தில் பூர்த்தி செய் யப்படுவதில்லை. மாம்சத்திற்கும் அதன் உணர்ச்சி களுக்கும் பரலோகில் இடமில்லை. ஆகவே நமது எல்லா மாம்ச உணர்வுகளின் தேவைகள் ஆசைகள் அனைத்தும் பரலோகத்தில் பூர்த்தி செய்யப்படும் என நினைப்பது சரியல்ல.

பரலோகம் என்பது மனிதன் தேவனாக மாறிவிடும் இடம் என சிலர் நினைக்கின் றனர். பரலோகம் சென்றடைந்தவுடன் நாம் தேவனைப் போல மாறுவது உண்மை தான். ஆனால் நாம் தேவனாக மாறிவிடுவதில்லை. தேவன் அருளும் ஞானத்தை நாம் பரலோகத்தில் பெற்றிருப்பது உண்மை தான். எனினும் தேவனுக்குரிய எல்லா ஞானத்தையும் பெற்றவர்களாய் நாம் மாறப்போவதில்லை. பரலோகத்தில் தேவன் தேவனாகவே இருப்பார். மனிதன் மனிதனாகவே இருப்பான். மனிதன் தேவனாய் மாறிவிடுவான் என நினைப்பது தவறான கருத்தாகும். பரலோகம் என்பது நல்லவர்களுக்கும் தானதர்மம் செய்தவர்களுக்கும் கொடுக்கப்படும் இடம் என பலர் நம்புகின்

றனர். ஆனால் பரலோகம் தர்ம கர்த்தாக்களைச் சேர்க்கும் இடமல்ல, மனிதர்களது பார்வையில் நல்லவர்களாய் வாழ்ந்தவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட இடமுமல்ல, அது கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தால் இரட்சிக் கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட ஸ்தலமாகும்.

பரலோகம் என்பது இரவும் பகலும் கோடிக் கோடி ஆண்டுகளாய் தேவனைத் துதித்து ஆராதித்துக்கொண்டிருக்கும் ஸ்தலம் மட்டுமே எனக் கூறுவோரும் உண்டு. ஆனால் இரவும் பகலும் ஆண்டாண்டு காலமாய் துதியிலும் ஆராதனையிலும் மட்டுமின்றி மற்ற தெய்வீக வேலைகளும் அங்கு இருக்கக்கூடும். நாம் கர்த்தரைப் பின்பற்றும் பரிசுத்தர்களாய் அவரோடு இணைந்து அவர் நமக்கு அங்கு வைத்திருக்கிற மற்ற வேலை களையும் செய்துகொண்டே இருப்போம் என வல்லுனர்கள் கூறுகின்றனர்.

இப்படி பூலோக மக்கள் பரலோகத்தைக் குறித்து பல்வேறு சிந்தனைகளோ டும், கொள்கைகளோடும் வாழ்ந்து வருகின்றனர். அவிசுவாசிகளின் மத்தியி லே பரலோகம் இன்னும் தவறாக நினைக்கப்படுகின்றது. கிறிஸ்தவர்களுக் குள்ளும் பரலோகத்தைக் குறித்த சரியான வெளிப்பாடு அற்றுக் கிடப்பது சோகமான தாகும். கர்த்தருடைய பிள்ளைகள் மரித்தபின் நித்தியத்திற்குள் பிரவேசிக் கிறார்கள் என அறிந்தாலும் கிறிஸ்தவர்கள் அதைக் குறித்து சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வதில்லை. தங்களுக்குரியவர்கள் மரித்து பரலோகத்தில் சென்றுள்ளனர் என்று அறிந்தும் அஞ்ஞானிகளைப் போல நம்பிக்கையற்றுப் பேசுவதும் அழுவதும் கிறிஸ்தவர்களிடையே நித்தியத் தைக் குறித்த உறுதியற்ற நம்பிக்கை இல்லை என்பதையே கூறுகிறது.

பரலோகம் என்ற ஒன்று இருக்கிறதா எனப்பலரும் கேட்கும் கேள்விகளுக்கு வேதம் திட்டமாக ஆம் என்றே பதில் கூறுகின்றது. முக்தியடைவதைக் குறித்து பல மதங்களும் மார்க்கங்களும் வித்தியாசமான கருத்துக்களைக் கூறினாலும், பரலோகத்தைக் குறித்த திட்டமான சத்தியத்தையும், தெளிவான வழியையும், நிச்சயத்தையும் கொடுப்பது பரிசுத்த வேதம் ஒன்றே. பரலோகம் என்ற ஒன்று இருக்கிறது என்பதற்கு பரிசுத்த வேதம் உறுதியான ஆதாரமாய் இருக்கிறது. மாத்திரமல்ல, மனிதனது உள் உணர்வுகளும் அதற்கு சாட்சியாக இருக்கிறது.

தேவன் மனிதனைப் படைக்கும் பொழுதே அவனுக்குள் அவனது ஆத்து மாவில் ஒரு தாகத்தை உண்டாக்கி வைத்திருக்கிறார். அந்த தாகமானது பூமியிலுள்ள எந்தப் பொருளாலும், எந்த மனிதனாலும் திருப்தி செய்ய முடியாத தாகமாகும். மனிதர்கள் மரிக்கும்வரை அந்த தாகம் அவர்களுக்

குள்ளே வளர்ந்துகொண்டே இருக்கின்றது. அது நித்திய வாசஸ்தலமாகிய பரலோகத்தை சென்றடையும் பொழுதுதான் தீர்க்கப்படுகின்றது. இதையே பவுலும் “இந்த கூடாரத்திலே நாம் தவித்து நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள் ளவர்களாய் இருக்கிறோம் ( 2 கொரி.5:2). இந்த தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்'' ( 2 கொரி. 5:8) என்று தனது நிருபத்தில் கூறியுள்ளான்.

பரலோகம் என்ற ஒன்று இல்லாதிருக்குமெனில் தேவன் மனிதனுக்குள் இப்படிப்பட்ட தாகத்தையும் விருப்பத்தையும் சிருஷ்டித்திருக்கமாட்டாரே. அத்தோடு பரலோகத்தின் முன் ருசியை இந்த பூமியில் நாம் அனுபவிக்கும்படி தேவன் நமக்கு சில தருணங்களையும் கொடுத்திருக்கின்றார். இரட்சிப்பின் சந்தோஷம், பரிசுத்த ஆவியின் நிறைவினால் உண்டாகும் மகிழ்ச்சி, கர்த்தருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதினால் உண்டாகும் திருப்தி ஆகியவை பரலோக பேரின்பத்தின் ஒரு முன் ருசியே. ஆகவே பரலோகம் என்ற ஒன்று நிச்சயமாக இருக்கிறது என்ற நம்பிக்கையை அவரை விசுவாசிக்கும் மனிதனிடமிருந்து எவரும் அசைக்கமுடியாது.

பரலோகத்தைக் குறித்து இந்த உலகத்தாரின் கருத்துக்களும், பிற மார்க்கத்தாரின் போதனைகளும் தெளிவற்றே இருக்கின்றன. அவர்களுக்கு பரலோகம் என்ற ஒரு ஸ்தலத்தைக் குறித்த ஒரு நம்பிக்கை கிடையாது. அங்கு செல்வதற்குரிய வழியையும் அவர்கள் அறிந்திடார்கள். பரலோகம் எப்படி இருக்கும்? அங்கு என்ன இருக்கும்? அங்கு யார் யார் இருப்பர்? அதை சென்றடைவது எப்படி? பரலோகத்திற்கு செல்லாதவர் களின் நிலை என்ன ? போன்றவற்றைக் குறித்து அவர்களால் தெளிவுற விளக்கம் கொடுக்க இயலாது. ஆகவே தெளிவற்ற அவர்களுடைய உபதேசங்கள் மக்களுக்கு பரலோகத்தைக் குறித்த நம்பிக்கையைக் கொடுப்பதில்லை. எனவே பரலோகம் சென்று வாழ வேண்டும் என்ற வாஞ்சையும் அவர்களுக்குள் எழுவதில்லை. எனவேதான் பிற மதத்தவர்கள் தங்கள் வாழ்வு இப்பூமியோடு முடிந்து போவதுபோல் வாழ்கின்றார்கள்.

துர்உபதேசக் கிறிஸ்தவர்களில் சிலர் நித்தியமாகிய பரலோகத்தைக் குறித்து அது ஒரு ஆவிக்குரியது, அது எழுத்தின்படி மெய்யான ஸ்தலமல்ல, அது ஒரு ஆவிக்குரிய நிலை, இந்த பூமியிலே அந்த ஆவிக்குரிய நிலையை அடைவதே பரலோகம் என்று விமர்சிக்கின்றனர். அவர்களுக்குப் பரலோகிலுள்ள நகரம், பொன்வீதி, சிங்காசனம், ஜீவ விருட்சம், ஜீவத்

தண்ணீருள்ள நதி, ஜீவ மன்னா, ஜீவக் கிரீடம் ஆகியவற்றைக் குறித்த எந்த ஒரு உறுதியான எதிர்பார்ப்பும் இல்லை. அவைகள் எல்லாம் இந்த பூமியிலேயே கிடைத்து விடுகின்றன என்பது போல கூறுவதால் இப்படிப் பட்டவர்கள் அந்த மோட்சத்தின் முன் ருசியை சுவைக்கமுடியாது.

தேவனோ நாம் அவரது திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளாவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை நமக்கு அருளியிருக்கிறார் (2 பேது.1:4). ஆகவே இந்த பூமியில் நமக்கு அருளப்படும் அனைத்து ஆசீர்வாதங்களும் பரலோகத்திலுள்ள நிஜமான ஆசீர்வாதத் தின் சாயலானவைகளே. நிஜமான ஆசீர்வாதங்களும், மகிழ்ச்சிகளும் நமக்கென தேவனால் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கூறுவதாலும், மக்களின் கருத்துக் களை மற்றவர் நம்புவதாலும் நாம் பரலோகத்தைக் குறித்து சரியாய் புரிந்து கொள்ள முடியாமல் போகின்றது. வேதப் புத்தகமே பரலோகத்தைக் குறித்த பரந்த வெளிப் பாடுகளை நமக்கு கொடுக்கின்றது. பரிசுத்த வேதாகமத்தைப் படிக்கின்றவர்கள் மோட்சத்தைக் குறித்து அதிகம் தெரிந்துகொள்வார்கள். வேதப் புத்தகத்தில் பதிமூன்று புத்தகங்களைத் தவிர (பழைய ஏற்பாட்டில் 6 புத்தகங்கள், புதிய ஏற்பாட்டில் 7 புத்தகங்கள்) மற்ற ஐம்பத்திமூன்று புத்தகங்களும் நேடியாகவோ, மறைமுகமாகவோ பரலோகத்தைக் குறித்து கூறியிருக்கின்றது. எனினும் முழுவதிலும் பரலோகத்தைக் குறித்ததான காரியங்கள் உள்ளார்ந்த விதத்தில் தீர்க்கமாகவே எழுதப்பட்டிருக்கின்றன.

1

## பரலோகம் என்றால் என்ன?

'பூமி'என்றால் என்ன என்ற கேள்விக்கு நாம் கல்வி பயின்ற பள்ளிகளில் விடை கண்டிருப்போம். பரலோகம் என்றால் என்ன என்ற கேள்வியை நாம் கல்விக் கூடங்களில் கற்கமுடியாது. பரலோகம் என்றால் என்ன என்று பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் கேள்வி கேட்டாலும் அதற்கான பதிலை வேதத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். மாத்திரமே

நாத்திகனானாலும், ஆத்திகனானாலும் இக்கேள்வியைக் கேட்பது எளிது. ஆனால் எந்த மனிதனும் இதற்கு பதிலை அறிவுப் பூர்வமாகக் கண்டடைய முடியாது, வேத அடிப்படையிலும் விசுவாசத்தினாலுமே நாம் இதற்குரிய பதிலைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**1. பரலோகம் என்பது பிதா வாசம்பண்ணும் இடம்:–** இயேசு தமது சீடர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தபோது பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே என்றே ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார் (மத்.6:9). இயேசு வானத்தி லிருந்து (பரலோகத்திலிருந்து) வந்தவர் (யோவா. 6:51) என்பதால் பரலோகத்தில் பிதா வீற்றிருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். பிதாவானவர் பரலோகத்தில் வீற்றிருப்பதால் பூமியிலுள்ள அனைவரும் அவர் இருக்கும் இடத்தை நோக்கிப் பார்க்கிறோம். புதிய தேவாலயத் திறப்பு விழாவின் போது ஜெபித்த சாலெமோன், பரலோகத்தில் தேவன் வாசமாயிருக்கிறார் என்பதை அறிக்கையிட்டான் (1 இரா. 8:30). எனவே தேவன் வாசம்பண்ணும் இடமே பரலோகம் என்பதை சந்தேகமின்றி அறியலாம்.

**2. பரலோகம் என்பது தேவனுடைய இராஜ்யம் :–** பரலோகம் என்பது அண்ட சராசரங்களையும் படைத்துக், காத்து, அழிக்கும் வல்லமை கொண்ட ஒரே இறைவனாகிய கர்த்தர் தங்கி ஆட்சிசெய்யும் இராஜ்யமாகும். இது தேவனுடைய இராஜ்யம் என அழைக்கப்படுகிறது (யோவா. 3:5). பூமியில் மனிதன் தன்னுடைய வீட்டில் குடியிருப்பதுபோல் தேவன் உன்னதத்தில் குடியிருக்கும் இடமே பரலோ கமாகும். தாம் ஒருவரே நித்திய ஏகசக் கராதிபதியாய் என்றென்றும் இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் சேனைகளின் தலைவராகவும் தேவனாகிய கர்த்தர் அதில் இராஜ கெம்பீரத்தோடு வீற்றிருக்கிறார்.

**3. பரலோகம் என்பது கர்த்தர் தங்கியிருக்கும் ஆலயம்:–** கர்த்தர் தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத் திலிருக்கிறது என்று அரசன் தாவீது கூறுகிறான் (சங். 11:4). பரலோகத்தில் தேவன் இருக்கும் இடம் ஆலயமாக இருப்பதால் அங்குள்ளவர்கள் அவருக்கு ஆராதனை செய்து அவரைத் தொழுது கொள்கின்றனர். பூமியிலும் நாம் அவருக்கென்று ஆலயத்தைக் கட்டி அதில் அவர் தங்கியிருக்கிறார் என விசுவாசிக்கிறோம். பூமிக்குரிய ஆலயத்தில் அவர் பிரசன்னராகி இருப்பதுபோல பரலோகத்திலிருக்கும் ஆலயத்தில் கர்த்தர் முழுமையாய் வீற்றிருக்கிறார். மண்ணுலகிலிருந்து நாம் அவரிடம் ஜெபிக்கும் எல்லா ஜெபங்களையும் கேட்டு பதிலளிக்கிறார் (1 நாளா. 21:26; 2

நாளா. 7:14; நெகே. 9:27; சங். 20:6; மத். 6:9).

**4. பரலோகம் என்பது இளைப்பாறும் இடம் :–** பரிசுத்தமான ஆத்துமாக்கள் பூமியில் தங்கள் பிரயாசங்களை எல்லாம் முடித்து மரித்ததும் சென்று இளைப்பாறி ஓய்வெடுக்கும் ஸ்தலமே பரலோகமாகும். கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள் (வெளி. 14:13) என வேதத்தின் கடைசிப் புத்தகம் வாக்களிக்கிறது. பரலோகத்தில் செல்லுகிறவர்கள் பூமிக்குரிய சகல பாடுகளையும், சோகங்களையும், வருத்தங்களையும், பாவத்தையும், நோய்களையும், கவலைகளையும் விட்டு இளைப்பாறும் இடமே பரலோகமாகும். அங்கே இளைப்பாறுகிறவர்கள் பாக்கியவான்கள் என அழைக்கப்படுகின்றனர்.

ஏனெனில் அதற்குள் பூமியில் வாழும் அனைத்து மனிதர்களும் போவதில்லை. பாக்கியம் பெற்றோர் அதில் இளைப்பாறுகின்றனர். கிறிஸ்துவிடம் வருகிறவர்கள் அந்த பாக்கியத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராஜ்யம் அவர்களுடையது (மத். 5:2). நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோகம் இராஜ்யம் அவர்களுடையது (மத். 5:10). என்று ஆண்டவர் கூறியபடியால் பூமியில் ஆவியில் எளிமையோடு வாழ்ந்து, துன்பப் பட்டாலும் நீதியின்படி நடந்து கர்த்தருடைய பிள்ளைகளாய் வாழ்கிறவர்களே பரலோகத்தில் இளைப்பாறுவார்கள்.

**5. பரலோகம் சேவை செய்யும் இடம்:–** இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரை சேவிக்கிறார்கள் (வெளி. 7:15). இரவும் பகலும் தேவனை சேவிக்கும் சேவை எப்படி இருக்கும் என்று வேதம் நமக்கு விரிவாகக் கூறவில்லையெனினும் பரலோகத்தில் நாம் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கப் போவதில்லை. இளைப்பாறு தலை தேவன் அளித்தாலும் நாம் சுறுசுறுப் போடும் மகிமையின் வேகத்தோடும் அவர் சமுகத்தில் அவரை சேவித்துக் கொண்டிருப்போம்.

**6. பரலோகம் மகிழ்ச்சி நிறைந்த இடம் :–** உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு (சங். 16:11). உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொன்னேன் (யோவா. 15:11). பரலோகத்தில் தேவன் நம்முடைய கண்ணீர் யாவும் துடைப்பதால் அங்கு மகிழ்ச்சியும் நித்திய பேரின்பமும் நமக்கு உண்டு. இரட்சிக்கப்பட்டவர்களும் நீதிமான்களும்

எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கும்படி அங்கு அனுப்பப்படு வார்கள் (மத்.25:21,23). இந்தப் பரலோக சந்தோஷத்தின் ஒரு துளியைத் தான் பூமியில் இரட்சிக்கப் பட்டபொழுது நாம் அனுபவித்துள்ளோம். இதன் பூரண சந்தோஷத்தை அதற்குள் செல்லும்போதே நம்மால் அனுபவிக்க முடியும்.

**7. பரலோகம் அழியாத நிரந்தரமான இடம் :–** இந்த பூமிக்குரிய கூடாரமானது நிலையில்லாதது. அழிந்துபோகக்கூடியது. பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் ( 2 கொரி. 5:1). இந்த பூமியின் வாழ்வு நிலையில்லாததும் நிரந்தரமற்றதுமாகும். நம்முடைய ஜீவியக் காலம் இவ்வளவு என்று நம்மால் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் பரலோக வாழ்வோ நித்தியமானதும் நிலையானதுமானபடியால் அதன் ஜீவிய காலம் முடிவற்றது என நம்மால் நம்ப முடியும். முடிவில்லாத அந்த வாழ்க்கையை நம்மால் இப்பொழுது புரிந்து கொள்ள முடியாதென்றாலும் அங்கு சென்ற பின்பு புரிந்து கொள்ள முடியும்.

**8. பரலோகம் சந்தோஷமுள்ள சமுதாயம் :–** பரலோகத்திலே நாம் ஒரு பரிசுத்த சமுதாயமாய் பரிசுத்தவான்களோடு வாழ அழைக்கப்பட்டிருக் கிறோம் (எபி. 12:22– 24). ஆகவே பரலோகம் சென்றதும் நாம் இயேசுவோடு மட்டும் தனியே வாழுவோம் என ஒருவரும் கருதக்கூடாது. அங்கு ஒரு பரிசுத்தமுள்ள சமுதாய வாழ்வு காத்திருக்கிறது. தேவன், இயேசு கிறிஸ்து ஆயிரம் பதினாயிரமான தேவ தூதர்கள், மூப்பர்கள், முற்பிதாக்கள், நீதிமான்கள், பரிசுத்தவான்கள், சீயோன் மலை, பரம எருசலேம் ; சர்வ சங்கமாகிய சபை, இயேசு கிறிஸ்துவின் இரத்தம், ஜீவ நதி, ஜீவ விருட்சம் ஆகியவற்றோடு நாம் ஐக்கியம் கொள்ளும்படியே பரலோகத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த முழுக் கூட்டத்தோடு இணைந்து நாம் தேவனோடு உறவுக்கொள்ளும் சமுதாய வாழ்வே பரலோகமாகும்.

**9. பரலோகம் என்பது நித்திய பாதுகாப்புள்ள இடம்:–** பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட் டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதுமில்லை. அங்கே திருடர் கன்னமிட்டு திருடுகிறதுமில்லை (மத். 6:19–21). பிராணிகளால் வரும் சேதம் (பூச்சி), இயற்கையின் கெடுதி (துரு), மனிதனின் தீயசெயல் (கன்னமிட்டுத் திருடுதல்) பரலோ கத்தில் நடப்பதில்லை. அதாவது பிராணி

களோ, இயற்கையின் காலநிலையோ, பாவிகளோ அங்கு இருப்பதில்லை. பூமியில் மனிதனுக்கு மனிதன் கெடுதி செய்வதுபோல் பரலோகத்தில் ஒருவரும் கெடுதி செய்யமுடியாது. அங்கே கள்ளரும், கொள்ளைக்காரரும், பொருளாசைக்காரரும், திருடரும், சூனியக் காரரும், விபச்சாரக்காரரும், கொலைபாதகரும், சாத்தானும் நுழைய முடியாததால் தீங்குகள் அங்கே நடப்பதில்லை. எனவே பூமியை விடப் பரலோகம் பாதுகாப்பு நிறைந்த இடமாகவும், அழிவில்லாமல் வாழக்கூடிய வாசஸ்தலமாக இருக்கிறது.

**10. பரலோகம் என்பது மகிமையடைந்தோர் வாசம்பண்ணும் இடம் :–** பரலோகம் மகிமையடைந்த சரீரத்தோடு நாம் வாழுகின்ற ஒரு ஸ்தலம். நாம் இப்பொழுது வாழும் பூமி நிச்சயமான ஒரு ஸ்தலமாக இருப்பது எப்படி உண்மையோ, அதுபோலவே தேவன் நமக்கென ஆயத்தம் செய்திருக்கும் பரலோகமும் நிச்சயமான ஒரு ஸ்தலமாக இருப்பது உண்மையே. பரலோகம் என்பது பூலோகத்தின் தொடர்ச்சியல்ல, அதன் மகிமையில் கோடியில் ஒரு பங்கைக் கூட பூமியின் மகிமைக்கு ஒப்பிடமுடியாது. பரலோகம் அத்தனை மகிமை யுள்ள ஒரு மெய்யான வாசஸ்தலம். நமது பரிசுத்த உணர்வுகளின் ஏக்கங்கள் அனைத்தும் பரலோகில் திருப்தியாக்கப்படும். தேவன் ஜீவ மன்னாவையும், ஜீவத் தண்ணீரையும் பரலோகில் நமக்கென கொடுப்பது எதற்காக நமது பசியையும் தாகத்தையும் தீர்ப்பதற்காகவே. தேவனை முக முகமாய்க் காண காத்திருந்த ஆத்துமாக்களில் உண்டான களைப்பைப் போக்கும்படியே தேவன் பரலோகில் இளைப்பாறுதலைத் தருகிறார்.

**11. பரலோகம் என்பது கூடாரம் என அழைக்கப்படுகிறது :–** கூடாரம் என்ற வார்த்தை இஸ்ரவேலர் வனாந்திரத்திலே ஸ்தாபித்த கையால் செய்யப்பட்ட கூடாரத்தையே குறிக்கிறது (யாத். 40:2). என்றாலும் பரம கூடாரம் என்பது “பரிசுத்த ஸ்தலத்திலும் மனுஷரால் அல்ல கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரமாகிய” பரலோகத்தையே குறிப்பிடு கின்றது (எபி. 8:2). பழைய ஏற்பாட்டில் 50 அதிகாரங்களில் ஆசரிப்பு கூடாரத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டிலோ எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் மட்டும் 131– வசனங்களில் இந்த மெய்யான கூடாரமாகிய பரலோகத்தைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள கூடாரம் வரப்போகிற மெய்யான கூடாரத்திற்கு நிழலாட்டம் (எபி. 8:5). ஆசரிப்புக்கூடாரத்தின் மூன்று பிரிவுகளும் பரலோகத்தின் மூன்று பிரிவுகளுக்கு ஒப்பாயிருக்கிறது. தேவன் தம் மக்களுக்கு மத்தியில் வாசம்செய்யவேண்டுமென்பதே

ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப் பட்டதன் நோக்கமாகும். மாத்திரமல்ல, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்கள் தேவனிடத்தில் தைரியமாய் நெருங்கிச் சேருவதற்கு கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டிலோ இயேசு கிறிஸ்துவே அந்த மெய்யான கூடாரமாகி தம் மூலமாய் தேவனண்டை நெருங்கிச் சேருவதற்கு அனுக்கிரகம் செய்தார். அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையிலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார் ( யோவா. 1:14). இந்த வசனத்தின் கிரேக்க பதம் தன் மக்கள் மத்தியிலே கூடாரமிட்டார் என்றே கூறுகிறது. ஆகவே பழைய ஏற்பாட்டு மக்களுக்கு ஆசரிப்புக் கூடாரம் என்பது தேவன் மக்களை சந்திக்கும் இடமாகவும், புதிய ஏற்பாட்டு மக்களுக்கு பரலோகக் கூடாரம் என்பது மக்கள் தேவனை சந்திக்கும் இடமாகவும் இருக்கிறது.

**12. பரலோகம் என்பது தேவனுடைய வீடு என அழைக்கப்படுகிறது:–** நமது முற்பிதாக்கள் பரலோகத்தைக் குறிப்பிடுவதற்கு பயன்படுத்திய பதம் தேவனுடைய வீடு என்பதாகும். யாக்கோபு சொப்பனத்தைக் கண்டு விழித்த பின்பு, இது தேவனது வீடேயல்லாமல் வேறல்ல. இது வானத்தின் வாசல் என்றான் (ஆதி. 28:17). தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடும் நீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமுமாகிய ஆலயத்தை உமக்குக் கட்டினேன் என்று சாலெமோன் அரசனும் கூறினான் (1 இராஜ. 8:13). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு (யோவா.14:2) என்று பரலோகத்தைப் பிதாவின் வீடு என சீடர்களுக்கு அறிவித்தார்.

**13. பரலோகம் ஆலயம் என அழைக்கப்படுகிறது :–** பரலோகத்தைக் குறித்து வேதம் பயன்படுத்தும் மற்றொரு பதம் தேவனது ஆலயமாகும். “என் தேவனை நோக்கி அபயமிட்டேன் ; தமது ஆலயத்தினின்று என் சத்தத்தைக் கேட்டார்” (2 சாமு. 22:7), கர்த்தர் தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார், அவருடைய சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது (சங். 11:4). உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம் (சங். 65:4). ஆகிய வசனங்கள் தேவனுடைய ஆலயம் என்பது தேவன் வாசம்பண்ணும் பரலோகம் என்பதையே குறிப்பிடுகின்றன. ஏசாயா தன்னுடைய தரிசனத்தில் ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டேன். அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவலாயம் நிறைந்திருந்தது (ஏசா. 6:1) எனக் குறிப்பிடுவதும் இந்தப் பரலோக ஆலயத்தையே.

**14. பரலோகம் வாசஸ்தலம் என அழைக்கப்படுகிறது :–** பரலோகம் என்பதற்கு வாசஸ்தலம் என்ற பதமும் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சீயோனில் அவர் வாசஸ்தலமும் இருக்கிறது (சங். 76:2). தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன் திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும் விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாய் இருக்கிறார் (சங். 68:5). என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு (யோவா. 14:2), நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறோம் (2 கொரி. 5:2). போன்ற வசனங்கள் பரலோகத்தை வாசஸ்தலம் என்றே தெரிவிக்கின்றன.

**15. பரலோகம் சிங்காசனம் என அழைக்கப்படுகிறது :–** வானம் எனக்கு சிங்காசனம் ; பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப் பட்டது ? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது ? (ஏசா. 66:1). என்ற வசனத்தில் தேவன் தங்கியிருக்கும் ஸ்தலம் சிங்காசனம் என அழைக்கப் படுகிறது என்பதை அறியலாம். இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்திலும் தேவன் வீற்றிருக்கும் இடம் 'சிங்காசனம்' என அறிவித்தார். வானத்தின் பேரில் சத்தியம்பண்ண வேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம் (மத். 5:34) என்பதால் வானத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறவர்கள் தேவ சிங்காசத்தின் பேரில் சத்தியம் பண்ணுகிறார்கள். வானம் அவர் சிங்காசனம் என்றால் அதில் வீற்றிருக்கிறவர் எத்தனை பெரியவராயிருப்பார்!

**16. பரலோகம் மகிமை என அழைக்கப்படுகிறது :–** பரலோகத்தைக் குறிப்பதற்கு மகிமை என்ற வார்த்தையும் வேதத்தில் சில இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. சங்கீதக்காரன் இதைக் கூறும்போது முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர், பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு என்றான் (சங்.73:24–25). ஸ்தேவான் மரிக்கும் போது, அவன் வானத்தை அண்ணாந்து பார்த்து தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு, அதோ வானங்கள் திறந்திருக் கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான் (அப். 7:55–56). தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்.... மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் (1 தீமோ. 3:16). கிறிஸ்துவானவர் 'மகிமையின்' நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த ரகசியம் (கொலோ. 1:27). இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மகிமை என்ற வார்த்தை பரலோகத்தையே குறிக்கிறது.

**17. பரலோகம் வானம் என்று அழைக்கப்படுகிறது :–** வேதத்தில் சில

இடங்களில் பரலோகத்தைக் குறிப்படுவதற்கு வானம் என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து (மத். 14:19) எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வானம் என்ற பதம் தேவனது வாசஸ்தலத்தைத் குறிப்பதற்காக கூறப்பட்டுள்ளது. இளைய குமாரன் தன் தகப்பனிடத்திற்குப்போய் தகப்பனே பரத்திற்கு விரோதமாக வும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் (லூக். 15:18) எனக் கூறுகையில் பரத்திற்கு என்ற பதம் பரலோகத்தையே குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய வசனங்கள் பரலோகம் என்பது ஒரு மெய்யான இடம் என்பதை யும், நிஜமான ஸ்தலம் என்பதையும் தெளிவாகக் கூறுகிறது. மாத்திரமல்ல, பரலோகம் என்பது தேவன் இனிமேல் உருவாக்கக்கூடிய ஒரு ஸ்தலமல்ல. பரலோகம் என்பது ஏற்கெனவே இருக்கின்ற ஒரு ஸ்தலம், அங்கு தேவனும் தேவ தூதர்களும் வாசம் செய்கின்றனர். மூப்பர்கள், முற்பிதாக்கள் மரித்த பரிசுத்தவான்கள் அங்கு இளைப்பாறுகின்றார்கள், தேவன் தன்னுடைய சகல வல்லமையான செயல்களையும் அங்கிருந்தே செயல்படுத்துகின்றார்.

**18. பரலோகம் என்பது ஆச்சரியமான ஸ்தலம் :–** எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்புகூறுகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை (1 கொரி. 2:9) என வசனம் கூறுவதால் பரலோகத்தை நமது மாம்சக் கண்களாலும், கற்பனையினாலும் நினைத்துப் பார்க்க முடியாது. இந்த பூமியில் நாம் பார்த்து பிரம்மிக்கக்கூடிய எத்தனையோ காரியங்கள் மனித மூளையால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பரலோகமோ இதுவரை நம் கண்களால் கண்டிராத, நம் செவிகளால் கேட்டிராத, இப்படி இருக்கும் என்று எந்த மனிதனும் தன் இருதயத்தில் நினைத்துக் கூட பார்த்திராத அளவிற்கு ஆச்சரியமான ஒரு ஸ்தலமாகவே இருக்கும். பரலோகத்திலிருந்து ஒருவர் பூமிக்கு வந்து அதை மனிதர்களுக்கு எவ்வளவுதான் விவரித்துக்கூறினாலும், மனித மூளையால் அதை கிரகித்துக்கொள்ளமுடியாத அளவிற்கு பரலோகம் அத்தனை ஆச்சரியமான ஸ்தலமாகும்.

**19. பரலோகம் பூரண அறிவுள்ள ஸ்தலம் :–** இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன் (1 கொரி. 13:12). மேற்கூறிய வசனம் இன்று நாம் பெற்றிருக்கிற குறைந்த அறிவையும்,

பரலோகத்தில் நாம் பெற்றுக்கொள்ளப் போகும் நிறைவான அறிவையும் வேறுப்படுத்திக் காட்டுகிறது. இம்மைக்குரிய மறுமைக்குரிய பல கேள்விகளுக்கு எத்தனையோ ஆண்டுகளாய் பதிலைப் பெற முடியாமல் குழம்பியிருக்கிறோம். ஆனால் இக்குழப்பங்களுக்கெல்லாம் பரலோகத்தில் நமக்கு பூரண பதில் கிடைத்துவிடும்.

**20. பரலோகம் பிரிந்தவர்கள் சேரும் ஸ்தலம் :–** இந்த பூமியிலே நமக்கு அருமையானவர்களை நாம் இழக்கக் கொடுப்பது தவிர்க்கமுடியாத ஒன்று. ஏனெனில் பூமியில் சரீர மரணம் ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்ட ஒன்று. ஆனால் சரீர மரணத்தின் பின்பு அழிவில்லாத நம்முடைய ஆத்துமா பரலோகில் சென்று மகிமையடைந்த சரீரத்தில் என்றென்றும் இயேசுவோடு வாழும். ஆகவே நாம் பரலோகம் சென்றவுடன் இந்த பூமியில் நம்மை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுக்குள் மரித்த நமக்கு அருமையான வர்களை அங்கே காண்போம். அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொ முதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெச. 4:16–17) என்று தெசலோனிக்கேயர் நிருபத்தில் பவுல் இதையே எழுதி வைத்துள்ளான். நமக்கு அருமையானவர்களை மாத்தி ரமல்ல, ஆதாம் முதற்கொண்டு கிறிஸ்துவின் வருகையில் எடுத்துக் கொள் ளப்படும் பரிசுத்தவான்கள் வரை அனைவரையும் நாம் அங்கே காண்போம்.

எல்லாப் பரிசுத்தவான்களும் ஒன்றாகக் கூடுகின்ற அந்த நாளும் அந்த இராஜ்யமும் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். எனினும் பூமியில் நாம் வாழும்பொழுது நமக்கு அருமையானவர்களுக்கும் நமக்கு முள்ள தொடர்பு பரலோகில் நீடிக்குமா என்று கேட்டால், இல்லை என்பதுதான் பதிலாகும். ஏனெனில் கணவன் மனைவி இருவருடைய உறவும்கூட 'மரணம் நம்மைப் பிரிக்கும் வரை' என்று அவர்கள் கொடுத்த வாக்குப்படி மரணம் வரைதான் தொடரும். மரணத்தின் பின்பு பரலோகிலே அவர்கள் தேவ தூதர்களைப் போலத்தான் இருப்பார்கள். பூமியிலுள்ள மாம்சப் பிரகாரமான உறவுகளும், உடன் பிறந்த உறவுகளும் பரலோகில் தொடர்வதில்லை. எனவே பரலோகம் என்பது காலகாலமாய் பிரிந்திருந்த பரிசுத்தவான்கள் அனைவரும் சந்தித்து கூடிவாழும் இடமாகும்.

2

## பரலோக ராஜ்யத்தின் தன்மைகள்

பூமியில் எந்த ஒரு இராஜ்யத்திற்கும் கொள்கைகளும், கலாச்சாரங்களும், சட்டங்களும் இருப்பதுபோல் பரலோக இராஜ்யத்திற்கும், சட்டதிட்டங்கள் இருக்கின்றன. பூமிக்குரிய அரசுகளே இத்தனை கட்டுப்பாடுகளோடும், சட்டதிட்டங்களோடும் செயல்படுமாயின் வானத்திற்குரிய அரசு எத்தனை மேன்மையுள்ளதாய் செயல்படும் ! பரலோகத்தின் மகிமையைக் குறித்து நம்மால் விவரிக்கமுடியாதென்றாலும் அதன் மேன்மைகளையும், தன்மைகளையும் அறிந்துகொள்வது எளிதான தாகும். ஏனெனில் தேவன் வீற்றிருக்கும் இராஜ்யம் பரலோகத்தில் இருந்தாலும் அது பூமிக்கும் வரக்கூடியது. ஒவ்வொரு மனிதனுக்கருகிலும், மனிதனுக்குள்ளும் அது வந்திருப்பதை இயேசுவே உரைத்திருக்கிறார் (மத். 12:28; லூக். 12:32; 17:21).

பரலோக இராஜ்யத்தின் தன்மைகள் என்ன என்பதை அறிந்துகொள்ள வேதத்தில் பல உதாரணங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பரலோகம் இப்படித்தான் என உறுதியாகக் கூறும் அளவிற்கு அதன் கொள்கைகள் நமக்கு நம்பிக்கை தருகிறது. அவ்வளவு தெளிவோடு நமக்கு பரலோகம் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

1. பரலோக இராஜ்யம் மகிமையானது – 1 தெச. 2:11
2. பரலோக இராஜ்யம் முடிவே இல்லாதது – தானி. 2:44 ; லூக். 1:33
3. பரலோக இராஜ்யம் வல்லமையானது – மாற். 9:1
4. பரலோக இராஜ்யம் அசைக்கமுடியாதது – எபி. 12:28
5. பரலோக இராஜ்யம் மிகப் பெரியது – மத். 13:31–32
6. பரலோக இராஜ்யம் அதிகாரம் நிறைந்தது – மத். 16:19
7. பரலோக இராஜ்யம் வளர்ந்து பெருகுவது – ஏசா. 9:6–7 ; மத். 13:33
8. பரலோக இராஜ்யம் சேனைகளைக் கொண்டது– எபி. 12:22 ; வெளி. 5:11
9. பரலோக இராஜ்யம் அனைவருக்கும் உரியது – வெளி. 5:9–10 ; தானி. 7:14
10. பரலோக இராஜ்யம் நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்திலானது – ரோம. 14:17

இந்தப் பரலோகத்தின் தன்மைகள் அனைத்தையும் பூலோக அரசுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது. நாம் நமக்குத் தெரிந்த செய்திகளை வைத்து

பரலோகத்தைக் கற்பனை செய்து ஒரு முடிவுக்கு வர முயன்றால் நாம் தோற்றுப் போவோம். நமது சிந்தனைக்கு மேலே அது மகிமையான உன்னதமானது. அதன் தன்மைகள் எந்த தேசத்தித்தின் தன்மைக்கும் ஒப்பிடமுடியாதது. எல்லா மக்களும் அதில் பங்கேற்க முடியும்.

பரலோக இராஜ்யத்திற்குள் செல்வது மிக எளிது. எந்த மனிதனும் எளிய விசுவாசத்தின் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டால் அதை அடைந்து விடலாம். தேவ இராஜ்யத்தின் தன்மைகளை அறிந்துகொள்வது எத்தனை எளிதோ அதற்குள் செல்வதும் அத்தனை எளிதாகும். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவா. 3:16). நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவா. 14:6). பரலோகத்தை அடைவதற்கு இயேசுவே வழியாக இருக்கிறார். மோட்சத்தை அடைவதற்கு தங்களையே கொடுமைப்படுத்திக்கொண்டு கடினமான முறையில் இறைவனைத் தேடும் கோடிக்கணக்கான மக்கள் இந்த எளிய வழியை அவமதிப்பதால், மோட்சத்தைக் காணமுடியாமல் இருக்கின்றனர்.

பூலோகத்தில் எல்லாவற்றிற்கும் பெயர்கள் இருப்பதுபோல, பரலோகத்திற்கும் பல பெயர்கள் இருக்கின்றன. பூமியிலிருக்கும் நமக்கு பரலோகத்தைக் குறித்து குறைவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், நமக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கும் இந்த வெளிப்பாடுகள் போதுமானவைகளாக இருக்கின்றன. நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள காரியங்களை தேவ ஒத்தாசையோடு ஆராய்ந்தால் பல செய்திகளை நம்மால் புரிந்து கொள்ள முடியும். தேவன் வாசம்பண்ணும் இடமான பரலோகமானது வேதத்தில் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. தேவனின் தன்மைகளையும், தேவன் வாசம்பண்ணும் சூழ்நிலைககளையும் இப்பெயர்கள் குறிக்கின்றன. மூன்றாம் வானத்தில் இருக்கும் பரலோகத்திற்கு ஒரு பெயரை சூட்டி முடித்துவிட முடியாது. எனவே அதற்கு பல்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. உன்னதத்தின் மகிமையால் நிறைந்திருக்கும் இந்த விண்ணரசின் அழகிற்கு நம்மால் பலகோடிப் பெயர்கள் சூட்டினாலும் அதின் சிறப்பை விவரித்து முடித்து விட முடியாது. வேதமும் அப்படியே பரலோகத்தின் சிறப்பை விவரிக்கும் சில முக்கிய பெயர்களை அதற்கு சூட்டியுள்ளது.

1. பரலோகம் – சங். 2:4; 73:25; மத். 6:20

2. பரலோக இராஜ்யம் – மத். 4:17
3. பரதீசு – 2 கொரி. 12:2–4
4. பிதாவின்வீடு – யோவா. 14:2; சங். 84:4
5. மகிமையுள்ள சன்னிதானம் – யூதா. 24
6. நித்திய ஜீவன் – யோவா. 3:16
7. நித்திய வீடு – 2 கொரி. 5:1
8. மூன்றாம் வானம் – 2 கொரி. 12:2–4
9. சுய தேசம் – எபி. 11:14
10. பரம தேசம் – எபி. 11:16
11. பரம எருசலேம் – எபி. 12:22
12. பரிசுத்த நகரம் – சங். 48:1
13. புதிய எருசலேம் – வெளி. 3:12
14. புதிய வானம், புதிய பூமி – வெளி. 21:1
15. நிலையான நகரம் – எபி. 13:14
16. தேவன் கட்டிய அஸ்திபாரமுள்ள நகரம் – எபி. 11:10
17. தேவனது வாசஸ்தலம் – வெளி. 21:3
18. சீயோன் – சங். 48:2
19. சீயோன் மலை – எபி. 12:22
20. தேவனது சமூகம் வலதுபாரிசம் – சங். 16:11
21. மகிமை – சங். 73:24
22. மகா இராஜாவின் நகரம் – சங். 48:2
22. சர்வ சங்கமாகிய சபை – எபி. 12:23
23. தேவனுடைய இராஜ்யம் – யோவா. 3:3,5
24. கிறிஸ்துவின் இராஜ்யம் – லூக். 22:30 ; 2 பேது. 1:11 ; எபே. 5:5
25. பரிசுத்தர்களின் இராஜ்யம் – மத். 13:43 ; 26:29
26. ஒளியின் இராஜ்யம் – கொலோ. 1:12–13; 1 பேது. 2:9
27. பிதாவின் இராஜ்யம் – மத். 26:29
28. ஆராதனைக் கூடாரம் – ஏசா. 14:13
29. மேலான உன்னதம் – ஏசா. 14:14 ; லூக். 2:14
30. கர்த்தருடைய பருவதம் – சங். 24:3
31. பரிசுத்த ஸ்தலம் – சங். 24:3
32. ஜீவனுள்ளோர் தேசம் – சங். 52:5

போன்ற இன்னும் பல பெயர்கள் பரலோகத்திற்கு இருக்கின்றன. பூரண அழகுள்ள பரலோகத்தைப் பல பெயர்களால் புகழ்ந்து கூறினாலும், அதன்

சிறப்பும், மேன்மையும் ஒருபோதும் புகழ்ந்து கூறி முடித்துவிடமுடியாது என்பது எத்தனை உண்மை.

## 3

# பழைய ஏற்பாட்டில் பரலோகம்

பழைய ஏற்பாட்டில் பரலோகத்தைக் குறித்து கூறப்பட்டுள்ள எபிரேய வார்த்தை 'ஷமைம்' (Shamaim) என்பதாகும். இந்த வார்த்தை கீழான மற்றும் மேலான பரலோகத்தைக் குறிப்பதோடு பூமிக்குரிய, ஆவிக்குரிய பரலோகத்தைக் குறிக்கும்படி இரு பொருளில் இந்த ஒரு பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் பரலோகத்தைக் குறிப்பதற்கு கிரேக்க மொழியில் 'ஔரனாஸ்' (Ouranos) என்ற பதம் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது 'ஷமைம்' என்ற எபிரேய பதத்திற்கு இணையான பதமாகும். மூல மொழியில் வேதம் முழுவதிலும் நூற்றுக்கணக்கான இடங்களில் வரும் பரலோகம் என்ற வார்த்தை இந்த Shamaim, Ouranos என்ற இரு பதங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

தேவனுடைய இராஜ்யம் என்றெழைக்கப்படுகிற பரலோகமானது பழைய ஏற்பாட்டைவிட புதிய ஏற்பாட்டுப் பகுதியிலேயே அதிகமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இதனால் பரலோகம் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் துவக்கப்பட்டது என்று நினைக்கக்கூடாது. ஏனெனில் பரலோகம் ஆதியி லிருந்தே இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே அதைக் குறித்து அறிந்துகொள்ளும் வாய்ப்பு புதிய ஏற்பாட்டு மக்களுக்குக் கிடைத்தது. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தேவனை முகமுகமாய் கண்டதாலும், அவரது தரிசனங்களை அவ்வப்போது பெற்றதாலும் அவர்களும் பரலோகத்தின் மேல் மிகுந்த விசுவாசத்தை வைத்திருந்தனர்.

கிறிஸ்துவின் இராஜ்யம் உலகப் பிரகாரமான யுத்தங்களால் வெற்றிபெற்று உருவான இராஜ்யம் அல்ல. அது முற்பிதாக்களின் காலத்திலிருந்தே வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யமாகும். சாத்தானின் தலையை நசுக்குவதற்காக (ஆதி. 3:15) ஸ்திரீயின் வித்திலிருந்து வருகிறவர், சாத்தானை வீழ்த்தி பாவத்தை அழித்து தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்பதே ஏதேன் தோட்டத்தில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாகும். வாக்குத்தத்த சந்ததி ஆபிரகாமின் வழியே பெரிய இனமானது (ஆதி.12:2;

17:4–5) பிறகு இஸ்ரவேல் மக்கள் கூட்டமானாது (யாத். 19:5–6), பின் கிதியோன் வழியே படர்ந்து (நியா. 8:22 ) எஸ்தர் வழியே பாதுகாக்கப்பட்டு (எஸ்த. 4:14), தாவீதின் வழியே வளர்ந்து (2 சாமு. 7:12–13), ஏசாயாவின் மூலம் முன்னுரைக்கப்பட்டு (ஏசா. 6:2–6), தானியேலின் மூலம் அறிவிக்கப்பட்டு (தானி. 2:44 ; 7:14) முடிவில் இயேசுவில் மலர்ந்தது

அவன், தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்கள் உள்ள நகரத்திற்கு அவன் காத்திருந்தான் (எபி. 11:10). அவர்கள் சுய தேசத்தை நாடிப் போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள் (எபி. 11:14). அவர்கள் அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள் (எபி. 11:16). வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படி வாதிக்கப்பட்டார்கள் (எபி. 11:35) இப்படியாகப் பழைய ஏற்பாட்டுக் கால விசுவாசிகள் பரலோகத்தை நினைத்து தங்கள் வாழ்க்கை பயணத்தை நடத்தினார்கள் என்பதை அனைவரும் அறியலாம். பூமிக்குரிய இந்தக் கூடாரத்தை விட பரலோகத்தில் வாசம்பண்ணுவது நித்தியமான பேரின்பம் என அவர்கள் எண்ணியதால் அனைவரும் அதை நாடினார்கள்.

4

## பரலோகமும் கிறிஸ்துவும்

கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும் (ஏசா. 9:6) என்பது தேவனது அரசையே குறிக்கிறது. கிறிஸ்து பூமிக்கு வந்தபிறகு இந்த அரசைக் குறித்தே தமது முதல் செய்தியை ஆரம்பித்தார் (மத். 4:17). தம் செய்திகள் முழுவதிலும் பரலோகத்தை மையமாக வைத்தே பிரசங்கித்தார் (மத். 13 அதி). பிசாசுகளையும் துரத்தும்படி அவர் இராஜ்யம் வல்லமையாய் செயல்பட்டது (மத். 12:28). இந்த இராஜ்யத்தின் ராஜாதி ராஜாவாய் இயேசு இருப்பதால் (1 தீமோ. 6:15–16). தம்மை ஏற்றுக்கொள்ளுகிற அனைவருக்கும் இந்த இராஜ்யத்தில் இடமளிக்கிறார் (லூக். 17:21 ; வெளி. 11:15). பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிற குமாரன் இந்த இராஜ்யத்தின் உரிமையாளராய் இருப்பதால் அவரை ஏற்றுக்கொண்டால் நமக்கும் அந்த இராஜ்யத்தை சுதந்தரிக்கும் வாய்ப்பையும், அவரோடு வாழும் பாக்கியத்தையும் கொடுக்கிறார்.

பரலோகம் பிதாவுக்குரியதென்றாலும் அதன் உரியமையாளர் இயேசு கிறிஸ்து ஆவார். மேசியா, இரட்சகர், நியாயாதிபதி, சமாதானப் பிரபு,

உன்னதமான தேவகுமாரன் என பல பதவிகளின் பெயர்களோடு கிறிஸ்து அழைக்கப்படுவதற்கு அவர் பரலோகத்தின் முழு உரிமையாளர் என்பதே காரணமாகும். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென (மத்.28:18) அவர் ஒருவரே திருவுளம் பற்றினார். வானத்திலும் பூமியிலும் அதிகாரம் இருந்தும் அவருடைய இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல (யோவா.18:36), பரலோகத் திற்குரிய அரசை ஸ்தாபிக்கவே பூலோகத்தில் வந்து தம் இரத்தத்தை சிந்தி மரித்து உயிரோடு எழுந்தார். கிறிஸ்து எங்கே இருக்கிறாரோ அங்கே அவரது இராஜ்யம் இருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்கள் எவர்களோ அவர்களுக்குள்ளும் அவர் இராஜ்யம் வருகிறது. அவர்கள் அந்த ராஜ்யத்திற்குள் ஓர்நாள் பிரவேசித்து அவரோடு நித்தியமாய் வாழுவர்.

உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்ற சாத்தான் (வெளி. 12:9) இந்த உலகத்தை தன்வசப்படுத்தியுள்ளான். உலக இராஜ்யங்களும், அவைகளின் மகிமையும் அவனிடத்திலிருப்பதால் (மத். 4:8–9) அதை வைத்து ஆத்துமாக்களைத் தன்பக்கம் இழுத்துக் கெடுத்துப்போடுகிறான். பிசாசின் கிரியைகளை அழிக்கவும் (1 யோவா. 3:8), பிசாசானவனை அழிக்கவும் மக்களை விடுதலைபண்ணவும் கிறிஸ்து வெளிப்பட்டார் (எபி. 2:14). பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், வியாதியிலிருந்தும் விடுவிக்கிறவராய் உலகத்தில் வந்த அவரைத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொள்கிறவர்கள் பிசாசின் ஆளுகை யிலிருந்து விடுபட்டு, கிறிஸ்துவின் ஆளுகைக்குள் வருவர், அத்துடன் அவர் ராஜ்யத்திலும் பங்கடைவர்.

5

## பரலோகமும் பரிசுத்த ஆவியானவரும்

தேவன் ஆவியானவர் (யோவா. 4:24). அவர் குமாரனாக வெளிப் பட்டார். பரிசுத்த ஆவியானவராக கிரியை செய்துவருகிறார். பரிசுத்த ஆவியானவர் உலகத் தோற்றத்திற்கு முன்பிருந்தே இருக்கிறவர் (ஆதி. 1:2). சிருஷ்டிப்பில் முக்கிய பங்கு வகித்தவர் (ஆதி. 1:26). தேவகுமாரனை உருவாக்குவதற்கு ஜீவனாய் இருந்தவர் (லூக். 1:35). அவரை உருவாக்கியது மட்டுமின்றி ஊழியத்திற்காக அவரை அனுப்பும்போது புறாவைப் போல வானத்திலிருந்து இறங்கிவந்தார் (மத். 3:16). பரலோகத்திலிருக்கிற பரிசுத்த ஆவியானவர்

பூமியில் இறங்கி வந்து தேவனது கிரியைகளை நடப்பித்து முடித்து ஓர்நாள் மீண்டும் பரலோகத்திற்குச் சென்று விடுகிறவராய் இருந்தார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, மரித்து மகிமையடையும் வரை பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தில் காத்திருந்தார் (யோவா.7:39). இயேசு மகிமையடைந்த பின்போ பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாய் வாக்களித்தார் (யோவா. 16:7). அவ்வண்ணமே கிறிஸ்துவானவர் மகிமையாய் பரலோகத்திற்குச் சென்றதும் பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்தார் (அப். 2:1–4). இப்பொழுது ஆவியானவர் பூமியில் இருக்கிறார். கிறிஸ்துவின் வருகை வரை அவர் பூமியில் தங்கியிருப்பார். பின்பு பரலோகத்திற்குச் சென்று அங்கிருந்து திருவுளம் பற்றுவார் (வெளி. 14:13). பரிசுத்த ஆவியானவர் பூமியில் இருக்கும் வரை கிருபையின் காலம் இருக்கும். அவர் பரத்திற்குச் சென்றதும் திரவ காலம் துவங்கிவிடும்.

6

# பரலோகம் எப்படி இருக்கும்?

ஒரு கடல் எப்படி நீர் நிறைந்து நீலமாக இருக்கும் என்று பார்த்தவர்கள் அறிவர். ஒரு வயல் நிலம் எப்படி பசுமையாக செழித்திருக்கும் என்பதை ரசித்தவர்கள் அறிவர். ஒரு பாலைவனம் எவ்விதம் வறண்டிருக்கும் என்பதை வறட்சியில் வாடுவோர் அறிவர். அப்படியே பரலோகம் எப்படி இருக்கும் என்பதை தங்கள் இருதயத்தில் ருசித்து அனுபவித்தவர் அறிவர். தான் செய்த பாவங்களை அறிக்கையிட்டு தேவனிடம் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டு இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, அவரை உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட மனிதன் மறுபிறப்படைகிறான். அந்த மறுப்பிறப் படைந்தவரின் மனிதற்குள் தேவனது ராஜ்யமாகிய பரலோகம் வருகிறது. இவ்வித மறுப்பிறப்படையாதோர் பரலோகம் எங்கே இருக்கிறது எப்படி இருக்கிறது என்ற கேள்விகளைக் கேட்பர் பரலோகத்தை நம்ப மறுப்பர்.

பரலோகம் எப்படி இருக்கும் என்று அடுத்தவரிடம் விசாரித்துக் கேட்டு பின்பு அதற்குள் யாரும் செல்வதில்லை. அவ்வண்ணமே பரலோகமானது இப்படித்தான் இருக்கிறது என்று யாராலும் முழுமையாக வார்த்தைகளில் சொல்லி முடித்து விடவும் முடியாது. பரலோகம் எப்படி இருக்கிறது என்பதைக்குறித்து வேதம் ஒரு சில இடங்களில் கூறியிருக்கிறது. அப்படியே வேதத்தை நம்பும்

சில பரிசுத்தவான்கள் தாங்கள் ஆவியில் எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்தை கண்டு பூமியிலுள்ளவர்களுக்கு சில செய்திகளைக் கூறியிருக்கிறார்கள். வேறு சிலர் ஜெபிக்கும் பொழுது பரலோகத்தைக் குறித்த தரிசனத்தைக் கண்டிருக்கின்றனர். ஆனால் இவைகளெல்லாம் நமக்கு பரலோகத்தைக் குறித்த முழுவதையும் அறிவித்து விடுவதில்லை.

வேதத்தில் 66 புத்தகங்கள் இருந்தாலும் அதில் கடைசிப் புத்தகமான வெளிப் படுத்தின விசேஷமே பரலோகத்தைக் குறித்து அதிகமான செய்திகளைக் கூறியிருக்கின்றது. வெளிப்படுத்தின விசேஷம் பரலோகத் தைக் குறித்த செய்தி களையும், அதில் நடக்கும் நிகழ்ச்சிகளையும், அதன் அலங்கார சிறப்பையும் நமக்குத் தெரிவித்திருக்கிறது. பரிசுத்த நகரம் (வெளி.21:2 ; 22:19), புதிய எருசலேம் (வெளி.3:12), தேவனுடைய நகரம் (வெளி.3:12), தேவனுடைய வாசஸ்தலம் (வெளி.13:6; 21:3), சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் (வெளி.15:5), எருசலேமாகிய பரிசுத்த நகரம் (வெளி.21:10) என பரலோகத்தைப் பல்வேறு பெயர்களில் அழைக்கிறது.

பரலோகம் என்பது வார்த்தையினால் விவரிக்கமுடியாத, நாம் கற்பனை பண்ணிப் பார்க்கமுடியாத ஒரு ஸ்தலம். என்றாலும் வேதத்தின் துணைகொண்டு பரலோகம் எப்படி இருக்கும் என்று நம்மால் ஓரளவு சிந்தனை செய்யமுடிகிறது. பரலோகத்தின் தன்மையை புதிய ஏற்பாட்டில் நாம் மூன்று கோணங்களில் காண முடிகிறது. இந்த மூன்று பதங்கள் பரலோகத்தை அறிந்துகொள்வதற்கு பயன் படுத்தப்பட்டுள்ளன. ***1. பரதீசு, 2. பிதாவின் வீடு, 3. புதிய எருசலேம் அல்லது சீயோன்.*** இந்த மூன்றும் பதங்களும் பரலோகம் என்ற ஒன்றையே குறிப்பிட்டாலும் அது மூன்று கோணங்களில் பிரிக்கப்பட்டிருக்கிறது.

## 1. பரலோகம் பரதீசு

பரதீசு என்பது தேவனுடைய தோட்டம். இதைக் குறித்து பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் காணமுடிகிறது. பழைய ஏற்பாட்டில் பரதீசு என்ற வார்த்தைக்கு எபிரேய வார்த்தைத் தோட்டம் என்பதாகும். உன் தோட்டம் மாதளம் செடிகளும், அருமையான கனிமரங்களும்... சகலவித கந்தவர்க்க செடிகளுமுள்ள சிங்காரவனமாயிருக்கிறது (உன். 4:13). நான் பெரிய வேலை களைச் செய்தேன்...திராச்சைத்தோட்டங்களை நாட்டினேன் (பிர. 2:4) ஆகிய வசனங்களில் ***'தோட்டம்'*** என்ற வார்த்தைக்கு ***'பரதீசு'*** என்ற எபிரேய பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்படியே ஏதேனைக் குறிப்பதற்கும் கிரேக்க மொழி பெயர்ப்பில் 'பரதீசு' என்ற வார்த்தையே

பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**பரதீசில் என்பது என்ன ? :–** பரதீசு என்பது தேவ சமுகத்தால் நிறைந்த ஒரு இடம். தேவன் பரலோகத்தின் ஒரு சரியான இடத்தையே பூமியில் ஏதேன் தோட்டமாக படைத்து அதில் தாம் சிருஷ்டித்த மனிதனை வைத்து அவனோடு உறவாடி வந்தார். ஆதாமுக்காய் உண்டுபண்ணப்பட்ட ஏதேன் என்ற பரதீசில் என்ன இருந்ததோ அதுவே பரலோகிலும் இருக்கும். ஏதேனில் என்ன இருந்தது? ஜீவ விருட்சத்தின் கனியும், தேவ சமுகமும் இருந்தது. தேவன் தம் மக்கள் மத்தியில் உலாவினார், அவர் சிருஷ்டித்த ஆதாமும் ஏவாளும் அவரோடு உறவு கொண்டனர். ஆகவே பரதீசு என்பது ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து நித்திய நித்திய காலமாய் தேவனோடு உறவுகொள்ளும் ஒரு இடமாகும்.

**1. ஆதாமின் நாட்களில் பரதீசு :–** பரலோகம் என்ற பரதீசின் ஒரு பகுதியையே தேவன் இந்த பூமியில் ஏதேன் தோட்டமாக உருவாக்கினார். இதைக் குறித்து எபிரேய வேத அறிஞர்கள், தேவன் ஏதேனில் எந்த ஒரு கனிவிருட்சத்தையும் புதிதாக உருவாக்கவில்லை, ஜீவ விருட்சம் ஏற்கெனவே உன்னத்திலுள்ள பரதீசிலிருந்தவைகள். தேவன் தன்னுடைய வார்த்தையினால் அவைகளை உன்னதமான பரதீசிலிருந்து பூமியிலுள்ள ஏதேனிலே கொண்டு வந்து நாட்டினார். அதாவது பரலோகமான பரதீசிலுள்ள ஒரு பகுதியை ஆதாமுக்காக பூமியிலே தேவன் உண்டாக்கினார் என்று அவர்கள் கூறுகின்றனர். இக்கருத்தை பெருன்பான்மையான வேத அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

**2. கிறிஸ்துவின் நாட்களில் பரதீசு :–** ஆதியிலே பரதீசு உன்னதங்களில் இருந்தது. அதின் ஒரு பகுதியை ஏதேன் தோட்டமாக தேவன் மனிதனுக்காக படைத்தார். இந்தத் தோட்டத்தில் ஆதாம் பாவம் செய்ததால் இந்தப் பரதீசின் வழி அடைக்கப்பட்டது. பிறகு இதைக் குறித்த எவ்விதக் குறிப்பும் வேதத்தில் தெரிவிக் கப்படவில்லை. எனினும் ஆதாம் வீழ்ச்சியடைந்தது முதல் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரை இந்தப் பரதீசு பூமியின் கீழே இருந்ததாகத் தெரிகிறது. இதற்கு வேத ஆதாரங்களும் ஒத்திருக்கிறது. பூமியின் கீழிருந்த பரதீசில் மரித்த நீதிமான்களின் ஆவிகள் இளைப்பாறிக்கொண்டிருந்தன.

இயேசுவானவர் சிலுவையில் தொங்கினபோது அவருக்கு அருகிலிருந்த கள்ளனைப் பார்த்து "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசியிருப்பாய்" என்றார் (லூக். 23:43). அதாவது நீதிமான்களும் மனந்திரும்பியவர்களும்

மரித்தப்பின்பு பரதீசுக்கு செல்லவேண்டும் என்பதால் இயேசுவும் மனந்திரும்பிய கள்ளனிடம் அப்படி உறுதியளித்தார். கிறிஸ்துவும் மரித்து பூமிக்கு அடியிலிருந்த பரதீசுக்குச் சென்றார். மனுஷகுமாரனும் பூமியின் வயிற்றில் மூன்று நாள் இருப்பார் (மத். 12:40) என்ற போல் இயேசுவும் மரித்து பரதீசிலிருந்தார்.

ஆனால் இயேசு கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தபோது பரதீசுக்குள்ளிருந்த நீதிமான்களின் ஆவிகளை அழைத்துக் கொண்டு அவ்விடத்தைப் பூட்டி மேலே பரலோகத்திற்குச் சென்று விட்டார். இப்பொழுது பரதீசு பூமியில் அல்ல, பரலோகத்தில் இருக்கிறது. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பரலோகத் திருக்கிற பரதீசிலே இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். இதையே அப்போஸ்தலன் பவுலும் தனது அனுபவத்தைக் குறித்து கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன் ; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப் பட்டான் ; அவன் சரீரத்திலிருந்தானே, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானே, அதை அறியேன் ; தேவன் அறிவார். அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக் கெட்டாதது மாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக் கிறேன் என்றான் (2 கொரி. 12:2–3). பவுலின் இந்த வார்த்தையிலிருந்து பரதீசு தற்பொழுது மேலே இருக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

கல்லறைகளும் திறந்தது, நித்தியடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது, அவர் உயிர்த்தெழுந்த பின்பு இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள் என்று மத்தேயு சுவிசேஷம் இதையே கூறுகிறது (மத். 27:52–53 ). இப்படியாக உன்னதங்களிலிருந்த பரதீசு ஏதேனுக்கு வந்து பின்பு பூமியின் கீழ் சென்றுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு உன்னதத்திற்கு கிறிஸ்துவால் கொண்டு செல்லப்பட்டது.

**3. பரதீசு உயிருள்ளவர்கள் வாழும் இடம் :–** கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பரதீசு என்பது மரித்துப்போனவர்கள் இருக்கும் இடமல்ல, அது உயிருள்ள வர்கள் வாழும் உன்னத ஸ்தலமாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் எபேசு சபைக்கு வாக்குண்ணும்போது தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்று கூறுகின்றார் (வெளி. 2:7). அங்கு ஜீவ விருட்சத்தின் கனி இருப்பதால் அங்கு வாழும் பரிசுத்தவான்கள் அந்தக் கனியைப் புசித்து என்றென்றும் உயிரோடு வாழும் பாக்கியத்தைப் பெற்று அனுபவிப்பர். அங்கு மகிழ்ச்சியும்

சந்தோஷமும் நிறைவாய் காணப்படும். வியாதியும் வேதனையும் வருத்தமும் அங்கிருப்பதில்லை, அங்கு தேவனோடுள்ள ஐக்கியம் நிறைவாய் இருக்கும். பூமியிலே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் மரித்த கண்களை மூடிய அடுத்த வினாடியில் உன்னதத்திலுள்ள பரதீசையே காணுவர்.

**4. பரதீசு ஜெயங்கொள்ளுகிறவர்கள் சேரும் இடம் : –** ஆதாம் ஏவாள் தேவனோடு கொண்டிருந்த உறவை கெடுத்துவிடும்படி சாத்தானானவன் ஏதேனிலிருந்த பரதீசுக்குள் வந்தான். ஆனால் இப்பொழுது உன்னதத்திலுள்ள பரதீசிலோ சாத்தானுக்கும் அவனது கிரியைகளுக்கும் பாவிகளுக்கும் இடமே இல்லை. ஜெயங்கொள்ளுகிறவன் மாத்திரமே தேவனுடைய பரதீசிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பான் (வெளி. 2:7). ஜெயங்கொள்ளுகிறவன் மாத்திரமே கிறிஸ்துவின் சிங்காசனத்தில் கிறிஸ்துவோடு கூட உட்காரும்படி அருள்பெறுவான்.

கிறிஸ்துவுக்குள்ளாய் மரித்த சில பரிசுத்தவான்களின் அனுபவ சாட்சியிலிருந்து பரதீசு என்ற நம் பிதாவின் வீடு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவு அழகுள்ளது என்பதை நாம் அறியலாம். அதன் மகிமை, அதன் வெளிச்சம், அழகு, கெம்பீரம், பரிசுத்தம், சிறப்பு, பூரணம், சமாதானம், அங்கிருக்கும் கீத வாத்தியங்கள், தூதர்கள் மற்றும் பரிசுத்தவான்களின் துதி ஆராதனை ஆகியவற்றை எவ்வளவு வர்ணித்தாலும் இந்த பூமியிலுள்ள நம்முடைய மனித அறிவினால் அதைக் கற்பனை செய்யமுடியவதில்லை. அங்கு கடந்து சென்றவர்கள் பூமிக்கு வந்தபின்பு கூறுவதெல்லாம் பரலோகம் பூரண மகிமையுள்ளது. அங்கிருந்து பூமிக்கு வருவதற்கு மனமில்லை, எங்கள் மனம் அந்த மகிமை யுள்ள பரலோகத்திற்கு மீண்டும் கடந்து செல்வதற்கு ஏங்குகிறது என்பதுதான். பவுலும் கூட தன்னுடைய பரலோக அனுபவத்தைக் குறித்து கூறும்போது, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டான் என்று கூறுகின்றான். அதன் பொருள் என்ன? அங்கு பேசப்படும் வார்த்தைகளை மனித வார்த்தைகளால் விவரிக்கமுடியாது என்பதே அதன் பொருளாகும்.

கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் இந்த பூமியை விட்டுக் கடந்து செல்லும் போது நம்பிக்கையற்றவர்களாகக் கடந்து செல்வதில்லை. அவர்கள் ஒரு நித்திய நம்பிக்கையோடு அங்கு கடந்து செல்கிறார்கள். சாத்தானின் சோதனைகளும், வீழ்ச்சிகளும், பாடுகளும், கண்ணீரும், மரணமும், அலறுதலும் இல்லாத அந்த நித்திய மகிழ்ச்சிக்குள் பிரவேசிப்பதற்கு விசுவாசிகளிடையே தேவன் எதிர்பார்க்கின்ற ஒரே ஒரு தகுதி ஜெயம் கொள்ள வேண்டுமென்

பது தான். எதை நாம் ஜெயங்கொள்ளவேண்டும்? தெய்வீக வாழ்க்கைக்கு விரோதமாக நம்மைத் தடுத்து நிறுத்தும் எல்லா மாம்ச கிரியைகளையும் ஜெயங்கொள்ளவேண்டும். நமக்குள்ளிருக்கும் கிறிஸ்துவின் ஜீவனால் இந்த உலகையும், மாம்சத்தையும் பிசாசையும் நாம் ஜெயங்கொள்ள வேண்டும். பூமியிலே நாம் படுகிற சகல பாடுகளையும் குறித்து நாம் வெட்கப்படாமல் அதனிமித்தம் தேவனை மகிமைப் படுத்தவேண்டும் என்று பேதுருவும் தன் நிருபங்களில் கூறுகின்றான் (1பேது. 4:11–16). அப்படி அவரை மகிமைப்படுத்தும் படி வாழ்ந்தால் மற்றவைகளை ஜெயங்கொள்ளும் வல்லமை நமக்குக் கிடைக்கிறது.

## 2. பரலோகம் பிதாவின் வீடு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியை விட்டுத் தாம் கடந்து செல்லும் நேரம் வந்தபோது தம்முடைய சீஷர்களைப் பார்த்து முக்கியமான செய்தியைச் சொல்லிச் சென்றார். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ் தலங்கள் உண்டு ... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன் (யோவா.14:2). பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கிவந்து மனுஷகுமாரனாய் அவதரித்த இயேசு கிறிஸ்து மீண்டும் தாம் பரலோகத் திற்குச் செல்லும்பொழுது பரலோகத்தை பிதாவின் வீடு என்றே குறிப்பிட்டுள் ளார். இந்த அநேக வாசஸ்தலங்கள் என்பது எண்ணிக்கைக்கு உட்பட்டவை கள் அல்ல. எண்ணிவிட முடியாத அளவுக்கு பரலோகத்தில் அவைகள் ஏராளமாய் இருக்கின்றன.

பரலோகத்தைப் பிதாவின் வீடு என்று கூறியவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. பிதாவின் வீடு என்ற வார்த்தையை மேலும் சில இடங்களில் பயன்படுத்தி உள்ளார். என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள். உம்முடைய வீட்டைக் குறித்ததான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது (யோவா. 2:16–17). இதில் பிதாவின் பிரசன்னம் இருக்கும் தேவாலயத்தை பிதாவின் வீடு என்றே இயேசு குறிப்பிடுகிறார்.

வீடு என்பது வெளி உலகத்தின் நெருக்கங்களிலும், அழுத்தங்களி லிருந்தும் நமக்கு இளைப்பாறுதலைக் கொடுக்கும் இடம். அங்கு போட்டிகளும், பொறாமை களும், யார் பெரியவர் என்ற எண்ணங்களும் இல்லாதிருக்கும். ஒருவருடைய நலனில் மற்றவருக்குக் கரிசனை இருக்கும். எல்லாப் பொறுப்புகளும் பகிர்ந்துகொள்ளப்படும். ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையே ஒளிவு மறைவு இல்லாதிருக்கும். பரலோகப் பிதாவின் வீடும் இதுபோலவே மீட்கப்பட்ட தேவபிள்ளைகள் அனைவரும் ஒன்றாய்க் கூடி

பிதாவின் சமுகத்தில் ஆனந்திக்கும் இடமாகவே இருக்கும்.

பிதாவின் வீடு அல்லது தகப்பனின் வீடு என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? பொதுவாக பூமிக்குரிய இல்லம் எப்படி இருக்குமோ அதைப் போன்றே பரலோக இல்லமும் இருக்கும். பூமிக்குரிய வீட்டில் அன்பு, ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுதல், பெற்றோரின் பராமரிப்பு, ஆதரவு, சந்தோஷம், சமாதானம், இளைப்பாறுதல் ஆகியவை இருக்கும். பிள்ளைக ளுக்கு தங்கள் தகப்பனுடைய வீட்டில் பாதுகாப்பும் தேவைகள் சந்திக்கப்படு தலும் நெருக்கமான ஐக்கியமும், அன்பும் பகிர்ந்து கொள்ளுதலும், பந்தி யிருத்தலும் இருப்பது எப்படியோ அப்படியே பரலோகத் திலுள்ள பிதாவின் வீட்டிலும் மேற்கூறிய சகல ஆசீர்வாதங்களும் பரிபூரணமாயிருக்கும்.

அங்கு ஒருவரையொருவர் அந்நியராக எண்ணுவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் எல்லோரும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட பிதாவின் பிள்ளைகளாய் இருக்கிறபடியால் சகோதர அன்பே அங்கே மேலோங்கி நிற்கும். இன மொழி வேறுபாடு அங்கிருப்பது இல்லை. உயர்ந் தவர், தாழ்ந்தவர் என்ற பேதங்கள் அங்கிருப்பதில்லை. பட்சபாதமில்லாத பரஸ்பர அன்பு எல்லோருக்கும் மத்தியில் நிலவுகிறபடியால் அது மெய்யா கவே பிதாவின் வீடுதான். நமது தேவைகள் அங்கு பூரணமாய் சந்திக்கப் படும், தாகங்கள் தீர்க்கப்படும், குறைவு கள் நிறைவாகும் எல்லாவற்றிக்கும் மேலாய் நம் பிதாவாகிய தேவனும், மூத்த சகோதரனுமாகிய கிறிஸ்துவும் எப்போதும் அங்கு நம்முடன் வாசம் செய்திடுவர்.

இயேசு கிறிஸ்து இளைய குமாரனின் உவமையில் தகப்பனுடைய வீட்டை பிதாவின் வீட்டிற்கு உவமையாகவே குறிப்பிட்டிருக்கிறார். இளைய குமாரன் சம்பவத்தில் அவன் மனந்திரும்பி தகப்பன் வீட்டிற்கு வந்ததும் தகப்பனு டைய நிறைவான அன்பையும், அரவணைப்பையும் பெற்றுக் கொண்டான். சந்தோஷமும், மகிழ்ச்சியும், ஆடல் பாடலும், கீத வாத்தியங் களும், இன்னிசையும், களிகூருதலும், விருந்தும், நடனமும் அங்கு நிறைவாய் இருந்தன. தகப்பனுடைய வீட்டிற்கு வந்த குமாரனுக்கு வெகுமதியாக மோதிரமும், உயர்ந்த வஸ்திரமும், பாதரட்சையும் அணிவிக்கப்பட்டது. இப்படித்தான் பிதாவின் வீடாகிய பரலோகை நாம் சென்றடைந்ததும் அங்கும் மகிழ்ச்சியும் களிகூறுதலும், ஆனந்த நடனமும் வெகுமதியும் நிறைவாய் இருக்கும். எனவேதான் துன்பமும் துக்கமும் இல்லாத அந்தப் பிதாவின் வீட்டை நாம் வாஞ்சித்து வாழ்கிறோம்.

இயேசு கிறிஸ்து தான் உயிர்த்தெழுந்த பின்பு முதல் முதலில் மரியாளுக்கு தரிசனமாகி அவளுக்கு உரைத்த நற்செய்தியில், "நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை ; நீ என் சகோதரரிடத்திற்குப் போய் நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல் என்றார் (யோவா. 20:17). உயிர்த்தெழுதலுக்கு முன்பு வரை என் பிதா என்று பல இடங்களிலும் உரைத்த இயேசு கிறிஸ்து, உயிர்த்தெழுந்த பின் என் பிதானிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என சீடர்களையும் இணைத்துக் கூறினார். கிறிஸ்துவின் மரணத்தினாலும், உயிர்த் தெழுதலாலும் அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் பிதா சொந்தமாவது போல் பிதாவின் வீடும் சொந்தமாகிவிடுகிறது.

இயேசு கிறிஸ்து பரலோகத்தைக் குறித்து கூறும்போது என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு எனக் கூறினார். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஆவிக்குரிய கோடிக்கணக்கான மக்களும் அங்கு வாசம்செய்ய ஒரே ஒரு பெரிய வாசஸ்தலத்தை ஆயத்தம் செய்யவில்லை, அநேக வாசஸ்தலங்களை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார். அநேக வாசஸ்தலங்கள் என்ற வார்த்தையை ஆங்கில வேதாகமங்களில் சில ***அநேக அறைகள்*** (many Rooms), ***அநேக வீடுகள்*** (many homes) ***அநேக இருப்பிடங்கள்*** (many dwellings), ***அநேக வாசஸ்தலங்கள்*** (many dwelling places) என பல வார்த்தைகளால் மொழி பெயர்த்துள்ளன. இதனால் பரலோகம் என்பது பலவிதமான வாசஸ்தலங்களைக் கொண்ட ஒரு இடம் என்பதை நாம் திட்டமாக அறியவேண்டும்.

கானானைக் குறித்து தேவன் வாக்குப்பண்ணும்பொழுது நீ கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும், நீ நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளையும், நீ வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும், நீ நடாத திராட்சைத் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும் தேவன் வாக்குப் பண்ணினார் (உபா. 6:10–11). அதைப் போலவே கானான் ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாய் இருந்தது. பரலோகமும் அதுபோலவே தேவன் கூறிய அநேக வாசஸ்தலங்கள் நிரம்பிய ஆசீர்வதிக்கப்பட ஒரு தேசமாகமே இருக்கும்.

பரலோகத்தில் நாம் பிரவேசித்ததும் அந்நியரைப்போன்ற உணர்வு நமக்கு அங்கு ஏற்படுவதில்லை. ஏனெனில் பூமியில் நாம் சேவித்த பரம பிதாவே பரலோகிலும் நமக்குப் பிதாவாக இருப்பார். பூமியில் நம்மை மீட்ட இரட்சகர் இயேசுதான் அங்கும் நமக்கு ஆண்டவராய் இருப்பார். பூமியில் நம்மை வழி

நடத்திய பரிசுத்த ஆவியானவரே அங்கும் பரலோகத்தை நிரப்பியிருப்பார். ஆகவே பரலோகம் என்பது நம்மை ஏற்றுக்கொள்ளும்படி ஆயத்தம் பண்ணப்பட்ட நமது சொந்த ஸ்தலமாகவே இருக்கும். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ண பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்து கொள்வேன் (யோவா. 14:3) என ஆண்டவர் கூறியதுபோலவே நம்மை ஏற்றுக்கொண்டு அங்கே அவரோடே வைத்துக்கொள்வார்.

இரத்தசாட்சியாய் மரித்த ஸ்தேவான் தன் ஆவியை பிதாவினிடம் ஒப்புக் கொடுக்கும் பொழுது இயேசு கிறிஸ்து எழுந்து அவனை வரவேற்றதாக நாம் வேதத்தில் காண்கிறோம் (அப். 7:55). மாத்திரமல்ல, பரலோகத்திலே அவரவர் செய்த கிரியைகளுக்குத்தக்க பலன்கள் பிதாவினால் கொடுக் கப்படுகிறபடியால் பூமியிலே அவருக்காக செய்த பிரயாசத்தின் பலனை நாம் அங்கு பெற்றுக் கொள்ளுவோம். ஆகவே பிதாவின் வீட்டில் வரவேற் போடுகூட வெகுமதிகளும் நமக்காய் காத்திருக்கிறது. என்பது இந்த பூமியின் பாடுகளை சகிக்க நமக்கு பெலனளிக்கிறது. பிதாவின் முதற்பேறானவராம் இயேசு கிறிஸ்து எந்த ஸ்தலத்தில் வாசம் செய்கிறாரோ அதே ஸ்தலத்தில் பிதாவின் பிள்ளைகளாம் நாமும் வாசம்பண்ண தேவன் அனுக்கிரகம் செய்திருக்கிறடிபயால் அங்கு சகோதர அன்பே மேலோங்கி நிற்கும். அது நமது பிதாவின் வீடு, நமது மூத்த சகோதரனாம் இயேசுவின் வீடு. தேவன் அங்கு நம்மோடு நித்திய நித்தியமாய் வாசம் செய்வார். எனவே நாம் வாழும் பூமிக்குரிய வீட்டை விட மேலான பாக்கியமுள்ள வீடே நம் பரலோகப் பிதாவின் வீடு ஆகும்.

## 3. பரலோகம் – புதிய எருசலேம்

பரலோகத்தின் மற்றொரு சிறப்பு பகுதி புதிய எருசலேமாகும். இயேசு கிறிஸ்து தமது ஆயிர வருட அரசாட்சிக்குப் பின் நியாயத்தீர்ப்பை முடித்ததும் தம் மணவாட்டி சபைக்காக சிறப்பாகக் கட்டிவைத்திருந்த இடமே புதிய எருசலேமாகும். இதை யோவான் தனது தரிசனத்தில் கண்டு வியந்துபோகும் அளவிற்கு அது அத்தனை எழில் நிறைந்ததாக இருந்தது. புதிய வானமும் புதிய பூமியும் படைக்கப்பட்ட பின் புதிய பூமிக்கு மேலே அந்தரத்தில் கட்டப்பட்ட மாளிகையே புதிய எருசலேமாகும்.

"யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத் தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன் ; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்

பட்டிருந்தது" (வெளி. 21:2). புதிய எருசலேம் என்பது நாம் நினைத்துப் பார்க்கிறபடி பெரிய இடமாகவோ அல்லது விருந்தினர் மாளிகையாகவோ அல்லது ஒளிவிளக்குகள் நிறைந்த ஆச்சரியமான இடமாகவோ இல்லை. அதன் அழகையும் அதன் அளவையும் நம்மால் தீர்மானிக்க முடியாது. வேதத்தில் பல இடங்களிலும் தேவனது பிள்ளை களுக்கு தேவன் ஆயத்தம் செய்த ஸ்தலமான புதிய எருசலேமைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அனைவருமே இந்தப் புதிய எருசலேமின் மேல் வாஞ்சை கொண்டு இதற்காக காத்திருந்ததாக வேதம் கூறுகின்றது. புதிய எருசலேம் என்பது என்ன ? இதைக் குறித்து நாம் வேதத்தின் மூலம் விரிவாக அறிந்துகொள்ளலாம்.

**1. புதிய எருசலேம் பரிசுத்தவான்களின் வாஞ்சை:–** எருசலேம் என்றும், சீயோன் என்றும் அழைக்கப்பட்ட தலைநகர் மேல் பழைய ஏற்பாட்டு மக்கள் வாஞ்சையும் தாகமும் கொண்டிருந்தனர். ஏனெனில் அங்குதான் தேவனு டைய ஆலயம் கட்டப்பட்டிருந்தது. அங்கு அரசனாகிய தாவீது வாசம் செய்தான், மலைகளால் சூழப்பட்டு மலைகளின் மேல் வீற்றிருந்த இந்தப் பரிசுத்த நகரமே பரிசுத்தவான்களின் மனமகிழ்ச்சியின் நகரமாய் இருந்தது. உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள் மேல் வாஞ்சைவைத்து அதின் மண்ணுக்கு பரிதபிக்கிறார்கள் (சங். 102:14) என்று தாவீதும் பரிசுத்தவான் களின் இந்த வாஞ்சையை தெரிவிக்கிறான். இஸ்ரவேலர் பூலோக எருச லேமை நேசித்து அதை விரும்பினது போலவே ஆவிக்குரிய இஸ்ரவேல ரான தேவனது பிள்ளைகள் அனைவரும் பரம எருசலேமை வாஞ்சித்து விரும்புகின்றனர். அந்தப் பரம எருசலேமே இந்தப் புதிய எருசலேமாகும்.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமைக் குறித்து வேதம் இப்படிக் கூறுகின்றது, "விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போல சஞ்சரித்து அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும், யாக்கோப்போடும் கூடாரங்களிலே குடியி ருந்தான்; ஏனெனில், தேவன்தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான் (எபி. 11:10–11). இப்படி அறிக்கையிடு கிறவர்கள் சுய தேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள் (எபி. 11:14). மேற் கூறிய வசனங்கள் மூலம் ஆபிரகாமும், பரிசுத்தவான்களும் இந்த பூமிக்குரிய நகரத்தின்மேல் வாஞ்சைகொள்ளாமல் பரலோக நகரமா கிய புதிய எருசலேமின் மேல் வாஞ்சைகொண்டிருந்ததை நாம் அறிய முடிகிறது.

**2. புதிய எருசலேம் தேவன் கட்டும் நகரம் :–** பூமியிலுள்ள எல்லா

நகரங்களும் மனிதனால் அஸ்திபாரமிடப்பட்டு கட்டப்பட்டவைகள். ஆனால் பரம எருசலேமையோ தேவனே அஸ்திபாரமிட்டு தேவனே அதைக் கட்டுகிறார் என்று வேதம் கூறுகின்றது (எபி. 11:10). அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே (எபி. 11:16). தன்னுடைய மணவாட்டியாம் சபைக்காக பரம தேவன் அழகுறத் திட்டமிட்டு மனிதர்களுடைய கற்பனைக் கும், புத்திக்கும் எட்டாதவிதத்தில் மகிமையுள்ள ஒரு நகரமாய் தேவனே புதிய எருசலேமை ஆயத்தம் செய்கிறார். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ண போகிறேன்என்று கூறினார் (யோவா. 14:3). தேவனுடைய நகரமாகிய பரம எருசலேனிடத்திற்கும்..... வந்து சேர்ந்தீர்கள் (எபி. 12:22) ஆகிய வசனங்கள் இந்த நகரம் மனிதனால் உண்டாக்கப்பட்டதல்ல, தூதர்களால் உண்டாக்கப் பட்டதல்ல தேவனே அதைக் கட்டி உண்டாக்குகிறார் என்பதைத் தெரிவிக்கிறது.

**3. புதிய எருசலேம் நிலையான நகரம் :–** பூமியிலுள்ள நகரங்கள் அனைத் துமே நிலையற்றவை, அழிந்துவிடக்கூடியவை. நோவாவின் காலத்தில் உண்டான ஜலப்பிரளயத்தின் போது முழு உலகிலுமுள்ள அனைத்து நகரங்களும் தேவனால் அழிக்கப்பட்டன. தேவனுக்கு விரோதமாய் பாவஞ் செய்த சோதோம்கொமோரா பட்டணங்கள் அக்கினியால் அழிக்கப்பட்டன. இன்றைக்கு நாம் காண்கின்ற வானத்தை எட்டும் கட்டடங்களோடுகூடிய மகிமைபொருந்திய பட்டணங்களும், நகரங்களும் கூட ஒருநாள் தேவனு டைய அக்கினியால் அழிக்கப்பட ஆயத்தமாய் இருக்கின்றன. ஆனால் தேவனுடைய நகரமோ அழியக்கூடியதல்ல, அது என்றென்றைக்கும் நிலை யானது, நித்தியமானது. நிலையான நகரம் நமக்கு இங்கில்லை வரப்போகிற தையே நாம் நாடித்தேடுகிறோம் (எபி. 13:14). அசை வில்லாத இராஜ்யத்தை பெறுகிறவர்களாகிய நாம்... கிருபையை பற்றிக் கொள்ளக் கடவோம் (எபி.12:28).

**4. புதிய எருசலேம் கிறிஸ்துவின் நகரம் :–** இயேசு கிறிஸ்து இந்தப் புவி வாழ்வை முடித்து பரலோகத்திற்குச் செல்வதற்கு முன்பு தன்னுடைய சீஷர் களைப் பார்த்து ***நான் இருக்கிற இடத்திலே*** நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துகொள்ளுவேன் என்று கூறினார் (யோவா.14:3). அவரை உன்னதங்களில் தன்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து... அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபே.1:21–23). கிறிஸ்து இந்த பூமியில் எப்படி சரீரத்தோடு வாழ்ந்தாரோ அதைப்போன்று மகிமையடைந்த சரீரத்தோடு பரலோகத்திற்கு சென்றிருக்கிறார். அவர் சரீரத்தில் வாசம்பண்ணுவதற்கு பிதா ஒரு ஸ்தலத்தை அவருக்கு எப்படி ஆயத்தம் செய்தாரோ அதைப் போலவே

நமக்கும் அங்கு தங்கும் இடத்தை ஆயத்தம் செய்திருக்கிறார். எனவே புதிய எருசலேமானது கிறிஸ்துவின் நகரமாயிருக்கிறது. ஏனெனில் இயேசு கிறிஸ்துவே அங்கு எல்லா நாமத்திற்கும் மேலாய் உயர்ந்திருக்கிறார்.

**5. புதிய எருசலேம் சொந்த நகரம் : –** இந்த பூமியிலே மனிதர்கள் கொண்டு வந்தது எதுவுமில்லை, கொண்டு செல்வதும் எதுவுமில்லை. மனிதர்கள் எத்தனை கோடி ஆஸ்திகளை சம்பாதித்தாலும் பூமியை விட்டுக்கடந்து செல்லும்போது எல்லாவற்றையும் பூமியில் விட்டு விட்டுத்தான் கடந்து செல்ல வேண்டும். எனவே பூமியில் மனிதர்கள் தமக்கென சொந்தம் கொண்டாடுவதற்கு நிலையான சொத்து எதுவுமில்லை. ஒருவேளை நமக்கு சொந்தமாய் கொள்வதற்கு இப்புவி வாழ்வில் எந்த ஒரு ஆஸ்தியும் இல்லாதிருக்கலாம். ஆனால் தேவனானவர் ஒரு சொந்த நகரத்தை நமக்கென ஆயத்தம் செய்திருக்கிறார். அது நமது சொந்த நகரம். அதை தேவன் நமக்கென்று நித்திய சுதந்தரமாய் கொடுத்திருக்கிறார். நம்மை விட்டு அதைப் பறித்துக் கொள்வதில்லை, அந்த நகரைவிட்டு நாம் வேறெங்கும் கடந்து செல்வதுமில்லை. ***"சுய தேசத்தை நாடிப் போகிறோம்"*** (எபி. 11:14) என பரிசுத்தவான்கள் கெம்பீரமாய் முழக்கமிட்டு இந்த பூமியைவிட்டுக் கடந்து சென்றார்கள். அந்த சுய தேசமே நமது சொந்த தேசமாகும்.

**6. புதிய எருசலேம் அன்பின் நகரம் :–** புதிய எருசலேம் என்பது தேவன் நம்மேல் வைத்த அன்பினை முழுமையாய் வெளிப்படுத்துவதற்கு ஆயத்தம் செய்த ஒரு ஸ்தலமாகும். வானத்தையும் பூமியையும், நட்சத்திரங்களையும், பிரமாண்டமான அண்ட சராசரங்களையும் மனிதன் காணக்கூடாத வான் வெளிகளையும் நேர்த்தியாய் உருவாக்கின தேவன் தான் நேசிக்கிற மனுக்குலத்திற்காக உண்டு பண்ணவிருக்கும் அன்பின் நகரம் எத்தனை மகிமையுள்ளதாயிருக்கும். அங்கே பிதாவின் அன்பையும், கிறிஸ்துவின் அன்பையும் நாம் முழுமையாய் அறிந்து கொள்வோம். உலகம் உண்டானது முதற்கொண்டு பூமியில் வாழ்ந்த பரிசுத்தவான்களை நாம் அங்கு கண்டு அவர்களோடு ஐக்கியம் கொள்வோம், அன்பினைப் பகிர்ந்துகொள்வோம். அங்கு கசப்பிற்கும், வெறுப்பிற்கும், போட்டி பொறாமைக்கும் இடமில்லாத படியால் அது ஒரு தெய்வீக அன்பின் நகரமாகவே இருக்கும். அந்த நகரில் தேவன் மனிதர்களுக்கு மத்தியில் வாசம் செய்கிறார். பிதாவையும் கிறிஸ்துவையும் இங்கு நாம் முகமுகமாய் தரிசிக்கிறபடியால் பரம எருசலேமானது அன்பில் பூரணமுள்ள ஒரு நகரமாகவே காணப்படும்.

தேவனையும் அவரது பரிசுத்தம், வல்லமை, மகிமை, அன்பு, ஞானம், கிருபை ஆகியவற்றையும் பரலோகில் சென்ற பின்புதான் நாம் பூரணமாய் விளங்கிக் கொள்ளமுடியும். கிறிஸ்துவின் கல்வாரி தியாகத்தின் மேன்மை எவ்வளவு பெரியது என்பதை பரலோகம் சென்ற பின்பே நாம் அறிந்துகொள்ளமுடியும். அப்படி தேவனை நாம் பூரணமாய் அறிகிற நாளில்தான் தேவனது அன்பையும் நாம் பூரணமாய் விளங்கிக்கொள்ளுவோம். அவரது அன்பின் ஆழம், நீளம், உயரத்தை சகல பரிசுத்தவான்களோடும் நாம் விளங்கிக் கொள்ளும் நாளிலே நம் இருதயம் கூட அவர் மேலுள்ள அன்பினாலும், மற்ற பரிசுத்தவான்கள் மேலுள்ள அன்பினாலும் பொங்கிவழியும். ஒருவரை யொருவர் காணும்பொழுது அன்பு மகிழ்ச்சி என்னும் உணர்வுகள்தான் பரலோகில் மேலோங்கி நிற்கும். ஆகவே புதிய எருசலேமானது அன்பு பெருக்கெடுத்து ஓடும் ஒரு அன்பின் நகரமாகவே காணப்படும்.

**7. புதிய எருசலேம் தலை நகரம் :–** ஆயிரம் வருஷ அரசாட்சியில் எருசலேம் நகரத்தில் கிறிஸ்து இராஜாவாய் வீற்றிருப்பார். முழு உலகத்திற்கும் தலைநகராய் எருசலேம் விளங்கும். பழைய வானமும், பூமியும் கடந்துபோன பின்பு புதிய வானமும் புதிய பூமியும் உண்டாயிருக்கும் காலத்தில் இந்தப் பரம எருசலேமே இந்த புதிய வானத்திற்கும் புதிய பூமிக்கும் தலைநகராய் விளங்கும். அது ***மகா இராஜாவின் நரகம்*** என்று வேதம் இதைத்தான் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறது (சங். 48:2). தேவன் அங்கு இராஜாவாய் வீற்றிருப்பார், கிறிஸ்து அங்கு அரசாளுவார், தேவனது சிங்காசனம் இந்தத் தலைநகரில் ஸ்தாபிக்கப்படும். கர்த்தர் நீதியாய் தம் ஜனங்களுக்கு நியாயஞ்செய்வார்.

**8. புதிய எருசலேம் மகிழ்ச்சியின் நகரம் :–** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் மக்கள் எருசலேம் நகருக்குள் பிரவேசிக்கும் பொழுதே துதியோடும், ஸ்தோத்திரத்தோடும் பாடல்களோடும் பிரவேசிப்பார்கள். அங்கே பண்டிகையின் கொண்டாட்டம் இருக்கும், மகிழ்ச்சியும் களிகூருதலும் அங்கு நிறைவாய் வழிந் தோடும். அதைப் போலவே புதிய எருசலேமானது தேவனது பிள்ளைகளுக்கு ஒரு மகிழ்ச்சியின் நகரமாகவே இருக்கும். பூமியிலுள்ள வருத்தங்கள், துன்பங்கள், பாடுகள், வேதனைகள், வியாதிகள் சகலமும் மறக்கப்பட்டு தேவனது பிரசன்னத்திலும் சமுகத்திலுமுள்ள பூரண மகிழ்ச்சி அங்கிருக்கிறபடியால் அது தேவப் பிள்ளைகளுக்கு ஒரு மகிழ்ச்சியின் நகரமாகவே இருக்கும். இந்த மகிழ்ச் சிக்காகவே பூமியில் பாடுகளை அனுபவித்தோம் என நினைத்து பரிசுத்த

வான்களும், நித்திய நித்தியமாய் அந்த நகரத்திலே களிகூருவார்கள்.

இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவும் கடவர்கள்..... நடனத்தோடே துதித்து அவரைக் கீர்த்தனம் பண்ணக்கடவர்கள் (சங். 149:2–3). மீட்கப்பட்ட தேவனுடைய குமாரரும் குமாரத்திகளும் தங்களது இரட்சகரிலும், அவர் தந்த இரட்சிப்பிலும் களிகூரும் மகிழ்ச்சியின் நகரமே புதிய எருசலேமாகும். தேவன் தம் ஜனத்தின் மேல் பிரியம் வைத்து அவர்கள் மத்தியில் வாசம்செய்வார். அவரது ஜனங்கள் அவரைத் துதித்து அவரிலே மகிழ்ந்திருப்பார்கள். இப்படிப்பட்ட மகிழ்ச்சியின் நகரமே தேவன் நமக்காக ஆயத்தம் செய்கிற புதிய எருசலேமாகும்.

**9. புதிய எருசலேம் புதிய நகரம் : –** நாம் இப்பொழுது வாழ்கின்ற நகரங்கள் மனித திட்டத்தால் உருவாக்கப்பட்டு, மனித அறிவினால் கட்டப்பட்டவை. தேவன் உண்டாக்கிய பூமியானாலும் நாம் உண்டாக்கிய கட்டிடமானாலும் ஒருநாள் அழியக்கூடியவை. ஆனால் புதிய எருசலேமோ ஒருநாளும் அழியாமல் நிலைத்திருப்பதாகும். அதன் அழகினை ஒருவரும் இதுவரை கண்டதில்லை. அதன் பிரகாசத்தை பூமியிலுள்ள எந்தக் கட்டிட விஞ்ஞானிகளும் அறிந்ததில்லை. அதன் அஸ்திபாரத்தைக் குறித்த அறிவு எவருக்கும் வெளிப்படுத்தப் படவில்லை. புதிய எருசலேமுக்குள் சென்றவுடன் நாம் காண்கின்ற அனைத்துமே புதியதாகவும், மகிமையுள்ள தாகவுமே இருக்கும். அந்த நகரத்தின் அழகில் கோடியில் ஒரு பங்கினைக் கூட நாம் இந்த பூமியில் கண்டிருக்க முடியாது. அங்கு காண்கின்ற சகலமும் புதுமையானதாக, தேவனால் திட்டம்பண்ணப்பட்டதாக இருப்பதால் அதனை மனித அறிவினல் சிந்திக்கமுடியாது.

அந்தப் புதிய நகரத்தின் சட்ட திட்டங்களும் , வாழ்க்கை நெறிமுறைகளும், அரசாங்கமும் இந்த பூமிக்குரிய வாழ்க்கை முறைகளைவிட முற்றிலும் வேறுபட்டதாய் புதியதாய் இருக்கும். அங்கு தெய்வீக ஆட்சியும், தேவனது நீதியும் வெளிப்படும். மனிதர்கள் இதுவரை கண்டிராத, பெற்றிராத ஆசீர்வாதமும் செழிப்பும் அந்த நகரத்தில் கரைபுரண்டோடும். அது சாபமில்லாத நகரமான படியால் அதன் ஒவ்வொரு எல்லையும் தேவனது ஆசீர்வாதத்தால் நிறைந் திருக்கும். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் சகலமும் புதிதாவது எப்படியோ அதைப்போலவே கிறிஸ்துவோடு வாழும் அந்த நிஜமான பரலோக வாழ்விலும் சகலமும் புதிதாகவே இருக்கும்.

**10. புதிய எருசலேம் பரிசுத்த நகரம் :–** யோவானாகிய நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன் (வெளி. 21:2) என்று யோவான் கூறுகையில் புதிய எருசலேமானது ஒரு பரிசுத்த நகரம் என்றும் கோடிட்டுக் கூறுகின்றான். கரைதிரையில்லாத ஒரு பரிசுத்த மணவாட்டியை உருவாக்குவதற்காக தம் குமாரனையே அனுப்பிக்கொடுத்த தேவன் அந்த மணவாட்டியோடு நித்தியமாய் வாழுவதற்காக உண்டுபண்ணியிருக்கும் பரலோக நகரம் எத்தனை பரிசுத்தமுள்ளதாயிருக்கும்!

அங்கு பாவிகளுக்கும், பாவத்திற்கும் இடமில்லாதபடியால் அது ஒரு பரிசுத்த நகரமாகவே இருக்கும். அங்கு சாத்தானுக்கும் அவனது தீய செயல் களுக்கும் இடமில்லாதபடியால் அந்த நகரம் பரிசுத்தமாக இருக்கும். அங்கு தேவனும் ஆட்டுக்குட்டியானவரும், ஆவியானவரும் வாசம் செய்கிற படியால் அங்கு பரிசுத்தமே நிறைந்திருக்கும். அது பரிசுத்த தேவனுடைய வீடு, பரிசுத்தர் இயேசுவும் பரிசுத்த தூதர்களும், பரிசுத்த மக்களும் வாசம்பண்ணும் இடம். இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது (வெளி. 21:3). தேவனது வாசஸ்தலத்தில் பரிசுத்தமே என்றென்றும் அலங்காரமாய் இருப்பதால் புதிய எருசலேம் ஒரு பரிசுத்த நகரம் என்பதில் ஒரு சந்தேகமுமில்லை.

**11. புதிய எருசலேம் மெய்யான நகரம் : –** பழைய ஏற்பாட்டில் எருசலேம் நகரைக் குறித்துக் கூறப்பட்டுள்ள வார்த்தைகள், வாக்கியங்கள், உருவகங் கள், மொழிகள் ஆகியவைகளே புதிய எருசலேமுக்கும் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஜலப்பிரளயத்தின் போது பழைய பூமி எழுத்தின் படியாய் அழிந்து, புதிய பூமி எழுத்தின்படி உருவானது எப்படியோ அதைப் போலவே புதிய எருசலேமும் எழுத்தின்படியாகவே உருவாக்கப் படுகின்ற ஒரு நகரமாய் இருக்கும்.

புதிய எருசலேம் என்பது ஒரு ஆவிக்குரிய உருவகமே, அது மெய்யான நகரம் அல்ல எனக் கூறுவோரும் உண்டு. ஆனால் புதிய எருசலேமைத் தன் கண்களால் கண்ட ஜீவனுள்ள சாட்சியான அப்போஸ்தலனான யோவான் தன் எழுத்துக் களில் கூறுகின்ற எல்லா வார்த்தைகளையும் ஒருவர் ஆவிக் குரியதாக உருவகப் படுத்தமுடியாதே. அது நிழல் அல்ல, நிஜமான நகரம். ஏனெனில் புதிய எருசலேமின் மதில்கள், அதன் வீதிகள், அஸ்திபாரக் கற்கள், வாசல்கள், அங்குள்ள மலைகள், நதிகள், சிங்காசனம் ஆகிய அனைத்தையும் குறித்து யோவான் எழுத்தின்படியான அளவையே கொடுத்திருக்கிறான். இப்படி புதிய எருசலேமின் துல்லியமாகக் கூறப்பட்டி

ருப்பதால் அது ஒரு உவமை என்று நினைக்கவும் முடியாது, நினைக்கவுங் கூடாது.

பழைய ஏற்பாட்டில் பிரதான ஆசாரியனுடைய மார்ப்பதக்கத்தில் பதிக்கப் பட்டுள்ளப் பன்னிரெண்டு கற்களும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத் திரங்களையும் குறிப்பதாய் இருக்கிறது. புதிய எருசலேமின் அஸ்திபாரத் திற்கும் பன்னிரெண்டு கற்கள்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே பழைய ஏற்பாட்டில் எழுத்தின்படியாய் இந்த கற்கள் பதிக்கப்பட்டது போலவே புதிய எருசலேமிலும் இந்த அஸ்திபாரக் கற்கள் எழுத்தின்படியே இருக்கும்.

யோவான் தன்னுடைய தரிசனத்தில் முதலில் மணவாட்டியின் வீடாகிய எருசலேமைக் கண்டான். அதன் பின்னரே மணவாட்டியின் சபையைக் கண்டான். மாத்திரமல்ல, இயேசு கிறிஸ்துவும் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு என்று திட்டவட்டமாய் கூறிச் சென்றிருக் கிறார். எனவே உன்னதமான அந்த நகரம் நம்முடையத் தேவைகள் அனைத்தையும் சந்திக்ககூடியதாய் நமக்கு மகிழ்ச்சியையும், இளைப்பாறு தலையும் எப்போதும் பிரசன்னமாய் இருக்கும் தேவச் சமுகத்தையும், கொடுக்கக்கூடி யதாய் மெய்யான ஒரு நகரமாகவே இருக்கும். மிகப் பிரமாண்டமாக தேவனால் உருவாக்கப்படுகின்ற அந்த நகரம் ஒளி வீசக்கூடியதாய் கோடான கோடி மக்களைத் தன்னிடத்தில் வரவேற்க காத்துக்கொண்டிருக்கிற புதிய எருசலேம் நகரத்தின் சிறப்பைக் குறித்து சற்று விரிவாக தியானிப்போம்.

**12. புதிய எருசேலம் நகரத்தின் சிறப்புகள் :–** புதிய எருசலேமாகிய அந்தப் பரிசுத்த நகரம் பூமியில் நாம் காண்கின்ற மிகச் சிறந்த நகரங்களிலும் சிறந்ததாய் இருக்கிறது. நாம் வாழும் பூமியிலுள்ள நகரங்களில் ஒரு புறம் செல்வமும் அழகும் நிறைவாயிருந்தாலும் அதன் மறுபுறம் ஏராளமான குறை களையும் வறுமையையும் நாம் காணமுடியும். ஆனால் புதிய எருசலேமோ எவ்விதத்திலும் குறைவற்ற நகரமாய் எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகிறது.

மோட்சத்தின் ஒரு பகுதி புதிய எருசலேம் என்று அழைக்கப்படுகிறது. இது பரலோகைவிட்டு இறங்கி வருகிற நகரம். புதிய பூமிக்கும், பரலோகிற்கும் இடையே வான் வெளியில் அந்தரத்தில் தொங்கும் ஒரு நகரமாகும். இந்தப் புதிய எருசலேமில் நடக்கும் நிகழ்ச்சிகளையும், புதிய எருசலேமின் அழகையும் குறித்து வேதம் தெளிவாகவும், துல்லியமாகவும் அளந்துத் தெரிவித்திருக்கிறது. புதியஎருசலேமைக் குறித்து சுவையாகக் கூறப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சிகளைக் காணும்போது முழு பரலோகமும் என்னே அழகாய் இருக்கும் எனவே நாம் வியப்போம்!

1. தேவனிடத்திலிருந்து பரலோகத்தைவிட்டு இறங்குவது – வெளி. 21:2
2. அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல இருப்பது – 21:2
3. ரத்தினக் கல் வச்சிரக் கல் போன்று பிரகாசம் கொண்டது – 21:11
4. பன்னிரெண்டு வாசல்களைக் கொண்டது – 21:12; எசே. 48:30–34
5. பன்னிரெண்டு வாசல்களிலும் தூதர்களைக் கொண்டது – 21:13
6. பன்னிரெண்டு வாசல்களில் 12 கோத்திரத்தின் பெயர்கொண்டது – 21:13
7. பன்னிரெண்டு அஸ்திபாரக் கற்களைக் கொண்டது – 21:14
8. பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின் பெயர்கள் கொண்டது – 21:14
9. அது சதுரமாகவும் நீளம், அகலம் உயரம் சமமாகவும் உள்ளது – 21:16
10. 12,000 ஸ்தாதி (1500 மைல்) நீள அகல உயரமுடையது – 21:16
11. வாசல்களும் மதில்களும் கொண்டது – 21:16
12. பன்னிரெண்டு வாசல்களும் 12 முத்துக்களால் ஆனாது – 21:21
13. ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாய் இருந்தது – 21:21
14. மதில்கள் வச்சிரக்கற்களால் ஆனது – 21:18
15. நகரம் பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாலானது – 21:18
16. அஸ்திபாரங்கள் 12 ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டது –21:19
17. நகரத்தின் வீதி பளிங்கு போல சுத்தப் பொன்னால் ஆனது – 21:21
18. தேவ மகிமையே அதைப் பிரகாசித்தது – 21:23
19. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்காயிருப்பார் – 21:23
20. வெளிச்சம் கொடுக்க சூரியனும் சந்திரனும் வேண்டுவதில்லை – 21:23
21. தேவனும் ஆட்டுக்குட்டியானவரது சிங்காசனமும் இருக்கும் – 22:1
22. சிங்காசனத்திலிருந்துப் பளிங்குபோன்ற ஜீவநதி புறப்பட்டுவரும் – 22:1
23. நகரத்தின் வீதியிலும் மத்தியிலும் கனிதரும் ஜீவ விருட்சம் இருக்கும் – 22:2
24. அதில் தீட்டும், அருவருப்பும், பொய்யும் நுழைய முடியாதது – 21:27
25. அதில் ஜீவபுஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்களே இருப்பார்கள் – 21:27
26. இரட்சிக்கப்படுகிறவர்கள் அதில் நடப்பார்கள் – 21:24
27. தேவாலயம் அங்கு இல்லை ;ஆட்டுக்குட்டியானவரே அதற்கு ஆலயம் – 21:22
28. பூமியின் ராஜாக்கள் மகிமையும் கனத்தையும் கொண்டுவருவார்கள் – 21:24
29. அங்கே இராக்காலம் இல்லை – 21:25
30. அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதில்லை – 21:25
31. உலகத்தார் மகிமையும் கனத்தையும் அதற்குள் கொண்டுவருவார்கள் – 21:26
32. தேவனாகிய கர்த்தர் பிரகாசிப்பார் – 22:5
33. தேவனும் ஆட்டுகுட்டியானவரும் இருக்கிற சிங்காசனம்அதிலிருக்கும் – 22:3
34. விளக்கும் சூரிய வெளிச்சமும் வேண்டுவதில்லை – 22:5

என பல சிறப்புகளை யோவான் தரிசித்ததாகக் கூறியிருக்கிறான். இந்தப் புதிய எருசலேம் ஆண்டவருடைய இரண்டாம் வருகைக்குபின் ஆயிரம் வருட அரசாட்சிக்கு பிறகு நியாயத்தீர்ப்பு முடிந்தபின் படைக்கப்படும் உலகமாகும். இது மணவாட்டியான சபைக்காக ஆயத்தம்பண்ணப்படும் இடம் எனக் கூறப் பட்டுள்ளது. பூமியில் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும் சபையாரில் யார்யாரெல்லாம் இதில் பங்கேற்பார்கள் என்பதை தேவன் ஒருவரே அறிவார்.

***1. புதிய எருசலேமில் தேவாலயம் இல்லை :–*** யோவான் தன்னுடைய தரிசனத்தில் புதிய எருசலேமைத் தரிசிக்கும்போது அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை ; சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டி யானவருமே அதற்கு ஆலயம் என்று கூறுகின்றான்(வெளி. 21:22). ஆலயம் இல்லாத ஒரு நகரத்தைக் கிறிஸ்தவர்கள் எவரும் விரும்புகிறதில்லை. நாம் எதிர் பார்த்திருக்கும் பரம எருசலேமில் தேவாலயமோ, ஜெபக்கூடமோ, தொழுகைக்கு கட்டிடமோ, ஜெப வீடோ இருப்பதில்லை, கர்த்தரே அங்கு ஆலயமாயிருக்கிறார். தொழுது கொள்வ தற்கென நாம் தனியிடம் தேடிச் செல்லவேண்டியதில்லை. ஏனெனில் பரலோகத்தின் எல்லா இடங்களிலும் தேவன் பிரசன்னராகியிருப்பதால் மக்கள் எங்கும் அவரைத் தொழுது கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றிருப்பர்.

அங்கு தேவனது சமுகத்தையும் அவரது திருமுகத்தையும் திரைக்கு முன்பாக உட்கார்ந்தோ, அல்லது விசுவாசத்தாலோ நாம் தரிசிப்பதில்லை. முகமுகமாய் நாம் கர்த்தரை தரிசிக்கும் பாக்கியத்தைப் பரலோக வீட்டில் பெற்றிருப்போம். எங்கு திரும்பினாலும் அங்கு பிரகாசிப்பது கர்த்தரது ஷெக்கினா மகிமையும் அவரது அன்பின் திருமுகமுமே. இதோ மனுஷர் மத்தியில் தேவனது வாசஸ்தலம் இருக்கிறது என்ற வாக்குத்தத்தம் நிறைவேறுதல் அங்குதான் நடக்கிறது. நம்மை தேவனண்டை நடத்துவதற்கு ஊழியர்களோ, ஆசாரியர்களோ, பரிசுத்தவான்களின் உதவியோ அங்கு தேவையில்லை. தேவனைத் தொழுது கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட இடத்திலே கூடவேண்டும் என்ற நிர்ப்பந்தமுமில்லை. ஏனெனில் முழு நகரமுமே தேவனுடைய பரிசுத்த ஆலயமாய் இருக்கிறது. மாத்திரமல்ல, நாமும் தேவனுடைய ஆலயமாயிருப் போம், தேவன் நமக்குள்ளும் நம்மை சுற்றிலும் வாசமாயிருப்பார்.

***2. புதிய எருசலேமில் சூரியன் சந்திரன் இல்லை :–*** நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்க சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு, இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதன் வெளிச்சத்திலே நடப்பார்கள் (வெளி. 21:22–23). சூரியன் சந்திரனின் வெளிச்சம் சிருஷ்டிக் கப்பட்ட வெளிச்சமே, ஆனால் பரலோக வீட்டிலோ சிருஷ்டிகரே நமக்கு

வெளிச்சமாய் இருக்கிறார். அவரது முகத்திலும் அவரது சிங்காசனத்திலும் இருந்து பிரகாசமாய், பிரவாகிக்கிற ஒளி வெள்ளம் பரலோகம் முழுவதையும் ஒளிவீசச் செய்கின்றது.

பூமிக்கு ஒளி கொடுக்கிற சூரிய சந்திரனிலுமிருந்து சகல ஜீவராசிகளும் தங்களுக்கு ஜீவனைப் பெற்றுக்கொள்கிறது. அதுபோல பரலோகத்திலுள்ள தேவனது ஒளி மனிதருக்கு பிரகாசம் கொடுப்பது மாத்திரமல்ல, மனிதர் களுக்கு வாழ்வு கொடுக்கிற ஜீவ ஒளியாகவும் இருக்கிறது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது. உலகத்திலே எந்த மனுஷனையும் பிரகா சிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. (யோவா. 1:1,9). கர்த்தரது ஜீவனே ஒளி; கர்த்தரது ஒளியே ஜீவன். எனவே பரலோகத்திலுள்ள ஒளி மனிதர்களை வாழவைக்கிற ஜீவ ஒளியாய் இருக்கிறது. எந்த இருளும் அந்த ஒளியைப் பற்றிக்கொள்ளமுடியாது. மேலும் சூரியனால் சந்திரனால் உண்டாகிற ஈர்ப்பு விசைகள் அங்கு இருப்பதில்லை. எல்லோருடைய கவனமும் விருப்பமும் கர்த்தரை நோக்கியே ஈர்க்கப்பட்டிருக்கும். கர்த்தரை சுற்றியே எல்லோருடைய வாழ்வும் ஈர்க்கப்பட்டு கர்த்தரே எல்லோருடைய வாஞ்சைகளின் மையமாக இருப்பார். தேவனாலும் அவரது குமாரனாகிய கிறிஸ்துவாலும் சகலமும் ஆளப்பட்டிருக்கும்.

இவ்விதமான தேவனுடைய பிரகாசமுள்ள ஒளியை பூமியில் தரிசித்த ஒருசிலர் அதற்கு சாட்சியிடுகின்றனர். ***1. மோசே–*** சீனாயின் கொடுமுடியில் தேவனோடு நாற்பது நாட்கள் வாசம்செய்து கீழே இறங்கிவந்தபோது இஸ்ரவேலின் மூப்பர்கள் அவனது முகத்திலுள்ள பிரகாசத்தை காண முடி யாதபடியால் மோசே தன் முகத்தை முக்காட்டினால் மூடிக்கொள்ள வேண்டி யதாய் இருந்தது (யாக். 34:28–35). ***2. இயேசு கிறிஸ்து*** –மறுரூபமலையிலே இயேசு தம் சீஷர்களுக்கு முன்பதாக மறுரூபமானபோது அவரது வஸ்தி ரமும் முகமும் அந்த மகிமையின் ஒளியால் பிரகாசித்தது (மத். 17:1–2). ***3.பவுல்–*** தேவனுடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்தும்படி நிருபத்தை வாங்கிக்கொண்டு வேகமாய் சென்றபோது தேவனது ஒளியின் பிரசன்னத் தினால் தாக்கப்பட்டான். அவனை சந்தித்த ஒளி அவனது வாழ்வை மாற்றியது. அவனது மாம்சக் கண்களை குருடாக்கியது (அப். 9:2–9). ஆனால் அவனது ஆவியின் கண்களோ திறக்கப்பட்டது. எனவே அவன் தன் அழைப்பை உணர்ந்தவனாய் கிறிஸ்துவின் அடிமையாய் மாறினான். அவரது மகிமையின் ஒளி மனிதனை மாற்றிவிடக்கூடிதாய் இருக்கும்.

***3. புதிய எருசலேமில் இராக்காலம் இல்லை :–*** நாம் வாழும் இந்த பூமியிலே நமக்கு வெளிச்சம் கொடுப்பதற்கும் காலங்களையும் நாட்களையும்

அறிவதற்கும் தேவன் சூரியன் சந்திரன் என்ற கோள்களை உண்டுபண்ணி வைத்திருக்கிறார். ஆனால் பரலோகத்திலோ தேவனுடைய மகிமையே பரலோகம் முழுவதையும் பிரகாசிப்பிக்கிறபடியால் அங்கு சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் போன்ற வற்றால் உண்டாகும் வெளிச்சத்திற்கு அவசியமில் லாமல் போகிறது. சூரியன் அஸ்தமித்தலும், உதயமாகுதலும் அங்கு இல்லா தபடியால் பரலோகத்தில் இராக்காலம் இல்லை. கர்த்தரது பிரசன்னம் நித்திய நித்தியமாய் யுகயுகமாய் பரலோக வீட்டை என்றென்றும் நிறைந்தி ருக்கும். பகலில் உண்டாகும் வேலையின் களைப்பின் நிமித்தம் மனிதன் இளைப்பாறும்படியே தேவன் இரவை நியமித்திருக்கிறார். ஆனால் பரலோ கத்திலோ தேவனது சேவையை நாம் யுகயுகமாய் செய்தாலும் அங்கு நாம் களைப்படைவதில்லை. ஆகவே நாம் இளைப்பாறுவதற்கு அங்கு இராக்கா லம் தேவையில்லை. பூமியை இருளாக்கின சாத்தானும் அவனது சேனையும் அங்கில்லாதபடியால் இருளின் அதிகாரத் திற்கும் அங்கு இடமில்லை.

***4. புதிய எருசலேமின் வாசல்கள் அடைக்கப்படுவதில்லை:–*** பரலோக வீட்டிலே சூரியன் சந்திரன் இல்லாதபடியால் அங்கு இராக்காலம் இல்லை. மட்டுமல்ல, இராக்காலத்தின் நிமித்தம் உண்டாகும் பயமும் அங்கில்லை. எனவே அந்நகரத்தின் பன்னிரெண்டு வாசல்களும் ஒரு போதும் அடைக்கப்படுவதில்லை. அங்கு ஒவ்வொரு வாசலுக்கும் ஒவ்வொரு தூதன் காவலாக நிற்கிறபடியால் எதைக் குறித்தும் எவரைக் குறித்த பயமும் அங்கு இருப்பதில்லை. தேவனைத் தொழுது கொள்ள மக்கள் எப்பொழுதும் உள்ளே பிரவேசிக்கலாம். தேவனது சேவைக்காக எப்பொழுதும் வெளியே செல்ல லாம். நம்முடைய பூமிக்குரிய வாழ்வில் தேவனைத் தொழுது கொள்ளுவ தற்குத் தடையாக எத்தனையோ வாசல்களை பிசாசானவன் அடைத்து வைத்திருக்கிறான். ஆனால் பரலோக வீட்டிலோ பூட்டப்படாத வாசல்கள் தேவனது தொழுகைக்கு என எப்பொழுதும் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது.

***5. புதிய எருசலேமில் தீட்டும் அருவருப்பும் இல்லை :–*** இந்த பூமியிலே நாம் உபயோகப்படுத்துகின்ற ஒவ்வொரு பொருளையும் நமது வீட்டையும், இடத்தையும், சரீரத்தையும் அனுதினமும் நாம் சுத்திகரிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனால் பரலோகிலோ தீட்டையும் அருவருப் பையும் நடப்பிக்கிற எதுவும் பிரவேசிக்கிறதில்லை. மாத்திரமல்ல, ஆவிக்குரிய சுத்திகரிப்பும் அங்கு தேவைப்படுகிறதில்லை. பிசாசின் கிரியைகள் அனைத்தும் அங்கு முற்றிலுமாய் சங்கரிக்கப்பட்டிருக்கிறது. எனவே நாம் பூமியில் நம்மை சுத்திகரிப்பதுபோல மீண்டும் மீண்டும் நமது ஆவி ஆத்துமா சரீரத்தை சுத்திகரிப்பதற்கு அங்கு அவசியமில்லை. நமது சரீரமும் ஆவி

ஆத்துமாவும் தேவனால் அங்கு முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது. பரலோகத்திலுள்ள பொருட்கள் அனைத்துமே தேவனது கைகளால் உருவாக் கப்பட்டபடியால் அங்கு தூசியும், அசுத்தமும் சென்றடைய வாய்ப்பில்லை. துன்மார்க்கரும் அக்கிரமக்காரரும் பரலோகத்தில் இல்லை. எனவே அங்கு வாழும் மக்களுடைய வாழ்விலும் தீட்டும் அருவருப்பும் இருப்பதில்லை.

***6. புதிய எருசலேமில் பொய் இல்லை :–*** பரலோகம் என்பது சத்தியமுள்ள தேவன் வாசம் பண்ணுகிற ஸ்தலம். இரட்சிக்கப்பட்ட சத்தியவான்கள் அவரோடு கூட நித்தியமாய் வாழுகின்ற கூடாரம். தேவன் ஸ்தாபித்தி ருக்கிற சகலமுமே அழியாத மெய்பொருளால் உண்டானது. மாத்திரமல்ல, பிதாவாகிய தேவனும் குமாரனாகிய கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் சத்தியமுடையவர்களானபடியால் சத்தியத்தை தவிர வேறு எதையும் அங்கே அவர்கள் பேசுவதில்லை. அங்கு நாம் அடைகின்ற மகிழ்ச்சி மெய்யானது. அன்பும் ஐக்கியமும் மெய்யானது மாய்மாலமில்லாதது. மிகைப் படுத்துதலும் திரித்துக் கூறுதலும் பரலோகத்தில் இல்லை. நானே சத்தியம் என்று கூறியவர் சிருஷ்டித்த ஒரு நகரமும் ஒரு சத்திய நகரமாய் இருக்குமே! பூமியிலே இயேசுவோடு நடந்த சீஷர்கள் அவரிடத்தில் கண்ட கேட்ட அனைத்தும் சத்தியமான வார்த்தைகள், சத்திய செய்கைகள். அவர் சொன்ன எதுவும் பொய்யாயிருந்ததில்லை. அப்படியே அதற்குள் வாழ்கிற வர்களும் பொய் பேசுவதுமில்லை. எனவே அவர் ஆயத்தம் செய்த ஸ்தலத்திலும் பொய் வாசமாயிருப்பதில்லை.

***7. புதிய எருசலேமில் மரணம் இல்லை :–*** நாம் வாழும் இந்த பூமியிலே துக்கங் களும் அலறுதலும், வருத்தமும் ஒவ்வொரு நாளும் நம்மை வாதிக் கின்றன. மனிதர்களால் தாங்கிக்கொள்ளமுடியாத மரணம் ஒவ்வொரு குடும்பத்தையும் சந்திக்கிறது. ஆனால் பரலோகத்திலோ இந்தப் பாடுகளும் சஞ்சலங்களும் முற்றிலுமாய் ஒழிந்துபோய்விடும். ஜீவனைக் கொடுக்கக் கூடிய ஜீவ நதியும், ஜீவ விருட்சமும் அங்கு இருப்பதால் அதைப் பருகுகிற நமக்கு மரணம் என்பதே இல்லாமல் போகிறது. பரலோக வாழ்வு காகால மாய் வாழ்கின்ற நித்திய வாழ்வாய் இருக்கிறபடியால் அங்கு மரணம் என்பது இல்லை. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரண முமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை..... ஒழிந்து போனது என விளம்பினது (வெளி. 21:4). எனவே பரலோகத்திலோ புதிய எருசலேமிலோ சபிக்கப்பட்ட மரணம் ஒருவரையும் ஆட்கொள்ள போவதில்லை.

***8. புதிய எருசலேம் ஜீவனுள்ள நகரம் :–*** தேவன் மனிதனுக்குக் கொடுத்த

விலையேறப்பெற்ற ஈவுகளில் ஜீவனும் ஒன்று. இந்த விலையேறப்பெற்ற ஜீவன் அழிந்துபோகக்கூடிய ஒன்றல்ல, அது அழியாத நித்திய ஜீவனாகும். இயேசு கிறிஸ்துவும் தம்முடைய உவமைகளில் இந்த ஜீவனைக் குறித்து அதிகமாய் கூறியிருக்கிறார். ஒளியான ஜீவன் (யோவா. 1:6:53–54), நித்திய ஜீவன் (யோவா. 3:16), ஜீவ ஊற்று (யோவா. 4:14), ஜீவ இரத்தம், ஜீவ அப்பம் (யோவா. 6:48), ஜீவ வசனம் (6:63), உயிர்த்தெழும் ஜீவன் (யோவா. 11:25) என பல்வேறு இடங்களில் தமது ஜீவனைக் குறித்த செய்திகளை நமக்கு முக்கியத்துவப்படுத்தியிருக்கிறார். அவ்விதமே பரம எருசலேமில் நமக்குக் கிடைக்கும் வாழ்வும் நித்திய வாழ்வு ஜீவனுள்ள வாழ்வு என்பதை யோவான் தனக்கு வெளிப் படுத்தின விசேஷத்தில் திரும்ப திரும்ப கூறியிருக்கிறான். ஜீவ விருட்சம் (வெளி. 2:7), ஜீவக் கிரீடம் (வெளி. 2:10), ஜீவப் புத்தகம் (வெளி. 3:5), ஜீவ ஆவி (வெளி. 11:11), ஜீவத் தண்ணீர் ஊற்று (வெளி. 21:6), ஜீவ தண்ணீருள்ள நதி (வெளி. 22:1), ஜீவத் தண்ணீர் (வெளி. 22:17) என நித்தியமாக உயிர்தரும் பொருட்கள் புதிய எருசலேமில் நமக்காக காத்திருக்கின்றன.

***9. ஜீவத் தண்ணீருள்ள நதி :–***யோவான் புதிய எருசலேமின் உட்புறத்தை தரிசிக்கும்போது அங்குள்ள ஜீவத் தண்ணீருள்ள நதியையே பிரதானமாய் கூறுகின்றான். புதிய எருசலேமானது கண்ணுக்கு இனிய காட்சிப் பொருளாக இருப்பதில்லை. அது தேவனுடைய குமாரர்களும் குமாரத்தி களும் வாசம் பண்ணும் நகரமாய் இருப்பதினால் தேவனுடைய ஜீவன் அங்கு பூரணமாய் வெளிப்படுகின்றது. பளிங்கைப் போலத் தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத் திலிருந்து புறப்பட்டு வருகிறதை யோவான் கண்டான் (வெளி. 22:1). இந்த நதியானது சுத்தமானதாயும், பளிங்கைப் போல தெளிவாய் பாய்வதாகவும் மக்களுக்கு ஜீவன் அளிக்கிறதாயும் இருக்கிறது. மொத்தத்தில் அந்த நதி முழுவதும் பளிங்கைப் போன்று மிகுந்த அழகுள்ள தாயும், வானவில்லின் நிறங்களை தன்னிலிருந்து வெளிக்கொணர்ந்து தேவனுடைய மகிமையைப் பிரதிபலிப்பதாயும் இருக்கிறது.

இந்த நதி எதைக் குறிக்கிறது? பிதாவும் குமாரனும் வாசம்பண்ணுகிற சிங்காசனத்திலிருந்து புறப்படுகிற திரித்துவத்தின் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரையேக் குறிக்கிறது. மகிமையுள்ள இந்த ஜீவ நதியின் தண்ணீரைப் பருகுகிற ஒவ்வொருவரும் புது ஜீவன் அடைந்து நாளுக்கு நாள் மகிமைமேல் மகிமை அடைவர். புதிய பெலனும் சமாதானமும் புதிய கிருபையும் இளைப் பாறுதலும், ஜீவன் அளிக்கும் வல்லமையும் மாசற்ற இந்த நதியிலிருந்து கொடுக்கப்படுவதால் பரலோக வாசிகளாம் பரிசுத்தவான்

களின் வாஞ்சையின் மைப்பொருளாக இந்த நதி இருக்கும். ஆதியில் ஏதேனிலே தேவன் ஜீவத் தண்ணீருள்ள நதியை உண்டுபண்ணி வைத்திருந்தார். புதிய எருசலேமிலும் அதுபோல தம் மக்களின் தாகந்தீர்ப்பதற்கு ஜீவ தண்ணீருள்ள நதியை உண்டுப் பண்ணி வைத்திருக்கிறார். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் என்று கூறிய இயேசு கிறிஸ்து, அதை ஏதேனிலே நித்திய ஜீவனை உண்டாக்கி புதிய எருசலேமிலே பரிபூரணப்படுத்துகின்றார்.

***10. ஜீவ விருட்சம் :–*** எருசலேம் நகரத்திலிள்ள பொன் வீதிகளின் மத்தியிலே ஜீவ நதி பாய்ந்து செல்கிறது. அதன் இரு கரைகளிலும் பன்னிரெண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருக்கிறது (வெளி. 22:2). நமது கணக்குபடி 1500 மைல் நீளமுள்ள ஒவ்வொரு வீதியிலும் இந்த நதி பாயும் எனில் பரலோகத்தின் எல்லா பொற்தள வீதிகளிலும் இந்த நதி பாய்ந்தாக வேண்டும். முழு நகரத்திலுள்ளவர்களும் ஜீவ நதியால் தாகந்தீர்க்கப்படுவர் என்பது எத்தனை அதிசயமும் ஆசீர்வாதமுமாயிருக்கும்.

இந்த நதியின் இருக்கரையோரங்களிலும் ஜீவனைக் கொடுக்கின்ற பன்னிரெண்டு வகை ஜீவ விருட்சங்கள் இருக்கின்றன. மாதந்தோறும் அது புதுக் கனிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது.அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆராக்கியமடைவதற்கு ஏதுவானவைகள். அந்த விருட்சத்தின் கனி தேவனது ஜீவனைக் குறிக்கிறது. இந்த விருட்சத்தின் இலைகள் புதிய எருசலேமில் உள்ளவர்களுக்கு ஆரோக்கியமுண்டாவதற்காக சிருஷ்டிக்கப்பட்ட வைகள் அல்ல, அவைகள் புதிய பூமியில் வாழும் மக்களுக்கு ஆரோக்கியமும் பெலனும் உண்டாகும்படி சிருஷ்டிக்கப்பட்டவைகள். தேவனது பிள்ளைகள் பரலோகிலிருந்து இந்த விருட்சத்தின் இலைகளை புதிய பூமியில் வாழும் மக்களுக்குக் கொண்டு செல்வர் என்று வேத வல்லுனர்கள் கூறுகின்றனர்.

ஜீவ விருட்சத்தின் கனியானது பரலோகப் பிரஜைகள் புசிக்கும்படி கொடுக்கப் படுகிறது. பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்கள் தேவனோடு கொள்ளும் ஐக்கியத்தை இது குறிக்கிறது. ஏதேனிலே ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க கனியைப் புசித்து தேவனோடுள்ள உறவை இழந்தான். ஆனால் புதிய எருசலேமிலோ இந்த ஜீவ விருட்சத்தின் கனியை நாம் புசிப்பதினால் இழந்த உறவை மீண்டும் பெருகின்றோம். இந்தக் கனி நமக்கு ஜீவனைக் கொடுப்பதோடு நம்மிலே சத்துவத்தையும் பெலனையும் அளிக்கிறது. எபேசு சபையைப் பார்த்து தேவன் கூறும்போது ஜெயங்

கொள்பவனுக்கு ஜீவ விருட்சத்தின் கனியைக் கொடுப்பேன் என்று வாக்குக்கொடுக்கின்றார்.

இந்தக் கனி ஜீவனைக் கொடுப்பது மாத்திரமல்ல, அது தேவனோடுள்ள ஐக்கியத்திற்கும், ஆராதனைக்கும் அடையாளமாயிருக்கிறது. ஆதாம் பாவம் செய்தபடியால் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசியாதபடிக்கு தேவனால் சபிக்கப்பட்டு தள்ளிவிடப்பட்டான். ஆனால் இந்த ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பவர்களுக்கு தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தமோ இனி ஒரு சாபமுமிராது. அதன் பொருள் என்ன? பரலோகிலே நம்முடைய பிரயாசத்தில் வாழ்கின்ற வாழ்வுக்கு முடிவுண்டாகி, தேவனுடைய நிறைவுள்ள பராமரிப்பில் நித்தியமாய் வாழ்வோம் என்பதே அதன் பொருளாகும்.

யோவான் அந்த நகரத்தைக் குறித்துக் கூறும்போது திட்டவட்டமான அளவுகளைக் குறிப்பிடுகின்றான். பரிசுத்த நகரம் என்றும், புதிய எருசலேம் என்றும் அழைக்கப்படுகின்ற அந்த நகரம் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி என்றும் அழைக்கப்படுகின்றது. பரிசுத்தப்படுத்தப்பட்டு மகிமையடைந்த மணவாட்டியாம் திருச்சபை இந்த நகரத்திலே மணவாளனாம் கிறிஸ்துவோடு என்றென்றும் வாழுவதால் தேவன் இந்த நகரத்தை மிகவும் மகிமைப்பொருந்திய நகரமாய் உருவாக்குகிறார்.

7

## புதிய எருசலேமைப் பற்றிய சிறப்புகள்?

புதிய எருசலேமை தேவனே அஸ்திபாரமிட்டு கட்டி உருவாக்குகிறார். இந்த பரிசுத்த நகரம் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வருகின்றது. வானமண்டலங்களிலே நட்சத்திரங்களை அந்தர வெளியில் தொங்க வைத்த தேவன் உன்னதமான பொருட்களை வைத்து இந்த நகரத்தைக் கட்டி உன்னத மக்கள் வாழும்படியாய் புதிய பூமிக்கு மேலாக அந்தர வெளியில் இந்த நகரத்தைத் தொங்க வைத்திருக்கிறார். பவுலும் இந்த நகரத்தையே மேலான நகரம் என்று கூறினான் (கலா. 4:26).

புதிய எருசலேம் மகா பிரகாசமுள்ள நகரம். "தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதன் வெளிச்சத்திலே நடப்பார்கள்" (வெளி.

21:11,23–24). இந்த நகரத்தின் வெளிச்சமே கீழேயுள்ள புதிய பூமிக்கும் வெளிச்சமாய் இருக்கும். புதிய பூமிக்கும் புதிய எருசலேமுக்கும் தேவனுடைய மகிமையே வெளிச்சமாய் இருக்கிறபடியால் பரிசுத்தவான் களுடைய ஐக்கியம் இவ்விரு இடங்களிலும் தொடரும். தேவ தூதர்க ளையும், வானத்திலுள்ள நட்சத்திரங்களையும் எண்ண முடியாத அளவு படைத்த தேவன் பரலோகிலுள்ள பரிசுத்தவான்களைக் குறித்து கூறும் போதும் தொகையிட முடியாத அளவு எண்ணிக்கையுடையவர்களாய் இருப்பார்கள் என்றே வேதத்தில் குறிப்பிடுகிறார். புதிய பூமியையும் புதிய வானத்தையும் படைத்த தேவனே புதிய எருசலேமையும் பிரம்மாண்டமாகப் படைத்து அதை மணவாட்டியான சபையார் பங்கேற்க ஆயத்தம் செய்கிறார். இனி அந்த நகரத்தின் சிறப்பம்சங்களை ஆராய்வோம்.

புதிய எருசலேமின் நீளம் 2413.5 கி.மீ. உதாரணமாக இந்தியாவின் நீளம் (இமயம் முதல் குமரி வரை) சுமார் 3200 கி.மீ. ஆகும். அதாவது இந்தியாவின் நீளத்தைவிட புதிய எருசலேமின் நீளம் சுமார் 786 கி.மீ. மாத்திரமே குறைவாகும். அப்படியே இந்தியாவின் அகலம் கிழக்கு முதல் மேற்கு வரை சுமார் 1700 கி.மீ. ஆகும். அதாவது இந்தியாவின் அகலத்தைவிட புதிய எருசலேமின் அகலம் 714 கி.மீ அதிகமாகும். புதிய எருசலேமின் நீளத்தையும் அகலத்தையும் சமமாக ஒரு உத்தேசக் கணக்கின்படி கூற வேண்டுமென்றால் அல்லது இந்த நகரத்தை பூமியின் மேல் கட்ட வேண்டுமென்றால் அது அமெரிக்க ஐக்கிய நாட்டின் பரப்பளவில் மூன்றில் இரு பகுதியை ஆக்கிரமித்துவிடும். அல்லது இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ரஷ்ய நாட்டின் பாதிப் பரப்பளவை இவை அனைத்தையும் இணைத்து அதன்மேல்தான் புதிய எருசலேமைக் கட்டவேண்டும். கன சதுர வடிவிலிருக்கும் புதிய எருசலேமின் பரப்பளவு 2,250,000 சதுர மைல்கள் ஆகும். ஆனால் இந்த நகரத்தின் உயரமும் 1500 மைல் என்றிருப்பதால் (2413.5 கி.மீ.) இந்த நகரம் பல அடுக்குகளில் (பொற்தளங்களால்) கட்டப்பட்டிருக்கும் என யூகிக்கலாம். ஒரு மைல் உயரத்திற்கு ஒரு அடுக்குமாடி எனக் கணக்கிட்டாலும் 1500 மைல் உயரத்திற்கு 1500 அடுக்குகள் கொண்ட நகரமாய் இது இருக்கிறது.ஒரு அடுக்கின் மொத்த பரப்பளவு 2,250,000 மைல் எனவே 1500 மாடிகளில் உள்ள மொத்த பரப்பளவும் 3,375,000,000 சதுர மைல்களாகும்.

**1. நகரத்தின் வீதி :–** நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போல சுத்தப் பொன்னாயிருந்தது (வெளி. 21:21). இந்த வீதியை விளக்க நமது மனித அளவின்படி கணக்கிட்டுப் பார்க்கலாம். புதிய எருசலேமின் ஒரு மாடியில்

ஒரு மைல் இடைவெளிக்கு ஒரு வீதி என நாம் வைத்துக்கொண்டால் 1500 மைல் நீளத்திற்கு 1500 வீதிகள் இருக்கலாம். அப்படியே நகரத்தின் அகலம் 1500 மைல் என்றால் அதற்கும் 1500 வீதிகள் இருக்கும். அதாவது கிழக்கு மேற்காக 1500 வீதிகளும் , வடக்கு தெற்காக 1500 வீதிகளும் என்றால் மொத்தம் 3000 வீதிகள் இருக்கலாம். ஒரு அடுக்கில் 3000 வீதிகள் இருக்குமென்றால் 1500 அடுக்கில் 45,000,00 வீதிகள் இருக்கும். ஒரு அடுக்கிலுள்ள 3000 வீதிகளின் நீளம் 40,500,000 மைல் என்றால் 1500 அடுக்குகளிலுள்ள மொத்த வீதிகளின் நீளம் 6,750,000,000 மைல்களாக இருக்கும் என கணக்கிடலாம். இதில் பெரிய அதிசயம் என்னவென்றால் இத்தனை தூர வீதிகளும் சுத்த தங்கத்தால் ஆனவை ஆகும்.

இத்தனை மகா பெரிய நகரத்தை தேவன் தனது ஐசுவரியத்தின் சம்பூரணத் தால் அலங்கரித்து வைத்தது எதற்காக ? விலையேறப்பெற்ற இரட்சிப்பை அடைந்த மக்கள் உட்பிரவேசிக்கவும், அவருக்காய் வாழ்ந்தவர்கள் என்றென் றும் தன்னுடனேகூட வாசம்பண்ணவுமே அப்படிக் கட்டி வைக்கிறார். இவ்வளவு பிரமாண்டமான நகரத்தில் எவ்வளவு மக்கள் வாசம் செய்வர் என எல்லோருடைய உள்ளத்திலும் கேள்விகள் எழலாம். சொற்ப ஜனங்கள் பரலோகத்திற்கு வரும்படி சிறிய ஒரு நகரத்தை தேவன் கட்டவில்லை. ஆதா மிலிருந்து கடைசி மனிதன் வரைக்கும் இரட்சிக்கப்பட்டாலும் அத்தனை பேருக்கும் போதுமான இடம் இருக்கும்படியே தேவன் பரலோகத்தை உண்டாக்கி வைத்திருக்கிறார். அவருடைய அன்பும் இரக்கமும் எத்தனை பெரியது. பரலோகத்தில் தேவ பிள்ளைகள் எல்லோரும் வாசம்பண்ணலாம். ஆனால் புதிய எருசலேமிலோ அவரால் சிறப்பாகத் தெரிந்து கொள்ளப்பட்ட வர்கள் மட்டுமே வாசம்பண்ணுவார்கள். சிறப்பானவர்களுக்காகக் கட்டப்பட்ட நகரமானதால் இது இத்தனை சிறப்பாய் இருக்கிறது.

இனி புதிய எருசலேமில் எவ்வளவு மக்கள் குடியிருக்கமுடியும் என கணக்கிடலாம். புதிய எருசலேமின் உயரம் 1500 மைல் (2413.5 கி.மீ.) என்று அறிந்தோம். இவ்வளவு உயரம் கொண்ட நகரம் எப்படியும் பல அடுக்கு மாடிகள் கொண்டதாய் இருக்கவேண்டும் (அநேக வாசஸ்தலங்கள் – யோவா.14:2). நமது மனிதன கற்பனையின் அளவுபடி ஒரு மைல் (1.6 கி.மீ) உயரத்திற்கு ஒரு அடுக்கு என்று வைத்துகொண்டாலும் 1500 மைல் உயரமுள்ள நகரத்தில் 1500 அடுக்குகள் வரை இருக்கலாம். அதாவது 1 அடுக்கு மாடியில் 1 நபருக்கு 160 ஏக்கர் பரப்பளவு இடத்தை ஒதுக்கினாலும் புதிய எருசலேம் முழுவதிலும் சுமார் 28,000,000,000 (28 ஆயிரம் கோடி) மக்கள் நகரத்தை ஆக்கிரமிக்கலாம்.

உலகிலேயே சில நகரங்களில் மக்கள் தொகை மிக நெருக்கமாக இருக்கிறது. உதாரணமாக தென்கொரியா, நெதர்லாந்து போன்ற நகரங்களில் ஒரு சதுர மைலுக்கு 950 பேர் வசிக்கிறார்கள். ஒருவேளை பரலோகத்தில் ஏராளமான மக்கள் சென்று தென்கொரியாவில் வசிப்பதுபோலோ, நெதர்லாந்தில் வசிப்பது போலோ ஒரு சதுர மைலுக்கு 950 பேர் வசித்தாலும் புதிய எருசலேமை சுமார் 30,000,000,000,000 (30 லட்சம் கோடி) மக்கள் ஆக்கிரமிக்க முடியும். இத்தொகை பரலோகில் வசிப்பதையல்ல, புதிய எருசலேமில் வசிப்போரை மட்டுமே குறிக்கிறது.

யோவானும் தனது தரிசனத்தில் "இதோ சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நிற்கக்கண்டேன் (வெளி.7:9). இரட்சிக்கப் பட்ட எண்ணிலடங்காத இந்த மக்களோடுகூட எண்ணிக்கைக் கடங்காத தூதர்களும் வாசம் செய்வர். இத்தனை மக்களும் வாசம்செய்யக் கூடிய விசாலமான ஒரு வாசஸ்தலத்தையே தேவன் பரலோகில் ஆயத்தம்செய்து வைத்திருக்கிறார்.

பரலோகம் ஏதோ சொற்ப ஜனங்களுக்குகென ஆயத்தம்செய்யப்பட்ட ஒரு இடமல்ல. மகிழ்ச்சியும், சந்தோஷமும் கரைபுரண்டோடும், ஒரு நாட்டையே தேவன் தம் மக்களுக்கென ஆயத்தம்செய்து வைத்திருக்கிறார். அது பரிசுத்தவான்களின் கற்பனைக்கெட்டாத நகரம். இரட்சிக்கப்பட்டோர் ஏங்கும் நகரம். மீட்கப்பட்டோர் வாஞ்சையாய் காத்திருக்கும் நகரம். தேவன் ஈவாய் அளிக்கும் நகரம் அங்கு இளைப்பாறுதலுக்கும், சந்தோஷத்திற்கும், ஆராதனைக்கும் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை. அந்த மகிமை நகரத்தின் அழகை தரிசிப்பதற்கு மாம்சக் கண்களால் முடியாது.

அந்த மகிமையில் மனுஷன் சரீரத்தால் வாசம்செய்ய இயலாது. எனவேதான் தேவன் நம்மை மறுரூபப்படுத்தி அங்கு அழைத்துச் செல்கின்றார். பூமியிலுள்ள எந்த இராஜாவும் ஐசுவரியமுள்ள எந்த ஐசுவரியவானும் அனுபவித்திராத சகலவிதமான மகிமைகளும் அங்கு நமக்கென காத்திருக்கின்றன. பூமியின் எந்தக் கட்டிடக் கலைஞனும் இந்தப் பொன் நகரத்தை கற்பனை செய்து பார்த்திருக்க முடியாது. நமது ஏக்கமெல்லாம் தீரும், அந்த மாளிகையில் இயேசுவோடு கூடு என்றென்றும் வாழும் வாழ்வு எத்தனை பாக்கியமான வாழ்வு!

அப்போஸ்தலனாகிய யோவானை கர்த்தருடைய ஏழு தூதரில் ஒருவன் உயரமான ஒரு மலையின் மேல் கொண்டுபோய் நிறுத்தி, புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு இறங்கிவருவதைக் காண்பித்தான். அந்தப் பரம எருச லேமானது மிகுந்த அழகுள்ளதாய் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததாய் மகிமை நிறைந்து காணப்பட்டது. யோவான் அந்தக் காட்சியை கண்டபோது நிச்சயமாகவே ஆச்சரியத்தால் பிரமித்திருக்கக்கூடும். நேசர் இயேசுவைக் குறித்து உன்னதப்பாட்டின் புத்தகம் என் நேசர் முற்றிலும் அழகுள்ளவர் என்று வர்ணிக்கின்றது. அப்படியானால் நேசர் வாசம்பண்ணுகின்ற அவரது மாளிகை எத்தனை அழகுள்ளதாய் இருக்கவேண்டும் !

பூமியிலுள்ள கட்டிடங்களைக் கட்டுவதற்கு நாம் பயன்படுத்தும் செங்கல், சிமெண்ட் ஆகியவற்றிற்குப் பதிலாக அந்தப் பரலோக மாளிகையில் தேவன் விலையேறப்பெற்ற பொன்னையும் தங்கத்தையும் பயன்படுத்துகின்றார். நகரத்தின் அஸ்திபாரங்களுக்கு விலையேறப்பெற்ற ரத்தினக் கற்களையும் அதன் வாசல்களுக்கோ விலைமதிப்பில்லா முத்துக்களையும் பயன்படுத்து கின்றார். யோவான் வெளிப் படுத்தல் புத்தகத்தில் 21 – ம் அதிகாரத்தில் அந்த நகரத்தின் வெளிப்புறத்தை மட்டுமே வருணித்திருக்கிறான். 22–ம் அதிகாரத்திலோ அந்த நகரத்தின் உட்புறத்தை விவரித்திருக்கிறான். மொத்தத்தில் நகரம் முழுவதுமே தேவனது மகிமையால் நிறைந்திருந்தது. பழைய ஏற்பாட்டில் தேவனது மகிமை தூப ஸ்தம்பத்திலும், அக்கினியிலும், மேகத்திலும் ஆங்காங்கு வெளிப்பட்டது. ஆனால் இந்த மகிமையடைந்த நகரமோ முற்றிலும் தேவ மகிமையால் நிறைந்திருந்தது.

**2. தேவனது சிங்காசனம் :–** உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார் (வெளி. 4:2). யோவான் பரலோகத்திலுள்ள தேவனது சிங்காசனத்தை தான் கண்டதையும் விளக்கியிருக்கிறான். மகிமையுள்ள ஒரு சிங்காசனத்தையும், அந்த சிங்காச னத்தின் மேல் வீற்றிருந்தவரையும் கண்டு யோவான் பிரமிப்படைந்தான். வீற்றிருந்தவர் பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்திற்கும் ஒப்பாயிருந்தார் (வெளி. 4:3). அந்த சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது; அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று.

அந்த சிங்காசனம் ரத்தினக் கற்களைப்போல ஒளிவீசியதாகவும், அதிலிருந்து வந்த ஒளி வானவில்லின் ஏழு வருணங்களையும் பிரபதிலித்த

தாகவும் யோவான் குறிப்பிடுகின்றான். எல்லா மகிமையையும் விட தேவனுடைய மகிமை மகா சிறந்த தாய் பெரியதாய் இருப்பதால் மிகவும் தெளிவுள்ள, பிரகாசமுள்ள கண்களைக் கூசவைக்ககூடிய மகிமையின் ஒளி அவரது சிங்காசனத்திலிருந்து பிரதி பலித்தது. இந்த மகிமையின் ஒளியே அவரது பரிசுத்தவான்களை பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாக்கி நித்திய சந்தோஷத்தை அனுபவிக்க வைக்கும்.

**3. நகரத்தின் மதில்கள் :–** மகிமை பொருந்திய இந்தப் புதிய எருசலேமைச் சுற்றிலும் பெரிதும் உயரமுமான மதில் சுவர்கள் இருந்ததாக யோவான் குறிப்பிடு கின்றான் (வெளி. 21:12). அந்த மதில் சுவரை தூதன் அளந்த போது அது தூதனுடைய அளவின்படி 144 முழமாய் இருந்தது. இந்த முழ அளவை வேத ஆராய்ச்சியாளர்கள் 216 – 240 அடிகளாக இருக்குமெனக் கூறுகின்றனர். இங்கு மதில் சுவரின் உயரத்தைக் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் பெரிதும் உயரமுமான மதில் இருந்தது என்று யோவான் குறிப்பிட்டிருக்கிற படியால் 2413.5 கி.மீ. உயரமுள்ள ஒரு மாளிகைக்குப் போடப்பட்டிருக்கும் மதில் சுவர் சில மைல்கள் உயரமாவது இருக்கும் என்று நாம் கருதலாம். நகரத்தின் அகலமும் நீளமும் சரிசமமாய் இருக்கிறபடியால் மதில்களின் மொத்த நீளமானது நான்கு பக்கமும் சேர்த்து சுமார் 6000 (1500X4) மைல்களாக இருக்கலாம்.

**4.நகரத்தின் அஸ்திபாரம்:–** இத்தனை மகா பெரிய புதிய எருசலேம் பட்ட ணத்திற்கு அஸ்திபாரம் எப்படி இருக்கின்றது என்பதையும், அஸ்திபாரத் தின் உறுதியையும் பெலத்தையும் மாத்திரமல்ல, அதன் அழகையும் பிரகாசத் தையும் யோவான் வருணித்திருக்கிறான். 401, 850 அடி கன சதுரமுடைய சுத்தமான வச்சிரக்கற்களால் அஸ்திபார கற்கள் போடப்பட்டிருக்கிறது. நகரத்திற்கு அஸ்திபாரமாக இருக்கும் பன்னிரெண்டு கற்களானவன 1. வச்சிரக்கல் (பச்சை நிறம்) 2. இந்திர நீலம் (நீல நிறம்), 3. சந்திரகாந்தம் (சாம்பல், நீலம் கலந்த மஞ்சள் நிறம்), 4. மரகதம் (பச்சை), 5. கோமேதகம் (இளநீலம்), 6. பதுமராகம் (இரத்த சிவப்பு), 7. சுவர்ணரத்தினம் (பச்சை நீலம் கலந்த சிவப்பு), 8. படிகைப் பச்சை (நீலபச்சை), 9. புஷ்பராகம் (தங்க நிறம் சேர்ந்த இளம் பச்சை), 10. வைடூரியம் (நீலம் பச்சை கலந்த மஞ்சள்), 11. சுநீரம் (சிவப்பு யூதா நிறம் கலந்த மஞ்சள்), 12. சுகந்தி (நீலம் கலந்த சிவப்பு) ஆகிய விலையேறப்பெற்ற கற்களால் புதிய எருசலேம் அஸ்திபாரமிடப்பட்டுள் ளது. இந்த அஸ்திபாரக் கற்களின் விளக்கம் நமக்குப் புரியாவிட்டாலும் இவை ஒவ்வொன்றும் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தும் விலையேறப் பெற்ற கற்களாகும்.

இயேசு கிறிஸ்துவின் பன்னிரெண்டு அப்போஸ்தலருடைய நாமங்கள் இவைகளின்மேல் பதிக்கப்பட்டிருந்தன. அப்போஸ்தல உபதேசத்தின்மேல் கட்டப்படுகிற ஆவிக்குரிய வாழ்வே பரலோகத்திற்கு நம்மை பாக்கியவான் களாக்குகிறது என இதன் மூலம் அறிந்துகொள்ளலாம். மீட்கப்பட்டு அப்போஸ்தல உபதேசத்தில் தங்கள் வாழ்வைக் கட்டுகின்ற பரிசுத்தவான் களுக்கு தேவன் தரும் மகிமை நிறைந்த வாழ்வு எத்தனை பெரியது !

பரலோகமும் அதிலுள்ள மதில் சுவர்களும், வாசல்களும் வெண்ணிறத்தில் இருக்கு மென நாம் ஒருவரும் நினைக்கக்கூடாது. ஏனெனில் தேவன் தன்னுடைய முழு மகிமையையும் வெளிக்காட்டும்படி பன்னிரெண்டு வித்தியா சமுடைய அஸ்திபாரக்கற்களிட்டு அதைக் கட்டியிருக்கிறார். தேவனது சிங்காசனத்தைச் சுற்றிலும் வானவில்லின் அனைத்து வருணங்களும் பிரகாசமாய் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. மொத்தத்தில் கூறப்போனால் பரலோகமானது மகிமையான வர்ணங்களால் ஒளிவீசுகிற ஒரு பரிசுத்த நகரமாக இருப்பதால் அது நாம் நினைப்பதுபோல் இருக்காது. அந்த உன்னத அழகை நம்மால் நினைத்துப் பார்க்கவும் முடியாது.

**5.நகரத்தின் வாசல்கள் :–** புதிய எருசலேமின் மதில்களில் பன்னிரெண்டு வாசல்கள் இருந்ததாக வேதம் கூறுகின்றது (வெளி. 21:12). அந்த மகிமை நிறைந்த பட்டணத்தின் வாசல்கள் மிக உயரமாய் இருந்தது. அதன் ஒவ் வொரு வாசலிலும் ஒவ்வொரு தூதனாக பன்னிரெண்டு தூதர்கள் பன்னி ரெண்டு வாசல்களிலும் இருந்தார்கள். அந்த வாசல்களின் மேல் இஸ்ர வேலின் பன்னிரெண்டு கோத்திரத்தாருடைய நாமங்கள் எழுதப்பட்டிருந்தன.

புதிய எருசலேமில் நான்கு திசைகளிலும் திசைக்கு மூன்று வாசல்கள் என மொத்தம் பன்னிரெண்டு வாசல்கள் இருந்தன. அந்த வாசல்கள் ஒவ்வொன்றும் முத்துக்களால் ஆனது. அதன் அளவு இவ்வளவு என்று வேதம் கூறவில்லை. என்றாலும் புதிய எருசலேமின் மொத்த சுற்றளவு (1500X4 பக்கம்) 6000 மைல் என்றால் அதன் பரப்பளவு (1500 மைல் நீளம் X 1500 மைல் அகலம்) 22,50,000 மைல் ஆகும். அதன் மொத்த அளவு (1500 மைல் நீளம் X 1500 மைல் அகலம் X 1500 மைல் உயரம்) 3,375,000,000 கன சதுர மைல் ஆகும். இத்தனை பெரிய பட்டணத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய மக்களுக்கென ஆயத்தமாக்கப்பட்ட இந்த பன்னிரெண்டு வாசல்களும் மகா பெரியவைகளாக இருக்கவேண்டும். ஒரு திசையில் மூன்று வாசல்கள் இருப்பதால் அந்த மூன்று வாசல்களும் சம அளவு இடைவெளியில்தான் இருக்கவேண்டும். அதாவது 1500 மைல் நீளத்தை

மூன்று வாசலுக்கு சம அளவில் பிரித்தால் ஒவ்வொரு வாசலும் 375 மைல்கள் இடைவெளியில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த வாசல்கள் விலையேறப் பெற்ற பென்னால் செய்யப்பட்டிருந்து. நகரத்தின் ஒவ்வொரு வாசலிலும் ஒவ்வொரு தூதனாக மொத்தம் பன்னிரெண்டு தூதர்கள் வாசல்களைக் காவல் செய்கின்றனர்.

பன்னிரெண்டு அஸ்திபாரக் கற்கள் பன்னிரெண்டு அப்போஸ்தலர் களையும், பன்னிரெண்டு வாசல்கள் பழைய ஏற்பாட்டு பன்னிரெண்டு கோத்திரங்களையும், வாசல்களிலுள்ள காவற்காரர்கள் தூதர்களையும், நகரத்தின் மதில் நமது இரட்சிப்பாகிய கர்த்தரையும், வாசல்களின் வழியே உள்ளே நுழையும் மக்கள் கூட்டம் இரட்சிக்கப்பட்டவர்களையும் குறிப்பிடுகின்றது. இப்படியாக பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், தூதர்கள், அனைவரும் ஒருவரோ டொருவர் பின்னிப்பிணைந்திருக்கும் ஐக்கியத்தை, நித்திய வாழ்வை காண் பிக்கும் அந்த பரம எருசலேமின் அடையாளங்கள் என்னே மேன்மையுள்ளவைகள்!

8

## பரலோகில் தேவன் எவ்விதம் இருக்கிறார்?

வேத வசனமானது எழுத்துபூர்வமாக பிதாவை மனிதருக்கு முதலாவது வெளிப்படுத்தியது. பின்பு தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவை வாழ்க்கைப் பூர்வமாக வெளிப்படுத்தினார். அதற்கு பின்பு தேவ ஆவியானவர் பிதாவின் ஆவியாகவே நமக்குள் தங்கி வசித்து வருகிறார். என்றாலும் பிதா எப்படி இருக்கிறார் என்பதை நமக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. சர்வ வல்லமையுள்ள காணகூடாத தேவன் ஒளியாயிருக் கிறார் (1 யோவா.1:5). அன்பாயிருக்கிறார் (1 யோவா. 4:16), ஆவியாயிருக் கிறார் (யோவா. 4:24). என்றெல்லாம் வேதம் அவரது பண்புகளைக் குறித்து நமக்குக் கூறுகின்றது. ஒளியாயிருக்கும் ஆவியான அன்புள்ள தேவன் எங்கே வாசம்பண்ணுகிறார் ? அவர் எப்படி வாசம்பண்ணுகிறார் ? அவர் எவ்விதம் வாசம்பண்ணுகிறார் என்பதை அறிந்துகொள்வதற்கு அனைவருமே ஆவல்கொள்வோம். நமது ஆவலைத் தீர்ப்பதற்கு வேதம் முழுவதிலும் பதில் நிறைந்து இருக்கிறது.

1. பூரண வடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார் – சங். 50:2
2. தேவன் உயரமும், உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார் – ஏசா.6:1
3. அந்த சிங்காசனம் அக்கினி ஜுவாலையாய் இருக்கிறது – தானி. 7:9
4. சிங்காசனத்தின் சக்கரங்கள் எரிகிற நெருப்பாய் இருக்கிறது – தானி. 7:9
5. சிங்காசனத்தைச் சுற்றி வானவில் இருந்தது – வெளி. 4:3
6. அந்த வானவில் மரகதம்போல் காட்சியளிக்கிறது – வெளி. 4:3
7. சிங்காசனத்தில் நீண்ட ஆயுசு உள்ளவர் அதில் வீற்றிருக்கிறார் – 7:9
8. அவரே சதாகாலங்களிலும் அரசாளுவார் – வெளி. 22:5
9. அவருக்கு முன் அக்கினி பட்சிக்கும் – சங். 50:3
10. அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிக்கும் – சங். 50:3
11. அது தேவனது மகிமையால் நிறைந்திருக்கிறது –அப். 7:55
12. தேவனது வலதுபாரிசத்தில் இயேசு உட்கார்ந்திருக்கிறார் –மாற். 16:19
13. சிங்காசனத்திலிருந்து மின்னலும், இடிமுழக்கங்களும் புறப்படுகிறது– வெளி. 4:5
14. சிங்காசனத்தின் முன் பளிங்கு கண்ணாடிக் கடல் இருக்கிறது – வெளி.4:6
15. அக்கினி நதி அவர் சந்நதியிலிருந்து புறப்பட்டு ஓடுகிறது –தானி. 7:10
16. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றிருக்கிறார்கள் – ஏசா. 6:2
17. அவர்களில் ஒவ்வொருவனுக்கும் 6 செட்டைகள் இருக்கின்றன – ஏசா. 6:2
18. அவனவன் இரண்டு செட்டைகளால் முகத்தை மூடிக்கொள்கிறான்–ஏசா. 6:2
19. அவனவன் இரண்டு செட்டைகளால் தன் கால்களை மூடிக்கொள்கிறான் –ஏசா.6:2
20. அவனவன் இரண்டு செட்டைகளால் பறந்து பரிசுத்தர் எனக்கூறுகிறான்–ஏசா.6:2
21. சிங்காசனத்தைச் சுற்றிலும் நடுவிலும், நான்கு ஜீவன்கள் இருக்கிறது – வெளி.4:6
22. அந்த ஜீவன்களுக்கு முன்பக்கம், பின்பக்கமும் கண்கள் இருந்தது–வெளி. 4:6
23. அந்த நான்கு ஜீவன்களும், நான்கு வகைகளாக உள்ளது –வெளி.4:7
24. அந்த நான்கு ஜீவன்கள் ஒவ்வொன்றுக்கும் 6 சிறகுகள் இருக்கிறது–வெளி. 4:8
25. சிறகுகளைச் சுற்றிலும் உள்ளே கண்களால் நிறைந்திருக்கின்றன–வெளி. 4:8
26. அவைகள் கர்த்தரை பரிசுத்தரென ஓயாமல் புகழ்கின்றன –வெளி. 4:8
27. பரலோகத்தில் சிங்காசனங்கள் வைக்கப்பட்டுள்ளன –தானி. 7:9
28. சிங்காசனத்தைச் சூழ 24 மூப்பர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் – வெளி. 4:4
29. அந்த மூப்பர்கள் அவரை விழுந்து வணங்கி தொழுதுகொள்கிறார்கள்–வெளி. 4:10
30. தேவ சந்நிதியில் காபிரியேல் தூதன் நின்றுகொண்டிருக்கிறான் –லூக். 1:19
31. தேவ தூதர்கள் இறங்கி ஏறுகிறவர்களாக இருக்கிறார்கள்–ஆதி. 28:12; யோவா. 1:51
32. ஆயிரம் ஆயிரமானபேர் அவரை சேவிப்பார்கள் –தானி.7:10
33. கோடான கோடி பேர் அவருக்கு முன்பாக நிற்பார்கள் – தானி. 7:10
34. அவருடைய ஊழியக்காரர்கள் அவரை சேவித்து தரிசிப்பார்கள்–வெளி.22:4

35. அவருடைய நாமம் அவர்கள் நெற்றிகளில் இருக்கும்–வெளி. 22:4
36. நியாய சங்கம் அவரைச் சுற்றி உட்கார்ந்திருக்கிறது – தானி. 7:10
37. அதில் புத்தகங்கள் இருக்கிறது – தானி. 7:10

இவ்விதம் பரலோகத்திற்குள் பிதா எப்படி வீற்றிருக்கிறார் என்றும், அவரை சுற்றி என்ன நடக்கிறது என்றும், எப்படி நடக்கிறது என்றும் மேற்கூறிய வசனங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இவ்வசனங்களில் தெரிவிக்கப் பட்டிருக்கிற நிகழ்ச்சிகளை நம்மால் கற்பனை செய்து பார்த்தாலும் அவைகள் நம் சிந்தைக்கு எட்டாத நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. பல நேரங்களில் இப்படி சம்பவங்கள் இருக்குமா என மாம்சம் கேள்வி கேட்கும். ஆனால் ஆராய முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத செயல்களையும் அவர் செய்கிறவர் என்பதை எண்ணி நமது ஆவி பரலோகத்திற்குரியவைகளை ஏற்றுக்கொள்ளும்.

9

## பரலோகத்தில் எவைகள் இருக்கும்?

எந்த ஒரு அரண்மனையும் மிக பிரமாண்டமான கலைகளால் நிறைந் திருக்கும். அப்படியே பரலோகமும் தேவனின் அரண்மனையாய் இருப்பதால் அதில் பல்வேறுபட்ட விசித்திர கலைகளும் நிறைந்திருக்கிறது. ஒரு வீட்டில் ஒவ்வொரு அறைக்கும் ஏற்றார்போல பொருட்களால் அலங்க ரிக்கப்பட்டிருப்பது போல். அவ்வண்ணமே பரலோகமும் பல்வகை பொருட் களாலும், அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மோட்சமானது பிதாவின் வீடாய் இருப்பதால், அந்த வீட்டிற்குள் இருக்கும் பொருட்கள் எவைகள்? அந்த வீட்டிற்குள் வாசம்பண்ணும் நபர்கள் யார்? அவர்கள் அங்கே என்ன செய்கி றார்கள் என்பதையெல்லாம் வேதத்தில் ஆங்காங்கே கூறப்பட்டுள் ளதை தியானித்து அறிந்துகொள்ளலாம்.

1. பரலோகில் பிதா இருக்கிறார் – தானி. 7:9
2. அவர் வலது பாரிசத்தில் குமாரன் இருக்கிறார் – வெளி. 5:6 ; 7:17
3. ஜீவநதியாய் பரிசுத்தாவியானவர் இருக்கிறார் – வெளி. 14:13 ; 22:17
4. பரலோகமெங்கும் திரள்கூட்டமாய் தேவதூதர்கள் உள்ளனர் –லூக். 2:13,15
5. அவர் சமுகத்தில் பரிபூரண ஆனந்தம் இருக்கும் – சங். 16:11

6. அவர் வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பம் இருக்கும் – சங். 16:11
7. நித்திய ஜீவன் அங்கு இருக்கும் – யோவா. 20:31
8. பரலோகமெங்கும் ஆரோக்கியம் இருக்கும் – வெளி. 22:2
9. பரலோகத்தில் உண்ண ஜீவவிருட்சத்தின் கனி இருக்கும் – வெளி. 22:2
10. அதில் ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள் இருக்கிறார்கள் – எபி. 12:22
11. பிதாவுக்கு முன் நியாய சங்கம் இருக்கிறது – தானி. 7:10
12. பிதாவுக்கு முன் புஸ்தகங்கள் இருக்கிறது – தானி. 7:10
13. அவரை சூழ்ந்து மூப்பர்களும் தூதர்களும் இருக்கிறார்கள் – வெளி. 5:11
14. பரலோகம் எங்கும் துதி பாடல்கள் அங்கிருக்கும் – வெளி. 14:3; 15:3
15. பரலோகம் முழுவதும் ஆலயத்திலே ஆராதனை நடக்கும் – வெளி. 7:15
16. பிதாவை அங்கு நிறைவாய் அறிந்துகொள்ளுதல் இருக்கும் – 1 கொரி. 13:12
17. பரலோகில் கிறிஸ்து இருக்கிறவிதமாய் நாமும் இருப்போம் – 1 யோவா. 3:2
18. அனைவருமே ஆவிக்குரிய சரீரத்தில் இருப்போம் – 1 கொரி. 15:44

மேற்கூறிய மகிமை நிறைந்த அந்த வாசஸ்தலத்தில் நம் கண்களால் கண்டிராத காட்சிகளைக் காணலாம். காதுகளால் கேட்டிராத ஓசைகளைக் கேட்கலாம். சிந்தை யால் சிந்தித்திராத நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். மாம்சத்தால் யூகிக்கமுடியாத ஆசீர்களை அடையலாம். உலகத்தில் உயிரோடிருந்த நாட்களில் அனுபவித்திராத அனுபவங்களை அடையலாம். உலகத்தார் பரலோகத்தின் மகிமையையும் அதன் மேன்மையையும் கண்டுகொள்ள மாம்சத்தில் முயற்சிக்கின்றனர். ஆனால் அதை அவர்களால் கண்டுகொண்டு அனுபவிக்க முடியாது. பரலோக ரகசியங்களை மாம்சமும், இரத்தமும் நமக்கு வெளிப்படுத்தாது (மத்.16:17). பரலோகத்திலிருக்கிற பிதாவும், குமாரனும், ஆவியானவருமே அதை நமக்கு வெளிப்படுத்துவார்.

10

## பரலோகத்தில் எவைகள் இருக்காது?

பரலோகத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொண்டவர்கள், எவைகளெல்லாம் இருக்காது என்பதையும் அறிந்துகொள்ளலாம். தேவனது இடத்தில் தேவனுக்குரியவைகளே இருக்கின்றன. பரலோகத்தில் பாவம் இல்லை. அங்கே பாவமில்லாதபடியால் சாபமும் இல்லை. பரலோகத்தில் எவைகள் இருக்காது என்பதை வேதம் குறிப்பாய் கூறியிருக்கிறது. அங்கே

தேவன் விரும்பாதவைகளும், பாவங்களும் அசுத்தங்களும் தேவையற்ற வைகளும், உபத்திரவத்திற்குக் காரணமானவைகளும் இருப்பதில்லை.

1. பூமிக்குரிய பழைய பூமியும் வானமும் அங்கிருக்காது – வெளி. 21:1
2. பூமயை நிரப்பியுள்ள சமுத்திரம் அங்கிருக்காது – வெளி. 21:1
3. நாம் காணும் சூரியனும் சந்திரனும் இருக்காது – வெளி. 21:23
4. இருள் நிறைந்த இராக்காலம் இருக்காது – வெளி. 21:25; 22:5
5. நாம் வடிக்கும் கண்ணீர் இருக்காது! – வெளி. 7:17; 21:4
6. நமது சத்துருவான மரணம் இருக்காது – வெளி. 21:4
7. நம்மை வாட்டி எடுக்கும் துக்கம் இருக்காது – வெளி. 21:4
8. நம்மை பயமுறுத்தும் அலறுதல் இருக்காது – வெளி. 21:4
9. நம்மை துன்புறுத்தும் வருத்தம் இருக்காது – வெளி. 21:4
10. நம்மை கட்டிவைக்கும் சாபம் இருக்காது – வெளி. 22:3
11. நம்மை வாட்டி எடுக்கும் வியாதி இருக்காது – வெளி. 22:2
12. பூமியில் எடுத்த பசி இருக்காது – வெளி. 7:16
13. பூமியில் எடுத்த தாகம் எடுக்காது – வெளி. 7:16
14. அங்கு வெயிலும் உஷ்ணமும் இருக்காது – வெளி. 7:16
15. அதில் தீட்டும் அருவருப்பும் இருக்காது – வெளி. 21:27
16. அங்கே பொய்யை நடப்பிக்கிறது இருக்காது – வெளி. 21:27
17. அங்கே பூச்சியும் துருவும் இருக்காது – மத். 6:20

இந்த உலகம் என்று சபிக்கப்பட்டதோ, ஆதி மனிதன் எப்பொழுது சாபம் பெற்றானோ அப்பொழுதுமுதல் பூமி முழுவதுமுள்ள மனுக்குலமும் சாபத்தை சுமந்து திரிகிறது. எனவே இயேசு "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் என்றார்" (மத். 11:28). பூமியில் எவ்விடத்திலும் எல்லா மனிதர் மேலும் வருத்தமானது சாபமாயிருக்கிறது. இந்த சாபம் பரலோகத்தில் இல்லாதபடியால் அங்கே வேதனையும், கண்ணீரும், கவலையும், பாடுகளும் இருப்பதில்லை. எனவே இந்த பூமியைவிட பரலோகம் கோடிமடங்கு இன்பம் நிறைந்ததாய் இருக்கிறது.

மக்கள் இந்த பூமிக்குரிய வாழ்க்கையை வெறுப்பதற்கும், பரலோக வாழ்க்கையை விரும்புவதற்கும் பலகாரணங்கள் இருக்கின்றன. இந்த பூமிக்குரிய வாழ்க்கையின் தரமும், சமுதாய இனபேதங்களும் மோட்சத்தில் இல்லை. வறுமையையும் செழுமையையும் நிர்ணயிக்கும் பணம் அங்கே இல்லை. உயர்ந்தவன் என்றும், தாழ்ந்தவன் என்றும் பிரிக்கும் இனவேறு பாடு அங்கே இல்லை. மூடனையும் ஞானியையும் பிரிக்கும் உலக அறிவு

அங்கே இல்லை. அங்கே வியாதியில்லாததால் மருத்துவமனைகளும், மருந்துகளும், வைத்தியர்களும் வேலையில்லை. உழைப்பதற்காக விரைந்து செல்லும் போக்குவரத்து வசதிகள் அங்கே இல்லை. ஏழைகளை சுரண்டும் எஜமானர்களும், ஏழ்மையில் வாடும் ஏழைகளும் அங்கே இருப்பதில்லை. கவலை என்பதே தெரியாதபடியால் கண்ணீர் என்பது அங்கே வருவதில்லை. இரவு பகல், நேர குறிப்புகள் தேவையற்றபடியால் அங்கே சூரியனும் சந்திரனும் இல்லை.

11

## பரலோகம் எங்கே இருக்கிறது?

சொர்க்கம், மோட்சம், பரலோகம் என்றும் அழைக்கப்படும் இடம் வானத்தில் இருப்பதாக ஒரு எண்ணம் இயற்கையாகவே மனிதர்களுடைய உள்ளத்தில் இருக்கிறது. பரலோகமானது வானத்தில்தான் இருக்கிறது என்ற இந்த கிறிஸ்தவ நம்பிக்கையை எவரும் அசைக்கமுடியாது. இது பொதுவான ஒரு நம்பிக்கையென்றாலும். ஆனால் இதையும் தாண்டி வானத்தில் எவ்விடத்தில் பரலோகம் இருக்கிறது என்பதை விசுவாசத்தின் அடிப்படையில் ஆராய்ந்தால் வேதத்தில் ஒருசில இடங்களில் இதற்குரிய பதிலை பெற்றுக்கொள்ளலாம்.

பரலோகம் தேவனின் வீடு என்றால் அந்த வீடு எங்கு இருக்கிறது? பரலோகம் தேவனது இராஜ்யம் என்றால் அந்த இராஜ்யம் எப்படி இருக்கிறது? பரலோகம் இளைப்பாறும் இடமென்றால் அது எவ்விதத்தில் இருக்கிறது? பரலோகம் பரிசுத்தவான்களின் வாசஸ்தலம் என்றால் அந்த ஸ்தலம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? பரலோகம் மகிமையான நகரம் என்றால் அந்த நகரத்தின் முகவரி எது? பரலோகம் நமக்கு சொந்தமென் றால் அந்த சொந்த இடம் எவ்வழியில் இருக்கிறது? இது போன்ற பல்வேறு நியாமான கேள்விகள் நமக்கு எழலாம். ஆனால் அக்கேள்விகளுக்கும் வேதமே நமக்கு கூறி தெளிவாக்குகிறது.

**1.சங்கீத புத்தகம் கூறும் பதில் :–** பூமியில் கிழக்கு, மேற்கு, வடக்கு,தெற்கு என நான்கு திசைகள் இருக்கின்றன. உலகத்தின் எந்த தேசத்தில் இருந்தாலும் இந்த நான்கு திசைகளும் மாறாமல் இருக்கின்றன. சங்கீதம் 75:6–7 வசனங் களில், கிழக்கிலும், மேற்கிலும், வனாந்திர திசையிலுமிருந்து

(தெற்கு) ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி. ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வசனக் குறிப்பில் கிழக்கு, மேற்கு, வனாந்திர திசையாகிய தெற்கு எனமூன்று திசைகளிலிருந்து ஜெயம் வராது என குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு திசை இங்கே குறிப்பிடப்படாமல் விடப்பட்டுள்ளது. நான்கு திசைகளில் மூன்று திசைகளிலிருந்து வெற்றிவராது என்று கூறப்பட்டுள்ள தென்றால் மீதமுள்ள ஒரு திசையில் அதாவது வடக்கு திசையிலிருந்து ஜெயம் வரக்கூடும் என நினைக்கதோன்றுகிறதல்லவா! நியாயதிபதியாகிய தேவன் ஜெயம் கொடுக்கிறவராய் இருப்பதால் அவர் இத்திசையிலிருந்து ஜெயம் கொடுக்கிறாரோ என யூகிக்க வைக்கிறது.

கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதத்தில், கர்த்தர் பெரியவர் அவர் தமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப் படத்தக்கவர். ***வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம்*** வடிப்பமான ஸ்தானமும், சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. அதுவே மகா இராஜாவின் நகரம். அதின் அரண்மனைகளில் தேவன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார் (சங். 48:1–3) என்ற வசனத்தின்படி வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் என்று ஒரு திசையை வேதம் கூறுகின்றது. பூமியிலுள்ள கிழக்கிலும், மேற்கிலும், தெற்கிலுமிருந்து ஜெயம் வராதபோது, வடதிசையிலுள்ள சீயோன் பர்வதத்தில் நியாயாதிபதியாய் வீற்றிருக்கிற கர்த்தரிடத்திலிருந்து ஜெயம் வருகிறது. இதிலிருந்து பூமியின் வடக்கு திசையில் சீயோன் பர்வதமான மகா இராஜாவின் நகரம் இருப்பதாக அறியலாம்.

**2. சாத்தான் கூறும் பதில் :–** பரலோகம் எத்திசையிலிருக்கிறதென்பதை இன்னும் விளக்கமாக ஆராய்ந்தால் வேதத்தில் இன்னொரு தெளிவான உதாரணம் இருக்கிறது. வலுசர்ப்பம், சாத்தான், பொல்லாங்கான், சோதனைக்காரன், பிசாசு என்றெல்லாம் அழைக்கப்படுகிற லூசிபர் என்பவனின் வரலாற்றை ஆராய்ந்தால் பரலோகம் எங்கிருக்கிறதென்பதற்கு பதில் வருகிறது. அதிகாலை மகனான விடிவெள்ளி லூசிபர் தேவனுடைய தூதனாயிருந்து, அவருக்கு மேலாக தன்னை உயர்த்த நினைத்ததால், அவர் சமுகத்திலிருந்து அவன் கீழே தள்ளப் பட்டான். “அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழவெட்டப் பட்டாயே ! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங் களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக்

கூடத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்" (ஏசா. 14:12–15) என்று சாத்தானின் செயலைக் குறித்து கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய வசனங்களில் சாத்தான் ஏன் கீழேத் தள்ளப்பட்டான் என்பதற்கு காரணங்களாக அவனது செயல்களும் கூறப்பட்டுள்ளது. "நான் ***வானத்துக்கு*** ஏறுவேன், தேவனுடைய ***நட்சத்திரங்களுக்கு*** மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன், ***வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூடத்திலுள்ள*** பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், ***நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்*** உன்னத மானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே" (ஏசா. 14:12–15) என்று சாத்தான் தன் இருதயத்தில் தேவனுக்கு விரோதமாய் நினைத்த யோசனையை ஆவியானவர் எழுதிவைத்திருக்கிறார்.

தேவனைப்போல தான் ஆராதிக்கப்படவேண்டும் என்று நினைத்து அதற்காக மேகங்கள் மீது உன்னதத்திற்கு ஏறி, ***வட புறத்திலுள்ள ஆராதனைக் கூடாரத்தில்*** வீற்றிருப்பேன் என சாத்தான் விரும்பினான். சாத்தானது கூற்றுப் படி தேவனது ஆராதனைக் கூடம், உன்னதத்தில் இருக்கிறது. வடபுறத்தில் அதாவது வடக்குதிசையில் இருக்கிறது. உன்னதமானவர் மேகங்களுக்குமேலுள்ள உன்னதங்களில் வீற்றிருக்கிறார், அங்கேயும் நான் ஏறுவேன் ; வடக்கு திசையிலுள்ள ஆராதனைக் கூடத்தின் பர்வதம் வானத்து நட்சத்திரங்களுக்கு மேல் உள்ளது. அதின் மேலும் என் சிங்காசனத்தை உயர்த்தி அதின் மேல் நான் வீற்றிருப்பேன் என்று சாத்தான் தனக்குள்ளே திட்டமிட்டான்.

நான் ***வானத்துக்கு*** ஏறுவேன்.... ***நட்சத்திரங்களுக்கு மேலாக*** என் சிங்காசனத்தை உயர்த்துவேன்.... ***மேகங்களுக்கு மேலாக உன்ன தங்களில்*** *ஏறுவேன்..* என்று லூசிபர் கூறியதில் எத்தனை முறை மேலே ஏற வேண்டுமென்று அவன் கூறியதை கவனித்தால் வானத்துக்கு ஏறுதல், நட்சத்திரங்களுக்கு மேலாக ஏறுதல், உன்னதங்களில் ஏறுதல் என மூன்றுவித அடுக்கு களில் ஏறுவதைப்போல கூறப்பட்டுள்ளது. அதாவது பூமியிலிருந்து வானம், வானத்திலிருந்து நட்சத்திரம், நட்சத்திரங்களி லிருந்து உன்னதம் என மூன்றாவது படிவத்தில் உன்னதம் என அழைக்கப் படும் பரலோகம் இருப்பதாய் இந்த வசனங்களிலுமிருந்து தெரிகிறது.

**3. பவுல் அப்போஸ்தலன் கூறும் பதில் :–** அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு நிருபம்அனுப்பும்போது தன்னுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு அனுபவத்தை எழுதியனுப்புகிறான். அந்த அனுபவம் பரலோகத்தைக் குறித்தும் வெளிப்படுத்தும் அனுபவமாகவும் இருக்கின்றது. "கிறிஸ்துவுக் குள்ளான ஒரு மனிதனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே ***மூன்றாம் வானம்*** வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்தில் இருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பே இருந்தானோ அதை அறியேன்; தேவன் அறிவார். அந்த மனுஷன் ***பரதீசுக்குள் எடுக்கப்பட்டு,*** மனுஷர் பேசப்படாததும் வாக்குக் கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டான் என்று அறிந்திருக்கிறேன். அவன் சரீரத்தில் இருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பே இருந்தானோ அதை அறியேன்; தேவன் அறிவார்" என பவுல் கூறியுள்ளான் (2 கொரி. 12:2–4). பவுல் கூறியுள்ள இத்தரிசனத்தில் மூன்றாம் வானம், பரதீசு என்ற வார்த்தைகள் பரலோகம் இருக்கும் இடத்தைக் குறிக்கின்றது.

பவுல் கூறியுள்ள வெளிப்பாட்டின்படி மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டு... பரதீசுக்குள் எடுக்கப்பட்டு என்ற இரண்டையும் ஒப்பிட்டால் பரதீசு என அழைக்கப் படும் பரலோகம் மூன்றாம் வானத்தில் இருப்பதாய் அறிந்து கொள்ளலாம். மூன்றாம் வானம் என பவுல் குறிப்பிட்டுள்ளதால் வானங்களில் பல வகை இருக்கலாம் என்ற எண்ணம் எழுகிறது. மனிதர்களாகிய நம் கண்களுக்குத் தெரிந்ததெல்லாம் நமக்கு மேல் இருக்கும் ஒரே வானமாகும். ஆனால் பவுல் மூன்றாம் வானம் என கூறியுள்ளதால் வானங்களில் மூன்று வகைப் பிரிவு இருப்பதாய் அறிவிக்கப் படுகிறது. மூன்றாம் வானத்தில் பரலோகம் இருக்கிறதென்றால், மற்ற முதல் வானமும், இரண்டாம் வானமும் எங்கே இருக்கிறது என்ற கேள்வி எழலாம். அக்கேள்விகளுக்கும் பதிலை வேதத்திலே ஆராயலாம்.

தாவீது அரசன் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதத்தில்; "***வானங்கள்*** தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரத்தின் கிரியையை அறிவிக்கிறது" என்றான் (சங். 19:1). இங்கு வானம் கர்த்தருடைய மகிமையை வெளிப்படுத்துகிறது என கூறாமல் வானங்கள் என பன்மையில் கூறப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும் இரண்டாம் நிருபத்தில், "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும், அப்பொழுது ***வானங்கள்*** மட மடவென அகன்றுபோம்" .... என எழுதினான் (2 பேது. 3:10). இங்கும் கர்த்தருடைய

வருகையில் வானம் அகன்றுபோம் என்று கூறாமல் வானங்கள் என இங்கும் பன்மையில் கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து வானம் என்பது ஒன்றல்ல, வானங்கள் பல இருப்பதாக அறிந்துகொள்ளலாம். நாம் காண்கிற இயற்கை அனைத்தையும் தேவனே சிருஷ்டித்தபடியால் எத்தனை வானங்கள் இருந்தாலும் அத்தனையும் அவர் ஒருவரே சிருஷ்டித்தார். எனவே அவைகளைத் தெரிந்துகொள்வதற்கு வேதத்தை ஆதாரமாக நாடி அதற்கு அறிவியல் உதாரணங்களையும் நாடினால் நலமாகயிருக்கும். வேதத்தின் அடிப்படையில் வானங்கள் மூன்று இருக்கின்றன. அவைகள் முதலாம் வானம், இரண்டாம் வானம், மூன்றாம் வானம் என அழைக்கப்படுகின்றன.

**1. *முதலாம் வானம்* (Aerial Heaven) :–** மூன்று வானங்களில் முதலாம் வானம் என அழைக்கப்படுவது நாம் பூமியிலிருந்து மேலே பார்க்கும்போது நம் கண்களுக்குத் தெரியும் ஆகாயம் ஆகும். இந்த வானத்தில் மேகங்கள் இருக்கின்றன. இங்கிருந்து மழையும், பனியும், காற்றும், புயலும், மின்னலும் புறப்படுகின்றன. பறவைகளும், விமானங்களும் இந்த ஆகாயத்திலிருந்தே பறக்கின்றன. காலையும், மாலையும் இந்த ஆகாயத்தில் காணப்படும் இயற்கை எழிலை வார்த்தைகளால் விவரிக்கமுடியாது. மேகங்களின் அணி வகுப்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு உருவத்தைக் காட்டி ஊர்ந்து செல்லும் அழகை எழுத்துக்களால் எழுத முடியாது. நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை இந்த வானத்தைப் பார்த்தே வாழ்கிறோம்.

ஏழையும் செல்வந்தனும் எந்த பேதமுமின்றி இலவசமாக பார்த்து ரசிக்கும் அற்புத ஆகாயம் இது. பூமியை மக்கள் விலைகொடுத்து வாங்கி பகிர்ந்து கொள்கின்றனர். ஆனால் இந்த ஆகாயத்தை ஒருவரும் விலை கொடுத்து வாங்கவும் அவரவர் வசதிக்கேற்றவண்ணம் பகிர்ந்துகொள்ளவும் முடியாது. உலகத்தின் சமத்துவத்திற்கு ஒரே பெரிய அடையாளம் இந்த வானமாகும். நல்லவனுக்கும், கெட்டவனுக்கும் பேதம் காணாது வான்மழையை வாரித் தூவும் இந்த ஆகாயம் முதலாம் வானம் என அழைக்கப்படுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த வானத்தின்வழியே கடந்து சென்றார் (அப்.1:11) என்பது குறிப்பிடத்தக்கது.

**2. *இரண்டாம் வானம்*** (Celestial Heaven) :– முதலாம் வானத்திற்கு மேலே வெகு உயரத்தில் இருக்கும் வானம் இரண்டாம் வானமாகும். இந்த

இரண்டாம் வானம் விண்வெளி (Space) என்று அழைக்கப்படுகிறது. இவ்வானத்தில் சூரியன்களும் , சந்திரன்களும், நட்சத்திரங்களும், கோள்களும் இருக்கின்றன. அண்டவெளி என்றும், விண்வெளி என்றும் அறிவியலாளர்கள் அழைக்கும் இவ்வானத்தில் சூரியன் என்ற மகா பெரிய கோளோடு பல இயற்கைக் கோள்கள் இடம் பெற்றிருக்கின்றன. இந்தக் கோள்களில் நாம் அறிந்திருக்கிற புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், புளூட்டோ ஆகியவை கோள்கள் சூரியனை சுற்றிவருகின்றன என்பது விஞ்ஞான உண்மையாகும்.

இந்த இடத்திற்கு மனிதர்கள் அனைவரும் சுலபமாகச் சென்று பார்த்து விட்டு திரும்புவதற்கு வாய்ப்புகள் இல்லையென்றாலும் ஆய்வாளர்கள் ஆதா ரங்களோடு கூறும் உண்மைகளை அனைத்து மனிதர்களும் ஏற்றுக் கொள்கிறோம். இயேசுவை ஏற்றுக்கொண்ட விண்வெளி ஆராட்சியாளர்கள் விண்வெளிக்குச் சென்று அங்குள்ளவைகளைப் பார்த்ததும் தேவனது சிருஷ்ப்பின் மகத்துவத்தை எண்ணி அவரை மகிமைப்படுத்துகின்றனர். இரட்சிக்கப்படாத விஞ்ஞானிகளோ அங்குள்ளவைகளை அறிவுப்பூர்வமாக வும் உலகப் பிரகாரமாகவும் பார்ப்பதால் அவர்களால் வேதத்திற்கு அறிக் கையை வெளியிடுகிறார்கள். இரண்டாம் வானத்தில் இருக்கும் சிறப்புகளை அறிவியல் உலகம் தெரிவித் திருக்கும் குறிப்புகள் அனைத்தையும் வேதம் நமக்குக் கூறவில்லையென்றாலும் இவைகள் தேவன் மீது நம்பிக்கை வைப்பதற்கும் அவரது மகத்துவத்தை சிந்தித்து மகிமைப்படுத்துவதற்கும் இவைகள் உதவுகின்றன.

“வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன, ஆகாய விரிவு அவருடைய கரத்தின் கிரியை அறிவிக்கிறது, பகலுக்கு பகல் வார்த்தைகளை பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவை தெரிவிக்கிறது” **(சங். 19:1–2).** “கர்த்தருடைய வார்த்தையால் வானங்களும் அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப் பட்டது” **(சங். 33:6)** என சங்கீதக்காரன் இந்த இரண்டாம் வானத்தின் மகத்துவங்களை கண்டு வியக்கின்றான். நமது சின்ன அறிவின் மூலம் இந்த இரண்டாம் வானத்திலுள்ள சர்வ சேனை களை எல்லாம் அறிந்துகொள்ள முடியாவிட்டாலும் இவ்வானத்திலுள்ளவை களைக் குறித்து ஆய்வாளர்கள் கூறியுள்ளதை கவனிக்கலாம். இரண்டாம் வானத்திலிருக்கும் சூரியனும் அதை சுற்றியுள்ள ஒன்பது கோள்களும் செயல்படும் விதங்களை அறிந்துகொண்டால் இரண்டாம் வானம் எவ்வளவு

பெரியது என்பதையும், எத்தனை சிறப்பு வாய்ந்தது என்பதையும் நம்மால் புரிந்துகொள்ளமுடியும். இனி இரண்டாம் வானத்திலுள்ள கோள்களின் பின்னணிக் குறிப்புகளை சுருக்கமாய் கவனிப்போம்.

**சூரியன் (Sun):–** இதன் விட்டம் 14,00,000 கி.மீ (865,000 மைல்) இதன் வெப்ப நிலை 270 லட்சம் பாகை செல்சியஸ். இதன் துணைக் கோள்கள் 9 ஆகும்.

**புதன் (Mercury) :–** இதன் விட்டம் 4,849.6 கி.மீ. (3,031 மைல்) இது சூரியனிலிருந்து இதன் சராசரி தூரம் 5,76,000 கி.மீ. (3,60,00,000 மைல்) ஆகும். இது சூரியனை ஒருமுறை சுற்றிவர 88 நாட்கள் ஆகும். இதன் சுற்று வேகம் மணிக்கு 1,76,000 கி.மீ (1,10,000 மைல்கள், இதற்கு துணைக்கோள்கள் இல்லை.

**வெள்ளி (Venus) :–** இதன் விட்டம் 12,032 கி. மீ. (7,520 மைல்) சூரியனிலிருந்து இதன் சராசரி தூரம் 10,75,20,000 கி.மீ. (6,72,00,000 மைல்) ஆகும். இதன் வெப்ப நிலை 900 டிகிரி F ஆகும். இது சூரியனை ஒரு முறை சுற்றிவர 225 நாட்கள் ஆகும். இதற்கு துணைக்கோள்கள் இல்லை.

**புவி (Earth) :–** இதன் விட்டம் 12,739.2 கி.மீ. (7,962 மைல்) சூரியனிலிருந்து இதன் சராசரி தூரம் 14,88,00,000 கி.மீ. (9,30,00,000 மைல் ) ஆகும். இது சூரியனை ஒரு முறை சுற்றிவர 365 நாட்கள் ஆகும். இதற்கு துணைகோள் ஒன்று உண்டு.

**செவ்வாய் (Mars) :–** இதன் விட்டம் 6,755.2 கி.மீ. (4,222 மைல்) சூரியனிலிருந்து இதன் சராசரி தூரம் 22,56,00,000 கி.மீ. (14,10,00,000 மைல்) ஆகும். இதன் வெப்பநிலை 30 டிகிரி சென்டிகிரேடு. இது சூரியனை ஒரு முறை சுற்றிவர 687 நாட்களாகும். இதற்கு துணைக்கோள்கள் இரண்டு உள்ளன.

**வியாழன் (Jupiter) :–** இதன் விட்டம் 1,41,968 கி.மீ. ( 88,730 மைல்) இது சூரியனிலிருந்து சராசரி தூரம் 77,28,00,000 கி.மீ. (48,30,00,000 மைல் ) ஆகும். சூரிய மண்டலத்திலேயே மிகப் பெரிய கோளான இதில் 16 துணைகோள்கள் உள்ளன.

**சனி (Saturn) :–** இதன் விட்டம் 1,19,296 கி.மீ. (74,560 மைல்) இது சூரியனிலிருந்து சராசரி தூரம் 141,76,00,000 கி.மீ. (88,60,00,000 மைல்) ஆகும். சூரியனை ஒரு முறை சுற்றிவர 29.5 ஆண்டுகள் ஆகும். இதில் 20 துணைகோள்களுக்கு மேல் உள்ளன.

**யுரேனஸ் (Uranus) :–** இதன் விட்டம் 52,096 கி.மீ. (32,560 மைல்) இது சூரியனிலிருந்து சராசரி தூரம் 285,28,00,000 கி.மீ. (178,30,00,000 மைல்) ஆகும். சூரியனை ஒருமுறை சுற்றிவர 84 ஆண்டுகள் ஆகும். இதில் 15 துணைகோள்கள் உள்ளன.

**புளூட்டோ (Pluto) :–** இதன் விட்டம் 3,040 கி.மீ. (1,900 மைல் ) இது சூரியனிலிருந்து சராசரி தூரம் 586,56,00,000 கி.மீ. (366,60,00,000 மைல்) ஆகும். சூரியனை ஒருமுறை சுற்றிவர 248 ஆண்டுகள் ஆகும். இதில் ஒரு துணைகோள்கள் உள்ளது.

**நெப்டியூன் (Neptune) :-** இது ஐந்து வளையங்களுள்ள வெளி வளையம். பனி மய சந்திரத் துணுக்குள் நெருங்கியது. ஒரு உள் வளையம் மெலிந்த திடப்பொருளாலானது. இதில் 8 துணைக்கோள்கள் உள்ளன.

மேற்கூறிய கோள்கள் அனைத்தும் நாம் காணும் சூரியனை மையமாக சுற்றி வருகின்றன. தேவனை விசுவாசிக்கிறவர்கள் மனிதன், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், வான் மண்டலத்திலுள்ள கோள்கள் அனைத்தும் தேவனால் படைக்கப்பட்டவைகள் என்பதை ஆணித்தரமாய் நம்புவர். ஆனால் தேவனையும் வேதத்தையும் விசுவாசியாதவர்கள் மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்றும், உலகமும் அதில் உள்ளவைகளும் பரிணாம வளர்ச்சி யினால் வந்தவை என்றும் கூறுகின்றனர். இவர்கள் உலகத்திலுள்ள இயற்கையின் தோற்றத்தைக் குறித்து கணக்குகளை கூறும்போது இந்த கணக்குகள் அனைத்தும் வேதத்திற்குப் புறம்பாகவே இருக்கின்றன. வேதத்தை நம்பும் எவரும் அறிவியல் கூறும் இத்தகைய குறிப்புகளை ஏற்றுக்கொள்வதில்லை.

இரண்டாம் வானத்திலிருக்கும் சூரியனைக் குறித்தும், சந்திரனைக் குறித்தும், நட்சத்திரங்களைக் குறித்தும் அறிவியல் என்ன கூறுகிறது என்பதை கவனிக்கலாம். சூரிய மண்டலத்தின் நடு நாயகமாக இருப்பது சூரியனாகும். இதைச் சுற்றிலும் 9 கோள்களும் இருக்கின்றன. இதில் குறைந்த பட்சம் 72 இயற்கைத் துணைக் கோள்களான சந்திரன்களும், நூற்றுக்கணக்கான குறுங் கோள்களும் (Asteroids) ஆயிரக்கணக்கான வால் விண்மீன்களும் இருக்கிறது.

**சந்திரன்:** பூமியின் ஒரே ஒரு துணைக் கோள் சந்திரனாகும். இது சூரிய குடும்பத்தின் மற்ற துணைக்கோள்களைவிட தனிசிறப்பு மிக்கது. மற்ற துணைக்கோள்கள் தமது தாய்க்கோளின் பருமனில் எட்டில் ஒரு பங்கே அளவுடையவை. ஆனால் சந்திரனோ தன் தாய்க்கோளான பூமியின்

பருமனில் நான்கில் ஒரு பங்கே அளவுகொண்டுள்ளது. பூமியின் விட்டம் 12,700 கி.மீ என்றால், சந்திரனின் விட்டம் 3,475 கி.மீ ஆகும். அதாவது சந்திரனின் புறப் பரப்பளவு அட்லாண்டிக் கடலில் பாதி ஆகும். இதன் ஈர்ப்பு விசையும், புவி விசையில் ஆறில் ஒரு பங்காகும். நீள் வட்டத்தில் பூமி அருகுப் புள்ளியாக (Perigee) 3,64,000 கி.மீ தொலைவிலும், புவிக்கு அப்பால் புள்ளியாக (Apogee) 4,06,000 கி.மீ தொலைவிலும் சந்திரன் சுற்றிவருகிறது. அதாவது இது தன்னச்சில் ஒருமுறை சுழன்று கொள்ள 27 $^1/_3$ நாட்கள் ஆகிறது.

சந்திரனுக்குள் ஒரு சொட்டுத் தண்ணீரும் கிடையாது. இதற்குள் சுமார் 6000 மீட்டர் உயரமுள்ள சிகரங்கள் இருக்கின்றன. சந்திரனின் தென் துருவத்திற்கு அருகில் லீப்னிட்டீ மலைகள் (Liebnity Mountains) உள்ளன. அதாவது இந்த மலைகள் எவரஸ்ட் சிகரத்தை விடவும் உயரமானவைகள். இங்கு வளி மண்டலமும் காற்றும் இல்லாததால் நேரிடையாகப் பேசினாலும் கேட்காது, ஒலியும் பரவாது. இதன் வெப்பம் பகலில் 182 டிகிரி செல்சியஸ், இரவில் 100 டிகிரி செல்சியஸ் ஆகும்.

சந்திரனின் வெளிச்சம் பூமியை வந்தடைய 1.3 நொடிகளே ஆகின்றன. இத்தனை சிறப்புமிக்க சந்திரன் பூமிக்கு இரவில் ஒளியைக் கொடுக்கிறது.

**சூரியன்** :– சூரியனைக் குறித்த அளவுகள் நம்மை பிரமிக்க வைக்கின்றன. சூரியனின் விட்டம் 14,00,000 கி.மீ. ஆகும். இது பூமியின் விட்டத்தைப் போல் 109 மடங்கு பெரியது. இதன் எடை $2x10^{30}$ கிலோ கிராம் ஆகும். இது பூமியின் எடையை போல் 3,33,000 மடங்கு ஆகும். இதன் உள்ளக வெப்பநிலை 1,50,000 டிகிரி கெல்வின். ஒளி மண்டல வெப்பநிலை 5770 டிகிரி கெல்வின். இதன் சுழற்சிக் காலம் 25.38 நாட்கள் (பூமியிலிருந்து பார்த்தால் 33 நாட்கள்). பூமியிலிருந்து சூரியன் 149.8 கோடி கி.மீ. தூரத்தில் உள்ளது. சூரிய ஒளி பூமியை வந்துசேர 8 நிமிடம் 16.6 நொடிகள் ஆகின்றன. அதாவது பூமியிலிருந்து ஒரு ஜெட் விமானத்தை ஒரு மணிக்கு 1000 கி.மீ. வேகத்தில் நிற்காமல் அனுப்பினால் அது சூரியனைச் சென்றடைய 17 ஆண்டுகள் ஆகும். அத்தனை உயரத்தில் இந்த சூரியன் வீற்றிருக்கிறது.

**விண்மீன்கள்** – இரண்டாம் வானத்தின் மொத்த பகுதியில் 98 சதவிகிதம் விண்மீன்களே இருக்கின்றன. மீதமுள்ள 2 சதவிகிதம் விண்மீன்களி டையே உடுமண்டல வளிமமும், தூசியுமே இருக்கின்றன. பெரும்பாலும் விண்மீன்கள் கூட்டமாகவே நுழைய முயலுகின்றன. தனியே போகும் சில ஒற்றை விண்மீன்கள் அப்படி இயங்குவதில்லை. இந்த ஒற்றை

விண்மீன்கள் (Single Stars) விண் மீன்களின் தொகையில் 25 சதவிகிதமும். இரட்டை விண்மீன்கள் (Double Stars) 36 சதவிகிதமாகும். மற்ற வின்மீண்கலோ பன்மீன் (Multiple Stars) என அழைக்கப்ப டுகின்றன. யோபு 22:12 ம் வசனத்தில் நட்சத்திரங்கள் மிக உயரத்தில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. பூமிக்கு வெகு அருகில் உள்ள நட்சத்திரம் புராக்ஸிமா சென்டாரி என்ற நட்சத்திலிருந்து ஒளியானது பூமியை வந்துசேர நான்கு ஒளி ஆண்டுகள் ஆகின்றன. (ஒரு ஒளி ஆண்டு என்பது 1 வினாடிக்கு 1,86,273 மைல் வேகத்தில் ஒரு ஆண்டு முழுவதும் சுற்றிவரும் தூரமாகும்) துருவ நட்சத்திரம் என்பது 300 ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ளது. அறிவியல் விஞ்ஞானிகள் ரேடார் என்ற தொலைநோக்குக் கருவிகளின் மூலம் 2000 மில்லியன் ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ள நட்சத்திரங் களையும் கண்டுபிடித்துள்ளனர்.

சந்திரன் பூமியிலிருந்து 1/4 மில்லியன் மைல் தொலைவில்தான் உள்ளதென்றும், சூரியன் 93 மில்லியன் மைல் தொலைவில் உள்ளதென்றும், நட்சத்திரங்கள் சுமார் 100 மில்லியன் மைல் தொலைவு வரை உள்ளதென்று வான்வெளி ஆராட்சியாளர்கள் கி.பி. 1930 – ம்ஆண்டு வரை நம்பிவந்தனர். ஆனால் அவர்கள் நம்பிவந்த கூற்று தற்பொழுது மாற்றப்பட்டுள்ளது. இரண்டாம் வானத்திலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை சுமார் 40 Sextillion. அதாவது $40^{22}$ நட்சத்திரங்கள் இரண்டாம் வானத்தில் உள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

இந்த விண்வெளியின் ஓரத்திலே சந்திரன் இருக்கிறது. மிக பறந்துகிடக்கும் விண்வெளியானது மனிதனின் கற்பனைக்கும் கணிதத்திற்கும் இன்னும் எட்டாத உயரத்திலேயே இருக்கிறது. மனிதன் தான் அனைத்தும் அறிந்து விட்டதாய் நினைத்தாலும், அறியாத பல காரியங்கள் ஏராளமாயிருக் கின்றன. உதாரணமாக சில நட்சத்திரங்களின் தூரத்தை கணிப்பதற்கும் முடியாமல் ஆராட்சியாளர்கள் திகைக்கின்றனர். மனித கண்களுக்குத் தெரியும்படி அருகிலுள்ள நட்சத்திரத்தின் பெயர் ஆல்ஃபா செண்டவுரி (Alpha Centauri) என்ற நட்சத்திரத்தின் தூரம் சுமார் நாற்பதாயிரம் பில்லியன் கிலோ மீட்டர் தூராகும். ஒளியின் வேகத்தில் நாம் பயணம் செய்தால் சந்திரனை $1\,^{1}/_{2}$ நொடிக்குள் அடைந்துவிடலாம். இதே ஒளியின் வேகத்தில் பயணம் செய்தால் சூரியனை $8^{1}/_{2}$ நிமிடத்திற்குள் அடைந்துவிடலாம். ஆனால் இதே ஒளியின் வேகத்தில் ஆல்ஃபா செண்டவுரி நட்சத்திரத்தை அடையவேண்டுமென்றால் $4\,^{1}/_{2}$ ஆண்டுகள்

பயணம் செய்யவேண்டும்.

நாம் தொலைதூர கருவிகளின் மூலம் வானத்திலுள்ள திரள் கூட்டமான நட்சத்திரங்களை காணமுடிந்தாலும் அவைகளை அடைவதற்கு சுமார் 6500மில்லியன் ஒளி ஆண்டுகளுக்கும் அதிகம் தூரத்தில் உள்ளன. தற்பொழுது உள்ள நட்சத்திரங்களின் அளவை எண்ணும்போது இன்னும் சில உண்மைகள் தெரிய வருகின்றன. ஓரியன் பெல்ட்டில் (Orion belt) அமைந்துள்ள பெட்டகஸ் (Betel geuse) என்ற நட்சத்திரத்தின் விட்ட அளவு 500 மில்லியன் கிலோ மீட்டராகும். சூரியனை பூமி சுற்றிவரும் சுற்றுபாதையின் விட்ட அளவு 300 மில்லியன் கிலோ மீட்டர் தூரமே என்றால், இதைவிட 200 மில்லியன் கிலோ மீட்டர் தூரம், அதாவது 500 மில்லியன் கி.மீ. விட்ட அளவே ஓரியன் நட்சத்திரத்தின் அளவாகும். இதன் சராசரி குறுக்களவு 48,88,00,000 கி.மீ. தூரமாகும். அதாவது இந்த நட்சத்திரம் சூரியனைப்போல 350 மடங்கு பெரியதாகும்.

நட்சத்திரங்களின் கூட்டத்தில் ஒரு பகுதி பால் வெளிபாதை என்று அழைக்கப்படு கிறது. இப்பால்வெளிப்பாதையில் சுமார் 100,000 மில்லியன் நட்சத்திரங்கங்கள் அடங்கியுள்ளது. இந்த நட்சத்திரங்களுள் சூரியனும் ஒன்றாகும். நாம் காணும் பால்வெளி பாதையானது (Milky way) பல நட்சத்திர கூட்டங்களில் ஒன்றாகும். இவைகளை தொலைதூர கருவியின் மூலம் பார்த்தால் விண்வெளியில் சுமார் 100 மில்லியனுக்கும் மேலாக இருக்கும் என ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் அது குறைவென்று கூறி தங்களால் பார்க்கமுடியாத இன்னும் பல மில்லியன் நட்சத்திரங்கள் இருப்பதாய் கணிக்கின்றனர். இதில் அதிசயம் என்னவெனில் இத்தனை கோள்களும் தங்கள் தங்கள் ஓட்டபாதையில் ஒரு பிழையில்லாமல், ஒரு மாற்றமுமின்றி மிக சிறப்போடு இயங்கிக்கொண்டு இருக்கின்றன.

ஓரியன் எனப்படும் விண்மீன் ஒரு மிகப்பெரிய நட்சத்திரமாகும். இதன் சராசரி குறுக்களவு 48,88,00,000 கி.மீ ஆகும். அதாவது இந்த நட்சத்திரம் சூரியனைப் போல் 350 மடங்காகும். இன்னொரு விண்மீன் 64,00,00,000 கி.மீ விட்டமுடைய மிரா ஆகும். மாறி எனப்படும் விண்மீன்கள் (Viriable Stars) அதிகம் பொலிவுடையவை. நோவா (Novae) சூப்பர் நோவா (Super Novae) ஆகிய இரண்டு விண்மீன்களும் அளவில் வேறுபட்டாலும்,ஒளிரும் அளவில் ஒன்றாய் இருக்கின்றன.

பரிசுத்த வேதாகமத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைக் குறித்தே அதிகமாய் கூறியிருக்கிறதே தவிர மற்ற கோள்கள் சம்பந்தமான ஏதும்

கூறப்பட வில்லை. மாறாக அறிவியலின் அபரிதமான வளர்ச்சியால் மனிதனால் இற்கையாகக் காணகூடாதவைகளையும் கண்டுபிடித்துப் பார்க்கும் அளவிற்கு மனிதன் முன்னேறியிருக்கிறான். அறிவியல் கூறும் செய்திகள் பொய்யல்ல என்றாலும் பல நேரத்தில் அது வேதத்திற்கு விரோதமான செய்திகளையும் தெரிவிப்பதுண்டு. எனினும் அறிவியல் செய்திகள் பல வேத வசனத்தை மெய்பிக்கவும் மெய்தேவன் யார் என்று உறுதிப்படுத்தும் செய்கின்றன.

மேற்கூறிய இரண்டாம் வானத்தைக் குறித்த செய்திகளுக்கு ஆதி 22:17; உபா. 4:19; யோபு 38:31–33; ஏசா. 13:10; மத். 24:29 ஆகிய வசனங்கள் ஆதாரங்களாய் இருக்கின்றன. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை யைக் குறித்து, "வானங்கள் வெந்து மட மடவென்று அகன்றுபோம்" என்று பேதுரு கூறியது இந்த வானங்களைக் குறித்தே ஆகும் (2 பேது. 3:10–12),... வானங்கள் அசையும். சூரியனும் சந்திரனும் இருண்டுபோம். நட்சத்திரங் கள் ஒளிமழுங்கும் என்று கிறிஸ்துவின் பகிரங்க வருகையைக் குறித்து யோவேல் கூறியதும் இந்த வானமே ஆகும் (யோவே. 2:10).

தேவன் மூன்றாம் வானத்திலுள்ள பரலோகத்திலிருந்து செயல்படுகிறார் என்றால், பிசாசு என அழைக்கப்படும் சாத்தான் எவ்விடத்திலிருந்து செயல்படுகிறான் என பலர் கேள்விகேட்பதுண்டு. ஆகாய மண்டலத்தில் உள்ள பொல்லாத ஆவிகள் என வேதம் கூறுவதால் (எபே.6:12) ஆகாயத் தில் பொல்லாத ஆவிகள் இருக்கின்றன என நாம் அறியலாம். இந்த ஆவிகளுக்குத் தலைவனாக இருக்கிற சாத்தானும் இந்த ஆகாய மண்ட லத்தில் இருந்துதான் ஆட்சி செய்கிறான் என வேதப் பண்டிதர்கள் கூறுகின்றனர். ஆகாய மண்டலத்தில் சாத்தான் எங்கு இருப்பான் என குறிப்பாக கூறமுடியாவிட்டாலும், அவன் சந்திர மண்டலம் போன்ற ஒரு இடத்திலிருந்து செயல்படுகிறான். ஆகவேதான் சாத்தானை வணங்குகிற மக்களின் ஆச்சாரங்களும், சடங்குகளும், சனி மற்றும் செவ்வாய் கிரகணங் களின் குரு பெயர்ச்சி, வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி, இராகு காலம், எமகண்டம் போன்ற சகுணங்கள் சந்திரனின் சுழற்சியை வைத்தே நடக்கின்றன.

தேவ சமுகத்திலிருந்து தள்ளப்பட்ட லூசிபரும், அவனது தூதர்களும், ஆகாய மண்டலங்கள் என அழைக்கப்படும் இந்த இடத்திலிருந்தே கிரியை செய்து வருகின்றனர். பிசாசின் கிரியைகள் இந்த இரண்டாம் வானத்திலிருந்து நடப்பதால் இந்த மண்டலம் தற்போது சாத்தானின் ஆளுகையில் இருக்

கிறது. இயேசு கிறிஸ்து இரண்டாம் முறை வரும்பொழுது சாத்தானுடைய ஆளுகையிலிருக்கும் இந்த வானத்தை அழிப்பதால் இவைகள் மட மடவென அழிந்துபோம் என பேதுரு தெரிவித்திருப்பதில் நியாயம் இருக்கிறது.

**3. *மூன்றாம் வானம்* (Heaven) :–** பரலோகம் எங்கு இருக்கிறது என்ற கேள்விக்கான பதிலை நாம் இப்பொழுது நெருங்குகிறோம். பரலோகம் எனும் பரதேசு மூன்றாம் வானத்தில் இருக்கிறது என்பதை பவுலின் மூலம் அறிந்த படியால் முதல் இரண்டு வானங்களைக் குறித்தும் ஆராய்தோம். இப்போது மூன்றாம் வானத்திற்குள் வருகின்றோம். மூன்றாம் வானம் என்பது முதல் மற்றும் இரண்டு வானங்களுக்கு மேலே உள்ள வானமாகும். 1 இரா.8:30; யோபு 14:3; சங். 11:4; மத். 6:9; மத். 18:10; யோவா. 14:3 2 கொரி. 12:2; எபி. 9:24;1 பேது.1:4 ஆகிய வசனங்கள் மூன்றாம் வானத்திற்கு ஆதாரங்களாக இருக்கின்றன.

பரலோகம் என்பது தேவன் வாசம்பண்ணும் இடமென்பதை இப்புத்தகத்தின் முதலிலே படித்தோம். முதலாம் வானம் பூமியிலிருந்து சில ஆயிரம் கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இரண்டாம் வானத்திலுள்ள சூரியன் பூமியிலிருந்து 149.8 கோடி கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்த இரண்டாம் வானத்திலுள்ள சூரியனே இவ்வளவு உயர தூரத்தில் இருக்கும் போது மூன்றாம் வானத்திலுள்ள பரலோகம் எவ்வளவு உயர தூரத்தில் இருக்கும் என்பதை நம்மால் கணித்து கூறமுடியாதே!

இப்பொழுது மீண்டும் நாம் முதலில் கேட்கப்பட்ட கேள்விக்கு வருவோம். பரலோகம் எங்கே இருக்கிறது? என்ற இந்த கேள்விக்கு ஏசாயா 14:12–17 ஆகிய வசனங்களை கவனித்தோம். மீண்டும் அதே வசனத்தில் சாத்தான் கூறிய வார்த்தைகளை ஆராய்வோம். சாத்தான் தன் உள்ளத்திலே தேவனுக்கு விரோதமாய் சொன்ன வார்த்தையில் ***நான் வானத்திற்கு ஏறுவேன், நட்சத்திரங்களுக்கு மேலாக உயர்த்துவேன், உன்னதங் களில் ஏறுவேன்*** என்றான். இதில் வானத்திற்கு ஏறுவேன் என்பது முதலாம் வானத்தையும், நட்சத்திரங்களுக்கு மேலாக உயர்த்துவேன் என்பது இரண்டாம் வானத்தையும், உன்னதங்களில் ஏறுவேன் என்பது மூன்றாம் வானத்தையும் குறிக்கிறது.

உன்னதம் எனும் தேவனுடைய ஆராதனைக் கூடம் வடக்கு திசையில் இருக்கிறது. சந்திரனுக்கு மேலே சூரியனும், சூரியனுக்கு மேலே நட்சத்திரங்களும் இருக்கும் இரண்டாம் வானத்திற்கு மேல் மூன்றாம் வானம் இருக்கிறது. இந்த மூன்றாம் வானத்தில் தேவன் வீற்றிருக்கிறார். ஆகாயத்தி

லிருக்கும் நட்சத்திரங்களில் வெகு தூரத்தில் இருக்கும் நட்சத்திரத்தை மனித தொலை நோக்கிக் கருவியின் மூலம் (Telescopes) காணமுடிகிறது. பூமியிலிருக்கிற மனிதனுக்கும், இரண்டாம் வானத்திலிருக் கிற நட்சத்தி ரங்களில் கடைசி நட்சத்திரத்திற்கும் 500 மில்லியன் ஒளி ஆண்டுகள் இடைவெளி இருக்கின்றது. அதாவது பூமிக்கும் அந்தக் கடைசி நட்சத்திரத் திற்கும் இடையேயுள்ள தூரம் 500 மில்லியன் ஒளி ஆண்டுகள் ஆகும்.

ஒளியானது ஒரு வினாடிக்கு 1,86,000 மைல் வேகம் பயணப்படுகிறது. அதாவது ஒரு வினாடிக்கு 1,86,000 மைல் வேகத்திற்கு நாம் ஓடினாலும் இரண்டாம் வானத்திலுள்ள அந்த கடைசி நட்சத்திரத்தை அடைவதற்கு சுமார் 500 மில்லியன் ஆண்டுகள் ஆகும். உன்னதம் என அழைக்கப்படும் பிதாவின் ஆராதனைக் கூடமோ இந்தக் கடைசி நட்சத்திரத்தைக் காட்டி லும் தூரத்திலிருக்கிறது. வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் மகா ராஜா வின் நகரமாய் இருக்கிறது (சங். 48:2). அந்த நகரத்திலிருந்தே ராஜா ஆட்சிசெய்கிறார். வடக்கு திசையில் கடைசிநட்சத்திரத்திற்கு மேலே பரலோகம் இருப்பதால் பூமியின் வடதுருவம் உயர்ந்தும், தென் துருவம் தாழ்ந்தும் இருக்கிறது என்ற கூற்றை பலர் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஒரு வாகனத்தில் பூமியிலிருந்து சூரியனைக் கடந்து பலகோடி நட்சத்திரங் களையும் கடந்து கடைசி நட்சத்திரத்தை சேருவதற்கு 500 மில்லியன் ஆண்டுகள் ஆகுமென்றால் அதைவிட உயரத்திலிருக்கும் பரலோ கத்தை சென்றடைய எத்தனை மில்லியன் ஆண்டுகள் ஆகும்! ஆனால் தேவன் நம்மை அதிகம் நேசிப்பதால் நாம் அந்த உயரத்தை அடைய இயலாது என அறிந்து அவரே நம்மிடத்தில் இறங்கி இயேசு என்ற பெயரில் நமக்குள்ளே வாழவேண்டும் என விரும்புகிறார். அப்படி இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டவர்களை அவர் இருக்கும் இடத்தில் வைத்துக் கொள்வ தற்கு அழைத்துக்கொள்கிறார். அவரை விசுவாசித்து மரிக்கிறவர்கள் ஒரு இமைப்பொழுதில் அந்த இடத்தை அடைந்து விடுகின்றனர்.

12

## ஒருவர் மரித்த உடனே பரலோகம் செல்வாரா?

மரணம் என்பது இந்த பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவாகும். மரணத்தைக் காணாமல் உலகத்தில் எந்த மனிதனும் மறைந்தோ, தப்பித்தோ ஒடிவிடமுடியாது. "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபி. 9:27) என்பதால் இந்த மண்ணுலகத்தில் பிறந்த எவரும் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டிய கட்டாயம் இருக்கின்றது. தேவனது தற்சொரூப மான இயேசு கிறிஸ்து பரிசுத்தாவியினால் பிறந்தாலும் அவரும் மரணத்தை சந்தித்தார். உலகம் தோன்றினது முதல் ஏனோக்கு (ஆதி. 7:24), எலியா (2இரா. 2:11) ஆகிய இருவரும் மட்டுமே மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு சென்றவர் களென்றாலும் மனிதர்களாகிய இவர்கள் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும் என்பதால், இவர்களும் அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியில் பூமிக்கு வந்து மரணத்தைக் கண்டு பின்பு உயிரோடு எழும்புவார்கள் (வெளி. 11:2–12). எனவே மரணம் என்பது ஒரு மனிதனுக்கும் விதிவிலக்கல்ல.

பொதுவாக அனைவருக்கும் வரும் சந்தேகம் என்னவென்றால், மரித்த பின்பு என்ன நடக்கும்? என்பதே . சரீரத்திலிருந்து ஆவி பிரிந்ததும் சரீரம் ஒன்றுக்கும் உதவாமல் மண்ணோடு மண்ணாகிப் போகிறது. அவனது ஆத்துமா தேவனால் படைக்கப்பட்டபடியால். அது தேவனைப்போலவே அழியாத தன்மையுள்ளது. மரணத்திற்கு பின்பு அந்த ஆத்துமா நித்தியமான ஒரு இடத்தை அடையவேண்டும். தேவன் எப்படி நித்தியமானவராக இருக் கிறாரோ மனிதனுக்குள் அவர் வைத்த அந்த ஆத்துமாவும், நித்திய தன்மை யைக் கொண்ட ஆத்துமாவாக இருக்கிறது. ஆனால் இந்த ஆத்துமாவை பாவத்தால் நஷ்டப்படுத்தியவர்கள் நரகத்தில் சென்று அங்கு நித்தியத்தைக் கழிக்கின்றனர். பரிசுத்தமாக வாழ்ந்து ஆத்துமாவைக் காத்துக் கொண்டவர் களோ பரலோகத்திற்கு சென்று அங்கு தங்களின் நித்தியத்தைக் கழிக்கின்றனர்.

இந்த ஆவிக்குரிய உண்மையை அறிந்துகொள்ளாதவர்களே மரித்தபின் எங்கே செல்வோம் என்ற எண்ணமற்று இருக்கின்றனர். மனிதனுடைய சரீரம் மண்ணுக்கு செல்வதால் ஆத்துமா எங்கே செல்லும் என்ற கேள்வி

யோடு சந்தேகத்தில் மூழ்கிக் கிடப்போர் பலருண்டு. அப்போஸ்தலனாகிய பவுல் தனது நிருபத்தில் "ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப் படுகிறேன், தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது எனக்கு அதிக நன்மையாயிருக்கும்" என்றான் (பிலி.1:23). தேகத்தை விட்டுப்பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருப்பேன் என்பதன் பொருள், சரீரத்தை விட்டு உயிர் பிரிந்ததும் அடுத்த நொடிப்பொழுதில் பவுல் கிறிஸ்துவுடனே கூட இருப்பான் என்பதையே குறிக்கிறது.

மட்டுமல்ல "இந்த தேகத்தைவிட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" என பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்திலும் கூறியிருக்கிறான் (2கொரி.5:8). இதைப் பவுல் தனக்கு மட்டும் கூறாமல், சேர்த்து குடியிருப்போம் என்று சபையாரையும் விசுவாசிகளையும் இணைத்து கூறுகிறான். பவுலோ, கொரிந்திய விசுவாசிகளோ அல்லது நாமோ தேகத்தைவிட்டு பிரிந்ததும், அதாவது மரித்ததும் கிறிஸ்துவுடனே கூட இருப்போ மென்பதை கிறிஸ்தவத்தின் நம்பிக்கையாகும்.

மனிதன் ஆவியோடு ஆத்துமாவை உடையவன். அந்த ஆத்துமா சரீரம் எனும் போர்வையால் மூடப்பட்டுள்ளது. எல்லா மனிதர்களுடைய ஆத்துமாவும் சரீரத்தால் மறைக்கப்பட்டிருக்கிறது. சரீரம் என்பது மனிதனல்ல, சரீரம் என்பது மனிதனுடையது. அவனுடைய உடை, கைக்கடிகாரம், பணப்பை எப்படியோ அப்படியே அவன் மேலுள்ள சரீரமும் ஆகும். உண்மையான மனிதன், சரீரத்திற் குள்ளிருக்கிற ஆத்துமாவே. ஆதியில் தேவன் மனுஷனுக்குள் தம் ஆவியை ஊதினபோது அவன் ஜீவாத்துமாவானான் (ஆதி. 2:7). அப்படி அழியாத தேவனது சுவாசத்தால் உருவான ஆத்துமாவும் அழியாததாயிருக்கிறது. சரீரம் மண்ணிலிருந்து எடுத்து செய்யப்பட்டதால். அது மரித்ததும் மண்ணுக்கே திரும்புகிறது. ஆத்துமா தேவனது சுவாசத்தால் உண்டானபடியால் அது தேவனிடமே திரும்பிச் செல்கிறது. தேவன் எப்படி அழியாதவரோ அப்படியே தேவனது சுவாசமும் அழியாதது.

"உயர ஏறும் மனுஷனுடைய ஆவி" (பிர.3:21), என பிரசங்கி கூறியிருப்பதால் மனிதனின் ஆவி உயரத்தில் ஏறும் தன்மையுடையது என்பதை அறியலாம். எங்கே இந்த ஆவி உயர ஏறுகிறது? "ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகும் (பிர.12:7) என்ற பிரசங்கியின் பதிலின்படி, மனிதன் மரித்ததும் அவன் ஆவி அதைத் தந்த தேவனிடத்திற்கு உயரத்தில் ஏறிப் போகிறது என்பதற்கு ஐசுவரியவான் லாசரு உவமை நல்ல உதாரணமாகும்.

"ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும்

விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான் அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழும் துணிக்கைக ளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக் களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகா முடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்தில் அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்" (லூக். 16:19–23).

ஆண்டவர் கூறியுள்ள வசனத்தின்படி தரித்திரனான லாசரு மரித்ததும், தேவ தூதர்களால் கொண்டுபோகப்பட்டு ஆபிரகாமின் மடியில் விடப் பட்டான் என்பதால், லாசரு இரட்சிக்கப்பட்டவன் என்பது தெளிவாகிறது. ஐசுவரியவான் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். எனினும் அவனுக்கு தேவ தூதர்களோ, ஆபிரகாமின் மடியோ இல்லாதபடியால் அவன் இரட்சிக் கப்படாதவனாய் மரித்தான் என்பது தெளிவாகிறது. லாசரு, ஐசுவரியவான் இருவரும் மரித்தார்கள். இரட்சிக்கப்பட்டிருந்த லாசருவை தேவதூதர்கள் கொண்டு போய் ஆபிரகாமின் மடியில் சேர்த்தனர். ஆபிரகாம் விசுவாசி களின் தகப்பனான படியால், விசுவாசி மரித்ததும் அவன் மடியில் கொண்டு போய் விடப்பட்டான்.

லாசரு உலக ஐசுவரியத்தில் ஏழையாக இருந்தும் விசுவாசத்தில் ஐசுவரிய வானாயிருந்தபடியால் அவன் மரித்த இமைப் பொழுதில் தேவதூதர்கள் அவனைப் பரத்திற்கு கொண்டுபோய் விட்டனர். லாசரு நம்மைவிட ஏழையாய் இருந்தாலும் நம்மைப் போலவே விசுவாசியாய் இருந்தான். எனவே அவனது மரணத்திற்குபின் என்ன சம்பவித்ததோ அவ்வண்ணமே நமது மரணத்திற்கு பின்பும் சம்பவிக்கும். கர்த்தருடைய நாமத்தினால் அவரை ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகள் எவராயினும் **மரித்தால்** அடுத்த இமைப்பொழுதில் தேவ தூதர்களால் பரலோகத்திற்கு கொண்டு போகப்படுவர் என்பது ஆவிக்குரிய உண்மையாகும். (Absent from the body and Present with the Lord).

13

## ஆவி பிரிந்ததும் சரீரம் எப்பொழுது பரலோகம் செல்லும்?

கர்த்தருடைய பிள்ளைகள் மரித்ததும் அவர்களை அடக்கம் பண்ணுகின்றனர். அடக்கம் பண்ணப்பட்டது மண்ணுக்கு ஒப்பான மனிதனின் சரீரம் மட்டுமே. ஆத்துமாவோ பரலோகத்தில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறது. எனினும் சரீரமானது பரலோகத்தில் செல்லுமா? பூமிக்குரிய உடலோடு பரலோகத்திற்குள் வாசபண்ண வாய்ப்பிருக்கிறதா? ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் கர்த்தருடைய தானபடியால், மரித்து புதைக்கப்பட்ட சரீரம் ஏன் கர்த்தரோடு இருக்கக்கூடாது? போன்ற கேள்விகளை கேட்போரும் உண்டு.

பக்தனாகிய யோபு இவ்கேள்விக்குறிய பதிலை நமக்கு கூறுகிறான். "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நியக் கண்கள் அல்ல, என் கண்களே அவரைக்காணும் இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது" (யோபு.19:25–27) என்று யோபு சொன்ன வார்த்தைகளில் மீட்பர் உயிரோடிருக்கிறார், என் தோல் அழிந்தாலும், என் மாம்சத்திலிருந்து தேவனைப் பார்ப்பேன், என் கண்களாலேய அவரைப் பார்ப்பேன் என்று எதன் அடிப்படையில் சொன்னான்?

ஆண்டவர் இயேசு சொன்னார் "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவரது சத்தத்தைக் கேட்கும் காலம்வரும், அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" என்றார் (யோவா. 5:28–29). பிரேதக் குழிகளிலுள்ள **அனைவரும்** அவர் சத்தம் கேட்டு எழுந்திருப்பார்கள். இதையே பவுல் "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று, இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைக் கொண்டிருப்பது போல நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்" என்றான் (அப். 24:15). இதில்

உயிர்த்தெழுதல் நடக்கும் நாளில் பிரேதக் குழியிலுள்ள அனைவரும் அவர் சத்தத்தைக் கேட்டு உயிர்த்தெழுவார்கள் என்பது தெளி வாகிறது. அப்படி உயிர்த்தெழுகிறவர்கள் பூமியில் வாழ்ந்த உருவத்தைப் போன்ற சரீரத்தோடு உயிர்த்தெழுவார்களா என்ற கேள்வி எழுவதுண்டு.

உயிர்த்தெழுகிறவர்கள் எவ்வித சரீரத்தோடு உயிர்த்தெழுவார்கள்? "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பது இல்லை" (1 கொரி. 15:2) எனப் வேதம் கூறிய வார்த்தைகளை கவனித்தால், உயிர்த்தெழுதலில் இந்த பூமியில் இருக்கும் சரீரத்தோடு நாம் பரலோகம் செல்லமுடியாது. பூமிக்குரிய சரீரம் பரலோகத்தில் இடம் பெறாது என்பதையே இங்கு காணலாம். மாம்சத்திற்குரிய வாழ்க்கை ஆவிக்குரிய வாழ்க்கை என இரு வாழ்க்கை இருப்பதுபோல் , மாம்சத்திற்குரிய உருவம் என்றும், ஆவிக்குரிய உருவம் என்றும் இரு உருவங்கள் இருக்கின்றன. மாம்சத்திற்குரிய உருவம் இந்த பூமிக்குரியது. ஆவிக்குரிய உருவம் பரலோகத்திற்குரியது.

பூமிக்குரிய சரீரம் ஜென்ம சரீரம் (1 கொரி. 15:44), அழிவுள்ள விதை (1 கொரி. 15:36,43), பூமிக்குரிய மேனி (1 கொரி. 15:40), பூமிக்குரிய மகிமை (1 கொரி. 15:40), பலவீனமுள்ளது (1 கொரி. 15:43), என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இத்தகைய சரீரம் மகிமைக்குரிய வாழ்வை அடைய முடியாது. பூமிக்குரிய சரீரம் அழிவுள்ளதாகையால் அது வானத்திற்குரிய அழியாத வாழ்வை அடைய முடியாது. ஆனால் இந்த பூமிக்குரிய சரீரமானது மகிமையின் சரீரமாக மாற்றப்பட்டு பரலோகத்தில் பங்கடைகிறது. அந்த மகிமையின் சரீரமானது ஆவிக்குரிய சரீரம் (1 கொரி. 15:44) வானத்திற்குரிய மேனி (1 கொரி. 15:40), வானத்திற்குரிய மகிமை (1கொரி. 15:40), பலமுள்ளது (1 கொரி.15:43), அழிவில்லாதது (1 கொரி. 15:42), என்றே அழைக்கப்படுகிறது.

ஜென்ம சரீரமாகிய இந்த சரீரமானது மகிமையில் பிரவேசிக்க ஆவியின் சரீரமாக மாற்றப்படுகிறது. பூமிக்குரிய மேனி அதாவது பூமிக்குரிய உருவம் மாற்றப்பட்டு வானத்திற்குரிய உருவத்தை அடைகிறது. "நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி. 3:21) எனப் பவுல் கூறியிருப்பதால், நாம் பரலோகத்தில் பூமிக்குரிய சரீரத்தோடிருக்க மாட்டோம். மாறாக பூலோகத்தில் இருந்தபோது எந்த உருவத்தில் இருந்தோமோ, அதே உருவத்தில் மகிமை நிறைந்த ஆவிக்குரிய சரீரத்தில் இருப்போம்.

14

# பரலோகத்தில் ஒருவரையொருவர் அடையாளம் காண முடியுமா?

பூமியில் நாம் ஒருவரது பெயரை வைத்தும், முகவரியை வைத்தும், நிறம் மற்றும் உடல் அடையாளங்களை வைத்தும் ஒருவரை ஒருவர் கண்டு கொள்கிறோம். ஆனால் பரலோகத்தில் இப்படிப்பட்ட அடையாளங்களோடு கண்டுகொள்ள முடியுமா? இக்கேள்விக்கு இயேசு கிறிஸ்து தமது செய்தியில் கூறிய பதிலையும், மறுரூப மலையில் நடந்த நிகழ்ச்சியையும் தியானித்தால் மேற்கூறிய கேள்விக்கு பதிலைக் கண்டுபிடித்துவிடலாம்.

"அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக இராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு பந்தியிருப்பார்கள்" என ஆண்டவர் கூறினார் (மத். 8:11). பூமியிலிருந்து சகல இடங்களிலுமிருந்து வரும் மக்களும், ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபோடு பரலோகில் பந்தியிருப் பார்கள் என்றால் பரலோகத்திற்கு வருகிற மக்களுக்கு ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு யாரென்று திட்டமாய் தெரிந்திருக்குமல்லவா ! அங்கே ஒருவரையொருவர் கண்டுபிடிக்க முடியாமல் குழம்ப வேண்டிய அவசியம் இருக்காது. இயேசுவை எப்படிக் கண்டுகொள்ள முடியுமோ, அப்படியே முற்பிதாக்களையும் கண்டு கொள்ள முடியும். முற்பிதாக்களை எப்படிக் கண்டு கொள்ளமுடியுமோ அதுபோல அங்கே நம்மையும் பிறர் அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.

பரலோகத்தில் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்ள முடியுமா என்ற கேள்விக்கு வேதத்தில் நல்ல உதாரணம் இருக்கின்றது. ஆறு நாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத் தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி; ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு

கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான் ( மத்.17:1–4). இந்நிகழ்ச்சியில் அடையாளங்களைக் குறித்து தெளிவான பதில்கள் இருக்கின்றன.

இந்த சம்பவத்தில் இயேசுவோடு மோசேயும், எலியாவும் பேசுகிறார்கள். அதேபோல் இயேசுவோடு பேதுருவும், யாக்கோபும், யோவானும் இருக்கிறார்கள். மோசே எலியாவுக்கு முன் வாழ்ந்தவன். எலியா இயேசுவுக்குமுன் வாழ்ந்தவன். அவர்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தாலும், மோசேயும், எலியாவும் சேர்ந்து இயேசுவுடம் நின்றனர். இதில் மோசேவுக்கு எலியாவைத் தெரிந்திருக்கிறது, அப்படியே எலியாவுக்கும் மோசேயைத் தெரிந்திருக்கிறது. அவ்வண்ணமே பேதுருவுக்கு மோசேயும், எலியாவும் யார் என்று அடையாளம் தெரிந்தபடியால் அவர்களுக்கும் கூடாரம் போடும்படி கேட்டான். இந்த தரிசனத்தின் மூலம் பழைய ஏற்பாட்டு பக்தர்கள் புதிய ஏற்பாட்டில் அடையாளம் கண்டுகொள்ளப்படுவதையும், புதிய ஏற்பாட்டு பக்தர்கள் பழைய ஏற்பாட்டு மக்களை அடையாளம் கண்டுக்கொள்ள முடிவதையும் காணலாம். அவர்களை நாம் எப்படி அடையாளம் கண்டு கொள்ள முடியுமோ, அதுபோல நாமும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.

15

## பரலோகத்தில் நமது பெயர்கள் மாற்றப்படுமா?

ஒருவருக்கு பெயர் என்பது மிக முக்கியமானது. பெயரில்லாமல் உலகில் எந்த உயிரும் எந்த பொருளும் இல்லை. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் அனைத்து மிருகங்களுக்கும் பெயரிட்ட போது அது அப்படியே ஆனது. அவ்வண் ணமே முற்பிதாக்களின் குடும்பத்தில் அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கு பெயர் வைத்தபோது, அவர்கள் எந்த சூழ்நிலையில் பிள்ளையைப் பெற்றார்களோ, அந்த சூழ்நிலைக்கு ஏற்றவண்ணம் பொருளோடு பெயர் வைத்தனர் (ஆதி. 4:25; 29:32–35; 30:6,8,13,18,20,23). பெயர் வைக்கும் உரிமையை தேவன் பெற்றோருக்கு கொடுக்கிறார். புதிய ஏற்பாட்டில் யோவான் ஸ்நானகனுக்கு பெயர் சூட்டியதும், இயேசுவுக்கு பெயர் சூட்டியதும் தேவனே என்பதை கவனிக்கலாம் (லூக். 1:13; மத். 1:23). நமது குடும்பத்தில் குழந்தையை பிரதிஷ்டை செய்யும்போது கர்த்தருடைய நாமத்தில் அதற்கு பெயர் சூட்டுகிறோம். இதில் பெற்றோரின் பங்கும்

கர்த்தரின் பங்கும் இடம்பெறுகிறது.

மோசே பூமியில் வாழ்ந்தபோது மோசே என்றே அழைக்கப்பட்டான். அந்தப் பெயரே வேதம் முழுவதும் இடம்பெற்றிருக்கின்றது. மறுரூபமலையில் சீடர்களுக்கு தரிசனமான மோசே, எலியாவையும் இயேசு மோசே எலியா என்றே அழைத்தார். முற்பிதாக்கள் என்று அழைக்கப்படும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு யாவரும் பூமியில் எந்தப் பெயரோடு அழைக்கப்பட்டார்களோ, அதே பெயரோடே வேதம் முழுவதும் அழைக்கப்படுகிறார்கள். இயேசுவும் அவர்களை அதே பெயரில்தான் அழைத்தார். இதில் எவ்வித மாற்றமும் இல்லை. சிலருக்கு இயேசு துணைப் பெயரிட்டு அழைத்தார். உதாரணமாக பேதுருவை கேபா என்று அழைத்தார். அது அவனுக்கு அப்படியே வழக்கத்திலிருந்தது.

ஜீவ புஸ்தகத்தில் ***பெயர் எழுதப்பட்டவர்களே*** பரலோகத்தில் இடம் பெறுவார்கள். (வெளி. 20:15). அதில் எழுதப்படாதவர்கள் நரகத்திற்கு பாத்திரமாவார்கள். ஜீவ புஸ்தகத்தில் எந்தப் பெயர் எழுதப்பட்டிருக்கும் எனக் கேட்கலாம். கர்த்தருடைய நாமத்தில் நமக்கு வைக்கப்பட்ட பெயரும் இருக்கும். நம் பெற்றோர் சூட்டிய பெயரும் இருக்கும். உதாரணமாக தரித்திரனான லாசருவின் பெயர் பூமியில் லாசரு என்றே அழைக்கப்பட்டது. பரலோகத்தில் ஆபிரகாம் மடியில் அவன் இருந்தபோதும், அவன் லாசரு என்றே அழைக்கப்பட்டான் (லூக். 16:25). அதுபோல் ஐசுவரியவான் ஆபிரகாமைப் பார்த்து, என் தகப்பனாகிய ஆபிரகாமே என்று அழைத்தான் (லூக். 16:24). பூமியில் வழங்கப்பட்ட பெயர் பரலோகத்தில் மாறுவதில்லை என்பதற்கு இதை விட சிறந்த உதாரணம் தேவையில்லையே.

16

## மரித்த பின் சரீரம் மண்ணுக்கும், ஆவி விண்ணுக்கும் பிரிந்து விடுகிறது. இவைகள் எப்பொழுது மீண்டும் சந்திக்கும்?

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு மனிதன் மரிக்கும்போது அவனது ஆன்மா மேலே கிறிஸ்துவிடம் செல்கிறது. அவனது சரீரமோ மண்ணுக்குள் புதைக்கப்படுகிறது. இந்த புதைக்கப்பட்ட சரீரம் அழுகி,

மண்ணுக்கு மண்ணாகவும், புழுதிக்கு புழுதியாகவும் மாறிவிடுகிறது. இவ்விதம் கிறிஸ்துவுக்குள் மரித்த ஒருவனுடைய சரீரத்தைப் புதைத்து ஒருநாள் ஆகலாம், ஒரு வாரம் ஆகலாம், ஒரு மாதம் ஆகலாம், ஒரு வருடம் ஆகலாம், ஏன்? நூறு வருடங் களோ, ஆயிரம் வருடங்களோ ஆகலாம். புதைக்கப்பட்ட சரீரம் உருத்தெரியாமல், அடையாளமின்றிப் போகலாம். என்றாலும் எந்த ஆவி எந்த சரீரத்திலிருந்து போனதோ அதே ஆவி அதே சரீரத்தோடு இணையும். இதில் எவ்வித குழப்பங் களோ மாற்றங்களோ நடக்காது. இது தெய்வீக செயலாய் இருக்கிறபடியால் இதை ஒருவரும் புரிந்துகொள்ள முடியாது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பிரதான தூதனுடைய சத்தம் தொனிக்கும் போது உயிர்த்தெழுதல் நடக்கும். மரித்தோர் எவரும் உயிர்த்தெழும் நிகழ்ச்சியாக அது இருக்கும். அப்பொழுது மரித்து கிறிஸ்துவோடிருக்கிற ஆத்துமாக்கள் பூமியில் புதையுண்ட அவரவர் சரீரங்களோடு இணைந்து மகிமையின் சரீரமாய் எழும்புவர். இந்நிகழ்ச்சி கண்ணிமைக்கும் நேரத்தில் நடப்பதாகும். இத்துடன் இயேசுவும் பரிசுத்தவான்களும் வானத்திலிருந்து இறங்கி வர பூமியிலிருக்கும் விசுவாசிகள் மறுரூபமடைந்து மகிமையின் சரீரத்தோடு அவருக்கு எதிர் கொண்டுபோக இருகூட்டமும் சந்திக்கும். அதன்பின் 1 தெச 4:17 சொல்லுகிற படி "இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தரோடு கூட இருப்போம்" என்பதே வேதம் கூறும் பதிலாகும்.

## 17

## தற்கொலை செய்து கொண்டவர்கள் பரலோகம் செல்வார்களா?

தற்கொலை என்பதற்கும், கொலை என்பதற்கும் அதிக வேறுபாடு இல்லை. ஏனென்றால் கொலை என்பது அடுத்தவரைக் கொல்வது, தற்கொலை என்பது தன்னையே கொல்வது. இவ்விரண்டும் உயிரைக் சொல்லும் செயல்கள் என்பதால் அதை யார் செய்தாலும், யாருக்கு செய்தாலும் அது கொலையே ஆகும். கொலை செய்யாதிருப்பாயாக தேவன் கூறினார். கொலை பாதகன் தேவ இராஜ்பத்தை சுதந்தரிக்கமாட்டான் என்று வேதம் சொல்லுகிறது (1 யோவா. 3:15 ; வெளி. 21:8 ; 22:15). கைகளில்

சுத்தமுள்ளவன் அவர் பர்வதத்தில் வாசம் பண்ணுவானெனில் (சங். 24:4 ; நீதி. 6:17), கொலை செய்தவன் கைகளில் சுத்தமற்றவனானபடியால் பரலோகத்தில் எப்படி வாசம் பண்ணமுடியும்.?

தேவன் மனிதனைப் படைத்து அவனுக்கு மிருகங்களையும் ஜீவராசிகளையும் கொடுத்து, அதை ஆண்டுக்கொள்ளுங்கள் என ஆசீர்வதித்தார் (ஆதி. 1:28). மிருங்களை ஆண்டுகொள்ள அவரே அனுமதி கொடுத்ததால் அவைகளை அடித்து புசிக்கவும் உரிமை தந்தார். இதற்கு ஆதாரமாக புதிய ஏற்பாட்டில் பேதுரு கண்ட தரிசனத்தில் அடித்து புசி என்றார் (அப். 11:7). இதன் அடிப்படையில் மிருகங்களை அடித்துப்புசிப்பது கொலையல்ல. மிருகங்களுக்கு ஆத்துமா என்பது இல்லாதபடியால் இதை தேவன் அனுமதித்தார். மனிதனுக்கு ஜீவாத்துமா இருக்கிறபடியால் அவனை கொல்லும் போது தேவன் படைத்த ஆத்துமாவுக்கு ஊறுவிளைப்பதாகும். அவர் கரத்தின் சிருஷ்டியை கொல்வதை அவர் அனுமதிக்காததால் மனிதனைக் கொலை பாவமாகிறது. தேவனே ஒருவருக்கு உயிர்கொடுத்து, உருவம்கொடுத்து பூமிக்கு அனுப்புகிறார். அப்படி உயிர்பெற்றவர் எங்கு வாழவேண்டும்? எப்படி வாழ வேண்டும்? எத்தனை நாள் வாழவேண்டுமென் பதையும் தீர்மானித்தும் அனுப்புகிறார். எந்த நாளில் பிறந்து எந்த நாளில் மரிக்கவேண்டும் என தேவன் முன்குறித்திருப்பதால், அவர் குறித்த நாளில் பிறக்கிற எவனும், அவர் குறித்த நாளில் மரணம் அடையும்வரை காத்திருக்கவேண்டும். தன்னுடைய மரண நாளுக்கு முன் தன் உயிரை மாய்த்துக்கொள்வது தேவ நியமனத்தையும், அவர் திட்டத்தையும், அவர் சித்தத்தையும் மீறுவதாகும். மாத்திரமல்ல அது தேவனது ஜீவனையே அழிப்பதற்குச் சமானமாகும். ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வாசம் செய்வது தேவனது ஜீவனாகும். எனவே கொலைசெய்கிறவன் அல்லது கொலை செய்து கொள்கிறவன் தேவ கட்டளையை மீறுவதோடு யின்றி தேவ சித்தத்தையும் அழித்துவிடுவதால் அவன் தேவனோடு பரலோகில் வாழும் வாய்ப்பை இழந்து விடுகின்றான்.

18

# அகால மரணமடைந்த விசுவாசிகள் நித்தியத்தை எங்கே செலவிடுவர்?

மனிதர்கள் ஒவ்வொவருக்கும் தங்களது வயதான நாளில் வியாதியின்றி நலமாக இறப்பதை பொதுவாக விரும்புவர். தான் வயதாகிவிட்ட பின்பே மரிப்பேன் என்று ஒவ்வொருவரும் நினைக்கின்றனர். ஆனால் இதற்கு எதிர்மாறாக அகால மரணம் என்பது சிலரை எதிர்பார்க்காமல் சந்திக்கின்றது. விபத்துகளில் ஏற்படும் மரணம் மட்டுமின்றி இயற்கை சீற்றங்கள் கொலை, தீவிரவாதம், கொடுமை, சித்திரவதை போன்றவற்றால் வரும் மரணமும் இதில் அடங்கும். அகால மரணம் எவ்விதபாகுபாடின்றி எவரையும் சந்திக்கலாம். பல நேரங்களில் பாவிகளும், துன்மார்க்கரும் மட்டுமே அகால மரணமடைவர் என நினைக்கின்றோம். ஆனால் விசுவாசிகளும், கர்த்தருடைய பிள்ளைகளும், தேவனது ஊழியக்காரர்களும் அகால மரணத்திற்கு தப்புவதில்லை.

நல்லவர்கள் அகால மரணமடைவதற்குரிய காரணத்தை சரியாக கண்டு பிடிக்க முடியவில்லை யென்றாலும் இதற்கு பிரசங்கி புத்தகத்தில் சரியான பதில் கொடுக்கப் பட்டுள்ளது. "எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கும்; சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும், நற்குணமும் சுத்தமுமுள்ளவனுக்கும் சுத்த மில்லாதவனுக்கும், பலியிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும், ஒரேவிதமாய் சம்பவிக்கும்; நல்லவனுக்கு எப்படியோ பொல்லாதவனுக்கும் அப்படியே; ஆணையிடு கிறவனுக்கும் ஆணையிட பயப்படுகிறவனுக்கும் சமமாய் சம்பவிக்கும்" (பிர. 9:2).

"தன் காலத்தை மனுஷன் அறியான்; மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவது போலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவதுபோலவும், ***மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள்***" (பிர. 9:12). இவ்வசனங்களில் எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கும் என்பது விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும், நல்லவர்களுக்கும், கெட்டவர்களுக்கும் பொருந்தும். மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடுதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவர் எனபிரசங்கி கூறுயிருப்பது விபத்தையும் அதினால் வரும்

மரணத்தையுமே அர்த்தப்படுத்துகிறான்.

விபத்தும் அகால மரணமும் நமது நாட்களில் மட்டுமல்ல வேதாகமம் நாட்களிலும் நடந்திருக்கின்றன. ஆபேல் தன் சகோதரன் காயீனால் கொலை செய்யப்பட்டு மரித்தது (ஆதி. 4:8). தேராகு என்பவனுக்கு இருந்த மூன்று மகன்களில் மூன்றாம் மகனான ஆரான் (லோத்துவின் தகப்பன்) தன் தந்தை மரிக்கும் முன்னே மரித்தது (ஆதி. 11:28). பிலாத்து சில கலிலேயரைக் கொலை செய்தது (லூக். 13:1). சீலோவாமிலே கோபுரம் விழுந்து 18 பேரை பலிகொண்டது (லூக். 13:4). எல்லாமே அகார மரணமே எனினும் கொலை செய்யப்பட்டவர்களுள், வால வயதில் மரித்தவர்களுள், கோபுரம் இடிந்து விபத்தால் இறந்தவர்களுள் விசுவாசிகளும் அடங்குவர்.

ஆபேல், சகரியா, யோவான் ஸ்நானகன், யாக்கோபு, ஸ்தேவான் போன்ற பலர் இரத்த சாட்சிகளாய் மரித்தவர்களுள் அடங்குவர். ஊழியர்கள் கொலை செய்யப்பட்டார்களெனினும் மரிக்கும் முன்னே இவர்கள் தேவனை தங்களுடைய தெய்வமாக ஏற்றுக்கொண்டிருந்தபடியால் மரித்தும் தேவ னோடு இருந்தனர். உதாரணமாக ஆபேலின் இரத்தத்தின் சத்தமும் தேவனை நோக்கிக் கூப்பிட்டது (ஆதி. 4:10). ஸ்தேவான் உயிர் விடும்போது தேவனை தரிசித்தான் (அப். 7:56).

எபிரேயர் நிருபத்தில் விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம்பெறும் பலர் தங்கள் விசுவாசத்திற்காய் அகால மரணத்தை சந்தித்து விசுவாசத்தோடு மரித்தனர் (எபி. 11:35). கிறிஸ்துவின் சீடர்களில் யோவானைத் தவிர மற்ற அனைவரும் அகால மரணம் கண்டு இரத்த சாட்சியாய் மரித்தனர். இவர்களில் யாரும் நரகம் செல்லவில்லை என்பதற்கு தேவன் சாட்சியிடு கிறார். அகால மரணம் அடைந்த விசுவாசிகள் பரலோகம் செல்வார்கள் என்பதற்கு இவைகள் சரியான முன்னுதாரணமாகும். ஆனால் இரட்சிக்க படாதவர்களோ, பின்மாற்றக் காரரோ அகால மரணம் அடைந் தால் அவர்கள் பரலோகம் செல்லமுடியாது. யூதாஸ் காரியோத் தூக்குப்போட்டு கொண்டு இறந்தான். இது தற்கொலையான அகால மரணம் என்றாலும் அவன் மோட்சம் அடைந்ததாக வேதத்தில் ஆதாரமில்லை.

மரணம் எவ்விதத்திலும் வரலாம். விபத்து எந்நேரத்திலும் எப்படியும் எவ்விடத்திலும் நிகழலாம். இதை முன்கூட்டியே எவரும் தெரிவிக்க முடியாது. இயேசுவானவருக்கு தன்னை அர்ப்பணித்து அவரை உள்ளத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒருவர் மரணத்தைக் கண்டு அஞ்சி மரண பயத்தால் வாடமாட்டார். கிறிஸ்து மரணத்தை வென்றதால், கிறிஸ்துவை

உடையவர்களும் மரணத்தை வென்றுவிடுகின்றனர். எனவே இவர்களின் சரீரப் பிரகாரமான மரணம் எங்கு நடந்தாலும், எப்படி நடந்தாலும் அவர்கள் கர்த்தரோடு இருப்பது உண்மையாகும்.

19

## ஒருமுறை கூட இயேசுவைக் குறித்து கேள்விப் படாது இறந்தவர்கள் பரலோகம் செல்வார்களா?

மரித்தபின் மனிதர்கள் எங்கே செல்வார் என்று தீர்மானிப்பதும், எங்கே இருப்பார் என தீர்ப்பளிப்பதும் நமக்குக் கொடுக்கப்பட்ட பதவியல்ல. இயேசுவைக் குறித்து கேள்விபடாது வாழ்வோருக்கு இயேசுவைக் குறித்து சொல்லுவதே ஆண்டவர் நமக்கிட்ட கட்டளையாகும். இயேசுவை அறிந்த வர்கள் அவரை அறியாதிருப்போருக்கு சொல்ல கடமைப்பட்டவர்கள். அவர் நமக்குக் கொடுத்த கடமையையும், நமக்கு அருளின கட்டளையையும் நாம் செய்யா திருந்தால் அதுவே நம்முடைய தவறாகும். அதற்காக நூறு, இருநூறு ஆண்டுகளுக்கு முன் இயேசுவை அறியாமல் மரித்தவர்களைக் குறித்து நாம் கவலைப்படதேவையில்லை. அவர்கள் வாழ்ந்த நாட்களில் நாம் வாழவில்லை. நாம் வாழும் நாட்களில் அவர்களும் இல்லை. அந்த இரத்தப்பழி நம்மீது சுமராது.

நாம் வாழும் நாட்களில் இருக்கும் மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதே ஆண்டவர் நமக்கிட்ட கட்டளையாகும். இந்த தலைமுறையில் வாழ்வோருக்கு இந்தத் தலைமுறை விசுவாசிகளே இயேசுவை அறிவிக்கும் பொறுப்பைப் பெற்றவர்கள். இன்றைய தலைமுறை மக்களுக்கு இன்றைய தலைமுறையி னரே பொறுப்பு என்பதால். இவர்களுக்கு இயேசுவை அறிவிக்காமலிருந் தால் அந்த இரத்த பழியே நம்மீது சுமரும். இன்று கண்முன் அழிந்து போகிற நம் ஆத்துமாக் களை மீட்க முயற்சிப்போம். தேவன் பரலோகத்திற்கு எவரையெல்லாம் முன்குறித்திருந்தாரோ அவர்களெல்லாம் பரலோகில் பங் கடைவர். அதைக் குறித்த விவாதமோ ஆராட்சியோ நமக்கு தேவையற்றது. நாம் பரலோகில் பங்கடைவதுபோல் நம் கண்முன் தெரியும் அனைவரும் பங்கடையவேண்டுமென பாடுபடுவதே நமக்குக் கொடுத்த ஊழியமாகும்.

20

## சிறு பிள்ளைகள் மரணம் அடைந்தால் பரலோகம் செல்வார்களா?

இயேசுவை ஏற்றுக்கொள்ளாத புத்திதெரியாத, உலகம் அறியாத, பாவம் என்பது எதுவென்று புரியாத சிறுவர்கள் தங்கள் சிறு வயதில் மரணம் அடைந்தால் எங்கே செல்வார்கள் என்பது பலரது சந்தேகமாகும். இதற்குரிய பதில் நமக்கு வேதத்தில் வெளிப்படையாக இல்லையென்றாலும், வேத அடிப்படையில் சில வசனங்களிலிருந்து நாம் பதிலைப் பெறலாம். ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் உருவத்தில் பெரியவர்களாய் இருந்தாலும் அவர்கள் தேவனது குழந்தைகளைப் போல இருந்தனர். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந் தார்கள் (ஆதி. 2:25) என்பது அவர்களில் பாவம் இல்லாத குழந்தை உள்ளத்தைக் காட்டுகின்றது. அவர்கள் பாவம் செய்தபின்பு கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தீமை அறிந்தார்கள் (ஆதி. 3:5,7). பிறகு தேவனது சந்நதிக்கு விலகி தோட்டத்தில் ஒளிந்தார்கள் (ஆதி. 3:8). அவர்கள் நன்மை தீமை அறியத்தக்கவராய் மாறினார்கள் (ஆதி. 3:22).

இவ்வசனங்களில் மனுஷன் பாவமில்லாதிருந்தபோது குழந்தையைப்போல இருந்தான். பாவம் செய்தபோது அவன் குழந்தைக்கேற்ற தகுதியிலிருந்து பாவி எனும் கீழ்நிலைக்கு தள்ளப்படுகிறான். ஒரு சிறு பிள்ளைக்குள் நன்மை தீமை அறியும் வயதிலிருந்தே பாவம் கிரியை செய்கிறது. நன்மை தீமை எதுவென அறியாதிருக்கிற சிறுப்பிள்ளையின் மனச்சாட்சி சுத்தாமானபடியால் அது அவர்களை குற்றவாளி என தீர்க்கவில்லை. பாவத்தைக் குறித்து ஒன்றும் அறியாத ஒரு சிறுபிள்ளையை கந்தகம் எரிகிற அக்கினி கடலில் தேவன் தள்ளிவிடு கிறதற்கு அவர் மனசாட்சியற்ற கல்மனம் கொண்டவர் அல்லவே. நியாயத் தீர்ப்பில் **அவனவன் செய்த** கிரியைகளுக்குத் தக்கபலன் உண்டு என்றால் ஒன்றுமே செய்யாத சிறுபிள்ளைகளைக் குறித்து தேவன் எப்படி நியாயந்தீர்ப்பார்?

இயேசு கிறிஸ்து சிறுபிள்ளைகளை நேசித்ததால். அவரது ஊழியத்திலும், போதனையிலும் சிறுவர்களைக் குறித்து அதிக உதாரணங்களைக் கூறினார். சீடர்கள் தங்களில் எவன் பெரியவன் என தர்க்கம் பண்ணின

போது, ``**ஒரு சிறுபிள்ளையை எடுத்து**, அதை அவர்கள் நடுவில் நிறுத்தி அதை அணைத்துக் கொண்டு; இப்படிப்பட்ட சிறுபிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக் கொள் கிறவன் என்னை ஏற்றுக்கொள்கிறான். என்னை ஏற்றுக்கொள்கிறவன் என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்கிறான்'' (மாற். 9:36–37). இவ்வசனங்களில் தேவனை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு சிறுபிள்ளையை இயேசு அடையாளமாகக் கூறினார். சிறு பிள்ளைகளிடம் தவறுகள் இருந்தால் அவர்களை இயேசு முன்னுதாரணமாகக் கூறியிருக்கமாட்டாரே !

மற்றொரு நாள் நடந்த ஊழியத்தில் சிறுபிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். கொண்டுவந்தவர்களை சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு விசனமடைந்து ; சிறுப்பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; ***தேவனுடைய இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.*** எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய இராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று, அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார் (மாற். 10:13–16). இவ்வசனங்களில் சிறுபிள்ளைகளையும் தேவனது இராஜ்யத்தையும் ஒப்பிட்டுப் பேசியிருக்கிறா ரென்றால், நன்மை தீமை அறியாத சிறுபிள்ளைகள் பரலோக இராஜ்யத்தில் இடம்பெறுவது சந்தேகத்திற்குரியதல்ல. பாவம் ஒன்றே தேவனையும் மனிதனையும் பிரிக்கிறது. பாவம் செய்யாத எவரும் தேவனோடு இணைந்துவிட முடியுமென்றால், நன்மை தீமை அறியாத சிறுபிள்ளைகள் தேவனோடு இருப்பது அதிக சாத்தியமல்லவா ?

21

## மிருகங்கள் பரலோகம் செல்லுமா?

பரலோகத்தில் தேவன், தேவதூதர்கள், மூப்பர்கள் இருப்பதுபோல் நான்கு ஜீவன்கள் இருப்பதாய் கூறப்பட்டுள்ளது (வெளி. 4:6–8). இந்த நான்கு ஜீவன்கள் சிங்கத்திற்கும், காளைக்கும், மனுஷ முகத்திற்கும், கழுகுக்கும் ஒப்பாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இப்படி நான்கு

ஜீவன்கள் சிங்காசனத்தை சுற்றிலும் இருப்பதால் பரலோகத்தில் மற்ற ஜீவன்களும் இருக்குமென பலர் நினைப்பதுண்டு. வேதம் கூறும் ஜீவன்கள் மிருக ஜீவன்களைக் குறித்து அல்ல. அந்த ஜீவன்கள் மிருகங்களைப்போல இருந்தனவே அன்றி மிருகங்களாய் இல்லை.

அப்படியே மிருகங்களுக்கு மனிதனுடைய ஜீவ ஆத்துமாவைப் போல் ஜீவ ஆத்துமா இல்லாதபடியால் மிருகங்கள் மரித்ததும் அவைகளின் ஆத்துமாவும் மரித்துவிடு கின்றன. மட்டுமல்ல, உயரயேறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியில் இறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? என பிரசங்கி கூறியுள்ளான் (பிர. 3:21). இதில் மனுஷனுடைய ஆவி மேலேயும், மிருகத்தினுடைய ஆவி கீழேயும் செல்கிறது. மிருகத்தின் ஆவி மேலே செல்லாததால் அது இருக்க வாய்ப்பில்லை.

பரலோகத்தில் மிருகங்கள் வாசம்பண்ணாவிட்டாலும், கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சி பூமியில் நடக்கும்போது மிருகங்கள் இருப்பதாய் ஏசாயா தீர்க்கதரிசி கூறியுள்ளான். ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டு குட்டியோடே படுத்துக்கொள்ளும் ; கன்று குட்டியும் , பாலசிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும், கரடியும் கூடி மேய்யும், அவைகளின் குட்டிகள் ஒருமித்து படுத்துக்கொள்ளும் ; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்; பால்குடிக்கிற குழந்தை விரியன் பாம்பின் வளையம் மேல் விளை யாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்" (ஏசா. 11:6–8). இந்த மிருகங்கள் ஆயிர வருட அரசாட்சியில் இடம்பெற் றாலும், இவைகள் தற்பொழுது நாம் பூமியில் பார்க்கிற அதே குணங் கொண்ட மிருகங்களா என தெரியாது. மிருகங்கள் உயிர்த்தெழுந்து வராது என்பதால் அவ்வாட்சியில் வரும் மிருகங்களைக் குறித்து சரியாய் நமக்கு தெரியவில்லை.

22

## இரட்சிக்கப்பட்ட கணவனும், இரட்சிக்கப்பட்ட மனைவியும் பரலோகத்தில் கணவன் மனைவிகளாக இருப்பார்களா?

ஒரு ஆணை ஒரு பெண்ணுடன் இணைத்து அவர்களை கணவன்

மனைவியாக வைப்பது தேவனே. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக் கக்கடவன் (மத். 19:6). இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான் (ஆதி. 2:24). ஆகிய வசனங்கள் கணவன் மனைவியின் பூமிக்குரிய குடும்ப வாழ்க்கையைக் குறிக்கின்றது. பெற்றோரை விட்டு கணவனும் மனைவியும் இணைந்து குடும்பமாக வாழும்படி தேவன் கட்டளையிட்டிருக்கிறார். பூலோ கிலிருப்பதுப் போல் பரலோகத்தில் தனித்தனி குடும்பங்கள் இராதென் பதால் பூமியில் மாத்திரமே கணவன் மனைவியோடுகூட இசைந்திருக்க முடியும். பரலோகத்திலோ திருமணத்தில் வாக்குக்கொடுக்கும் போது வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் சுகனவீனத்திலும் மரணம் நம்மை பிரிக்கும்வரை என தங்கள் இணைப்பை தங்களின் மரணம் வரை மட்டுமே கூறப்படுகிறது. மரணத்திற்கு பின் இயேசுவோடு இணைந்து விடுவதால் அந்த மணவாளனோடே என்றென்றும் வாழ்வர். அங்கே இயேசு ஒருவரே மணவாளனாகவும், விசுவாசிகள் அனைவரும் மணவாட்டியாகவும் எப்பொழுதும் ***கர்த்தரோடேகூட*** இருப்போம் (1 தெச. 4:17).

பூமியில் வாழும் மனிதர்களின் உறவு மாம்சத்தையும், இரத்தத்தையும் அடிப்ப டையாகக் கொண்டவை. அன்பு, இரத்த பாசம், பந்தம், உறவு, ஐக்கியம், தொடர்பு எல்லாமே மாம்சத்தோடு சம்பந்தப்பட்டதாய் இருக்கின்றது. மோசேக்கும் அவன் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் சிப்போராள் நீர் எனக்கு இரத்த சம்பந்தமான புருஷன் என்றாள் (யாத். 4:25). கணவன் மனைவியின் உறவு ***மாம்சத்தாலும், இரத்தத்தாலும்*** இணைந்து அன்பு என்னும் அஸ்தி பாரத்தால் கட்டப்பட்டதாகும். மற்ற சகோதர சகோத ரிகளின் உறவு இரத்தத் தோடு மட்டும் கட்டப்பட்டதேயன்றி மாம்சத்தோடு கட்டப்படவில்லை. கணவன் மனைவி இருவர் மட்டுமே ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள் (மத். 19:6). இந்த ***மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது.*** அழிவுள்ளது அழியாமையை சுதந்த ரிப்பதில்லை (1 கொரி.15:50) என்று பவுல் கூறியிருப்பதுபோல், மாம்சத்திலும், இரத்தத்திலுமான உறவு பூமியில் மட்டுமே. பரலோகத்தில் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் இவ்வுறவு தொடர முடியாது என்பது தெளிவாகிறது.

...போதகரே, ஒருவன் மனைவியையுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்கு சந்தானமுண்டாக்கவேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே. சகோதரர் ஏழுபேரிருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, பிள்ளையில்

லாமல் இறந்துபோனான். பின்பு இரண்டாஞ்சகோதரன் அவளை விவாகம் பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்துபோனான். மூன்றாஞ் சகோதரனும் அவளை விவாகம் பண்ணினான், அப்படியே ஏழு பேரும் அவளை விவாகம் பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள் (லூக்.20:28–33). உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயர் இயேசுவைக் கேட்டகேள்வி சரியானது என்றாலும், அவர்கள் பூலோகத்தைப் போலவே பரலோகத்திலும் குடும்பம் நடத்துவார்கள் என நினைத்து இக்கேள்வியைக் கேட்டனர். சதுசேயருக்கு இயேசு கூறின பதிலே நமது கேள்விக்கும் பதிலாய் இருக்கின்றது.

"இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும், பெண்கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும், மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை பெண் கொடுப் பதுமில்லை. அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்" (லூக். 20:34–36) என்ற ஆண்டவரின் வார்த்தையே நமக்கு வெளிப்படையான தெளிவுள்ள பதிலாய் இருக்கிறபடியால் பரலோகத்தில் எவரும் கணவன் மனைவியாக இல்லாமல் அனைவரும் தேவ பிள்ளைகளாகவே இருப்பர்.

23

## மகிமையின் உருவம் என்றால் என்ன?

இந்த பூமியில் ஒவ்வொரு மனிதனுக்கும் உருவத்தை தேவனே ஏற்படுத்துகிறார். முழு உலகத்திலும் மனிதனென அழைக்கப்படுபவன் முகத் தோற்றத்தில் வேறுப்பட்டாலும், நிறத்திலும் மொழியிலும் மாறுபட்டிருந்தாலும், அனைவரும் மனிதனுக்குரிய தோற்றத்திலேயே காட்சியளிக்கின்றனர். இத்தோற்றமானது பூலோகத்தில் வாழும் சகல மனிதருக்கும் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தோற்றத்தை வேதம் மனுஷடைய மாம்சம் (1 கொரி. 15:39), பூமிக்குரிய மேனி ( 1கொரி. 15:40), ஜென்ம சரீரம் (1 கொரி. 15:44), முந்தின மனுஷன் (1 கொரி. 15:45), மண்ணானவன் (1 கொரி. 15:47),

மண்ணான வனுடைய சாயல் ( 1 கொரி. 15:49) என்றெல்லாம் அழைக்கிறது.

வானத்திற்குரிய உருவம் என அழைக்கப்படுவதையே வேதம் வானத்திற்குரிய மேனி (1 கொரி. 15:40), வானத்திற்குரிய மேனியின் மகிமை (1 கொரி. 15:40), ஆவிக்குரிய சரீரம் (1 கொரி. 15:44), வானத்திற்குரிய சாயல் (1 கொரி. 15:49), என அழைக்கிறது. இந்த வானத்திற்குரிய மேனியும், சாயலும், ஆவிக் குரிய சரீரமாக இருக்கிறது. நமது மாம்சத்திற்குரிய சரீரமே நமது உருவத்தின் படியே ஆவிக்குரிய சரீரமாக மாறுகிறது. இந்த ஆவிக்குரிய சரீரம் அழிவில் லாததாய் (1 கொரி. 15:42), வானத்திற்குரிய உருவத்தோடு காட்சியளிக்கும். இந்த வானத்திற்குரிய மேனி என்பது பூலோகத்தில் நமக்கு இருந்த உருவத் தைப் போலவே இருந்தாலும் அது பூலோக மாம்சத்திலான உருவமாய் இருக்காது.

பூலோகத்திற்குரிய இந்த உருவத்தை நாம் கண்ணாடியில் பார்த்தால், நமது உருவம் அப்படியே அதில் பிரதிபலிக்கிறது. அப்படி கண்ணாடியில் தெரியும் உருவத்தை நமது கைகளால் பிடிக்கமுடியாது. அந்த உருவத்தை அப்படியே பேர்த்தெடுக்கவோ, வார்த்தெடுக்கவோ முடியாது. கண்ணாடியில் பார்க்கும் நம்மை பிரதிபலிப்பதுபோல் மகிமையின் உருவமும் இருக்கும். இதையே பவுல் "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய் பார்ப்போம்" (1 கொரி. 13:12). 3:16) என்ற வசனத்தின்படி இயேசு உயிர்த்தெழுந்தபோது மகிமையின் சரீரமாய் உயிர்தெழுந்தார். ஆண்டவர் மாம்ச மனிதர்களைப் போல செயல்பட முடியாது. அவர் பூட்டியிருந்த வீட்டிற் குள் கதவுகள் திறக்கப்படாமலே நுழைந்தார் (யோவா. 20:19,26). அப்படியே மகிமையின் சரீரம் எத்தடைகளுக்கும் கட்டுப் படாமல் இடம் விட்டு இடம் செல்லகூடியதாகவும், வேகமாக செயல்படகூடிய தாகவும் இருக்கும்.

பூட்டிக் கிடந்த வீட்டிற்குள் வந்த இயேசுவை "சீடர்கள் கண்டு கலங்கி பயந்து ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள்" (லூக். 24:37). அவர் மாம்சத்தில் அப்படியே வராமல், மாம்ச உருவத்திலிருந்ததுபோன்றே ஆவியின் ரூபத்தில் வந்து காட்சியளித்ததே மகிமையின் உருவமாகும். மறுரூப மலையில் மோசே, எலியா, இயேசு ஆகியோர் தந்த தரிசனம், இயேசுவின் உயிர்த்தெழுந்து தந்த தரிசனத்திற்கு முன் உதாரணமாக இருக்கிறது. ஆண்டவர் தாம் உயிர்த்தெழுந்த பின் மகிமையின் உருவத்தில் வருவதற்கு முன்பே, சீடர்களுக்கு மறுரூபமலையில் காட்சியளித்து, மகிமையின் உருவத் தைக் கண்டுக்கொள்ள அவர்களை முன்கூட்டியே ஆயத்தப்படுத்தினார். அதை அப்பொழுது சீடர்கள் அறியவில்லை. இயேசுவின் உயிர்த்தெழு தலுக்கு பின் மகிமையின் உருவத்தை புரிந்துகொண்டனர்.

24

## யாரெல்லாம் பரலோகம் செல்வர்?

பரலோகம் தேவன் தங்கியிருக்கும் வாசஸ்தலம் என்பதை அறிந்தோம். பரலோகத்தில் சர்வவல்லமையுள்ள தேவன் உன்னதங்களில் வீற்றிருக்கிறார் (யோபு. 22:12; சங். 103:39). கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது (சங். 11:4). இயேசு பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் (அப். 7:55–56; எபி. 9:24). தேவ தூதர்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள் (மத். 18:10; 1 பேது. 3:22). தேவாலயம் பரலோகத்திலிருக்கிறது (வெளி. 14:17; ஏசா.6:1). ஜீவத் தண்ணீருள்ள நதியும் ஜீவ விருட்சமும் பரலோகத்திலிருக்கிறது (எசே.47:1–12 ; வெளி.22:1–2) இவ்வாறு தேவனும் தேவனுக்குரியவைகளும் இருக்கின்ற இடத்தில் நம்மையும் கூட வைத்துக்கொள்வதற்கு ஆண்டவர் விரும்புகிறார்.

இயேசு தமது சீடர்களை நோக்கி "நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" என்றார் (யோவா.14:3). அவர் கூறியபடியே நம்மை அவரோடு கூட இணைத்துக் கொள்வதற்கு அவர் ஆவலோடு காத்திருப்பதும் அல்லாமல் நம்மை கரம் நீட்டி அழைத்துக்கொண்டிருக்கிறார். அவர் அழைப்பிற்கு செவிகொடுக்கும் மனிதர்கள் எவரோ அவர்கள் அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர் சொன்னதை யெல்லாம் செய்வர். அவர் சொற்படி செய்யும் எவரும் அவர் இருக்கும் இடத்தில் வாசம்பண்ணுவர். வேதத்தில் தேவன் இருக்கும் இடத்தில் யாரெல்லாம் வாசம்பண்ணுவர் என்பதை நாம் பல இடங்களில் காணமுடிகிறது. அவற்றில் சில குறிப்புகளை கவனிப்போம்.

1. தேவப்பிள்ளைகளாய் மாறினவர்கள் அங்கு இருப்பார்கள்– யோவா. 1:12
2. மறுபிறப்படைந்தவர்கள் பரலோகில் இருப்பார்கள் – யோவா.1:12–13; 3:3–7
3. தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தவர்கள் இருப்பார்கள் –யோவா. 3:5
4. இரட்சிக்கப்பட்டவர்கள் அங்கு இருப்பார்கள் – ரோம. 10:10
5. மீட்கப்பட்டவர்கள் அங்கு இருப்பார்கள் ஏசாயா. 51:11
6. இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்கள் இருப்பார்கள் – அப். 16:31
7. மனந்திரும்பி குழந்தையைப் போல் மாறினவர்கள் இருப்பார்கள்–மத். 18:3–5

8. நீதியுள்ளவர்கள் அங்கு இருப்பார்கள் – மத். 5:20; லூக்.18:10–12
9. பிதாவின் சித்தம் செய்கிறவர்கள் அதில் இருப்பார்கள் –மத். 7:21–23
10. மாம்சத்தின்படி நடவாதவர்கள் அங்கு இருப்பார்கள் – கலா. 5:19–21
11. ஆவிக்கென்று விதைக்கிறவர்கள் அங்கு இருப்பார்கள் – கலா. 6:8
12. ஆவியின் படிநடக்கிறவர்கள் அதில் இருப்பார்கள் – கலா.5:22
13. ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் அங்கு இருப்பார்கள்–வெளி. 21:27
14. மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் அங்கு இருப்பார்கள்– வெளி.7:14
15. ஆவியில் எளிமையுள்ளவர்கள் அதில் இருப்பார்கள் – மத். 5:3
16. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் அங்கு இருப்பார்கள் – மத். 5:8
17. நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் அதில் இருப்பார்கள் –மத். 5:10
18. ஐசுவரியத்தை விற்று ஏழைகளுக்குக் கொடுத்தவர் இருப்பார்கள் –மத். 19:21
19. எல்லாவற்றையும் விட்டு அவர் பின்வந்தவர்கள் இருப்பார்கள்–மத்.19:27–29
20. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அதில் இருப்பார்கள் – மத். 22:14
21. முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறவர்கள் அதில் இருப்பார்கள் – மத். 24:13
22. பிதாவின் சித்தம் செய்கிறவர்கள் அதில் இருப்பார்கள் – மாற். 3:3
23. இயேசுவுக்காய் ஜீவனை இழந்தவர்கள் அங்கு இருப்பார்கள்– மத். 10:29
24. ஜெயங்கொள்ளுகிறவர்கள் அதில் இருப்பார்கள் – வெளி. 3:21

இயேசு கிறிஸ்துவை சொந்த தெய்வமாக உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு, அவருக்கு ஆராதனை செய்து, அவரை மட்டுமே தொழுதுகொண்டு, அவர் சிலுவையை எடுத்து அனுதினமும் அவரைப் பின்பற்றி, அவன் வாழ்க்கையின் கடைசி நாள்வரை வேத வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்தமாய் வாழ்க்கை நடத்தி விசுவாசத்தோடு தங்கள் ஓட்டத்தை முடிக்கிற எந்த மனிதனும் பரலோகத்தில் இடம் பெறுவான் என்பதில் சந்தேகமில்லை. பரலோகம் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. அது அனைத்து தேசத்தாருக்கும் , எல்லாவித மக்களுக்கும் உரிய இடமாகும்.

தேவனிடம் பாவமன்னிப்பை பெற்ற யாரும் அதில் பங்கேற்க முடியும் என்பதற்கு வேதத்தில் சான்றுகள் இருக்கின்றன. பரலோகத்தில் சிறுவர்கள் பங்கேற்பர் (மத். 18:3 ; 19:14), ஏழைகளும், செல்வந்தரும் பங்கேற்கலாம் (யாக். 2:4–5), யூதரோ, கிரேக்கரோ எத்தேசத்தாரும் பங்கேற்கலாம் (கலா. 3:28), சகல கோத்திரத்தாரும் பங்கேற்கலாம் (வெளி. 5:9), இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டோர் பங்கேற்கலாம் (எபே. 2:11–12). தேவ இராஜ்யம் இனம், நிறம், மொழி, தேசம், கலாச்சாரம் போன்ற எந்த அடிப்படையிலும் மக்களைப் பிரிப்பதில்லை. கர்த்தர் மேல் வைக்கிற விசுவாசத்தின் அடிப்படையிலேயே மக்கள் பரலோகத்திற்குள் செல்கின்றனர்.

எரிகோவைச் சேர்ந்த ராகாப் (யோசு.2:1 ; 6:17 ; எபி. 11:31) , மோவாபை சேர்ந்த ரூத் (ரூத் 4:3 ; மத். 1:5), சமாரியாவைச் சேர்ந்த பெண் (யோவா. 4:7–42 ) சீரோ பேனிக்கியா தேசத்துப் பெண் (மாற். 7:24–30), ரோம நூற்றுக்கதிபதி (மத். 8:5–13), ரோம கொர்நேலியு (அப். 10:17–48) என பல தேசத்து மக்களும் கிறிஸ்துவை விசுவாசித்தபடியால் அவர் இராஜ்யத்தில் பங்கேற்கும் வாய்ப்பு பெற்றனர். அன்றைய நாட்களைப்போலவே இன்றும் எந்த தேசத்து மனிதனுக்கும் பரலோகம் திறந்திருக்கிறது. இயேசு யூதராய் இருந்தும் யூதர்களுக்கு மட்டும் பரலோகத்தை அளிப்பதாய் வாக்களிக்காமல், தம்மை விசுவாசிக்கிற அனைவருக்கும் மேல்வீட்டை ஆயத்தம் பண்ணுவதாய் வாக்களித்து சென்றுள்ளார்.

மோட்சத்தில் பங்கேற்பதற்கென சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. நித்திய ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாய் இருப்பதால் (மத். 7:14). அந்த வழியில் மனம்போன போக்கில் போகிறவர்கள் நுழைவதற்கு வாய்ப்பில்லை. மாறாக மறுபிறப்படைந்தவர்கள் (யோவா. 3:3–5) , ஜீவனை வெறுக்கிறவர்கள் (மத். 10:39), இயேசுவிடம் தங்களை அர்ப்பணித்தவர்கள் (லூக். 9:62), தாழ்மையுள்ளவர்கள் (மத் 18:3), விசுவாசமும் அன்பும் கொண்டவர்கள் (யாக். 2:5), ஆவிக்குரிய தாகமுள்ளவர்கள் (மத்.5:6), சிறுப்பிள்ளைகளைப் போல கபடமற்றிருக்கிறவர்கள் (மத்.18:3), உபத்திரவங்களை சகிப்பவர்கள் (அப். 14:22 ; 1 தெச. 1:5). கிறிஸ்துவின் நிமித்தம் துன்பப்பட்டவர்கள் (மத்.5:11–12). தங்கள் ஜீவனை இழந்தவர்கள் (மத். 10:39) அனைவரும் பரலோகத்தில் வாசம்பண்ணுவர் (யோவா. 14:2).

25

## பரலோகத்தில் நம் சரீரம் எப்படி இருக்கும்?

1 கொரியந்தியர் 15:50–54 –ல் வேதம் கூறுவதுப்போல் "மாசம்மும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பதும் இல்லை......ஒரு இமைப்பொழுதிலே நாம் எல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்... அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்" (1கொரி.15:53). அப்பொழுது மரணம் ஜெயமாக விழுங்கப்படும். அதன்பின் அழியாத கிறிஸ்துவின் ஜீவன் என்றென்றும் நிலைத்திருக்கும். கிறிஸ்து

எனக்கு ஜீவன் (பிலி. 1:21), நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து (கொலோ. 3:4) ஆகிய வசனங்கள் கிறிஸ்து நமக்கு ஜீவனாக அல்லது உயிராக இருக்கிறார் என்று கூறுகின்றனர். அப்படியானால் சாவுக் கேதுவான இந்த பூமிக்குரிய சரீரத்தில் கிறிஸ்து எப்படி ஜீவனாயிருக்கிறாரோ அதுபோலவே மகிமையடைந்த சரீரத்திலும் கிறிஸ்துதான் ஜீவனாக இருக்கிறார்.

ஆனால் நாம் உயிர்த்தெழுந்த பின்பு நமது சரீரம் மறுரூபமாக்கப்பட்ட மகிமையான சரீர மாக இருக்கும். அது பாவமில்லாத சரீரமாகவும் இருக்கும். அதாவது ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்வதற்கு முன்பு பெற்றிருந்த மகிமையான சரீரத்தைப்போலவே இருக்கும். கிறிஸ்து உயிரோடு எழுந்த பின்பு அடைந்த சரீரம் பரலோகத் தில் நாம் பெறப் போகிற மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகவே இருக்கிறது என்பதற்கு வேதத்தில் ஆதாரம் உண்டு. "வானத்துக்குரியவர் எப்படிப்பட் டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப் பட்டவர்களே... வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்" (1 கொரி. 15:48–49). "அவர்வெளிப்ப டும்போது..... அவர் சுத்தமுள்ளவராயிருக் கிறதுபோல, தன்னையும் சுத்திக ரித்துக் கொள்ளுகிறான்" (1 யோவா. 2–3). கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு தமது சீஷர்களோடுகூட போஜனம் பண்ணினார் என்று லூக்கா 24:30 கூறுகின்றது. மாத்திரமல்ல வெளிப்படுத்தல் 2:7; 2:17 ; ஆகிய வசனங்கள் ஜீவ விருட்சத்தின் கனியையும், ஜீவ மன்னாவையும் தேவன் நமக்கு புசிக்கக் கொடுப்பார் என்றும் கூறுவதால் பரலோகில் நாம் மகிமையடைந்த சரீரத் தோடு தேவனோடு போஜனம்பண்ணுவோம் என்பதும் ஊர்ஜிதமாகிறது.

26

## பரலோகத்தில் குழந்தைகள் வளருவார்களா?

பல நேரங்களில் நாம் பூமிக்குரிய வாழ்க்கை முறைகளை பரலோக வாழ்க்கை முறைகளோடு ஒப்பிடுவது சரியாய் இராது. ஆனால் சில நியாயமான சந்தேகங்கள் நமக்கு வருவதில் தவறில்லை. நமது நியாயமான சந்தேகங்களில் இதுவும் ஒன்று. தேவன் நமக்கு பூமியில் வாழும்போது இயற்கையாக நிகழவேண்டிய பல திட்டங்களை வைத்திருக்கிறார். பிறப்பு, பிறந்தபின் வளர்ச்சி, அந்த வளர்ச்சியால் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாற்றங்களால் நிகழும் செயல்கள் என அனைவருக்கும் பொதுவாக

ஆதிமுதலே அப்படி வைத்துள்ளார். குழந்தையாய் இருக்கும்பொழுது முகமும் உடலும் சிறியதாக இருக்கின்றது. வாலிபராகும்போது முகத்திலும், உருவத்திலும் மாற்றங்கள் நடக்கின்றன. முதிர் வயதானபோதோ முழு உடலும் தளர்ந்துபோய் விடுகின்றனது. ஒரே உடல்தான் சில வருடங்களில் பல மாற்றங்கள் வருவது இந்த பூமிக்குரிய வாழ்க்கைக்கு மட்டுமே பொருந்தும். பரலோகத்திற்குரிய வாழ்க்கையின் முறைகள் பூமிக்குரிய முறைகளுக்கு அப்பாற்பட்டவைகள். அங்கு நடக்கப்போகிறவைகளை இப்பொழுது நம்மால் முழுமையாக அறிந்துகொள்ள இயலாது.

பரலோகத்தில் நடக்கப்போகிறவைகளை பரிபூரணமாக தெரிந்துக்கொள்ள அங்கு செல்வதே ஒரே வழி. பரலோகில் குழந்தைகள் தேவ தூதர்களைப் போலவும், கிறிஸ்து இயேசுவைப்போலவும் இருப்பார்கள் என்பது வசனதின்படி உண்மை. அவர்கள் மகிழ்ச்சியோடு பரலோகில் தேவனைத் துதித்துப் பாடி மகிழுவார்கள். குழந்தைகள் பரலோகில் வளருவார்களா என்று கேட்டால் பொதுவாக இல்லை என்று சொல்லலாம். குழந்தைகள் வளருவார்கள் என்றால் பெரியவர் களும் வளரவேண்டுமல்லவா? ஆகவே குழந்தைகள் பரலோகில் வளருவார்கள் என்பதற்கு வேத ஆதாரம் இல்லாமல் எதையும் கூறமுடியாது.

## 27

## பரலோகத்தில் எல்லாரும் ஒரே அளவில் சந்தோஷமாக இருப்பார்களா?

பரலோகம் என்பது நித்திய மகிழ்ச்சியான இடமென்றும், ஒரு கவலையும், ஒரு துளி கண்ணீரும் இல்லாத இடமென்றும் அறிந்திருக்கிறோம். எல்லையில்லா பேரின்பத்தில் ஒவ்வொருவரும் மூழ்கியிருக்கும் பாக்கியத்தை இவ்விடத்தில் மட்டுமே பெறமுடியும். ஆனால் இதற்குள் செல்வோர் அனைவருக்கும் இந்த பேரின்பம் வேறுபட வாய்ப்பிருக்கிறது. ஒவ்வொருவரும் அவரவருடைய கிரியைக்கு தக்கதான பலனைப் பெறுவார்கள் என்றும், ஒருசிலர் எந்த ஒரு பலனையும் பெறாமல் பரலோகில் வெறுமையாயிருப்பார்கள் என்றும் 1 கொரிந்தியர் 3:11–15 கூறுகின்றது. ஒவ்வொருவருடைய கிரியைக்குத்தக்கதாகவும் தேவன் பலன் அளிக்கிறவராய் இருக்கிறார். கிறிஸ்து பூமிக்கு வந்து ஆளுகை செய்யும்போது ஒருசிலரை

ஐந்து பட்டணங்களுக்கும், ஒரு சிலரைப் பத்து பட்டணங்களுக்கும் அதிகாரியாக வைத்து, ஒரு சிலருக்கு எந்த ஒரு பலனையும் கொடாமல் வெறுமையாக வைக்கிறார் என்று லூக்கா 19:17–26 வரையுள்ள வசனங்கள் உவமையாக கூறுகின்றன.

பரலோகில் பிரவேசிக்கிற அனைவருக்கும் பரிபூரண சந்தோஷம் உண்டு என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. பரலோகம் என்பது பரவசம் நிறைந்த இடம் என்பதால் அதில் வருகிறவர்கள் சோகத்தோடு இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. நித்திய மகிழ்ச்சியும், நித்திய சமாதானமும் நிரந்தரமாக இருக்கும். என்றாலும் நியாயத்தீர்ப்பில் அவனவன் செய்த கிரியைகளுக்குக்கேற்ற பலன் அவனவனுக்குக் கொடுக்கப்படும். தேவனுக்காயும், தேவ ராஜ்யத்திற்காயும் யார் யார் எவ்வளவு பாடுபட்டார்களோ அதற்கேற்ற பலனைப் பெறுவர். விசுவாசிகள், அதிகம் உழைத்த ஊழியர்கள், அதிக ஆத்துமாக்களை சேர்த்தவர்கள், அதிகமாக காணிக்கை கொடுத்தவர்கள், உண்மையாய் உழைத்தவர்கள், இரத்த சாட்சியாய் மரித்தவர்கள் என பலவிதத்தில் விசுவாசிகள் அங்கு இருப்பர். இவர்களுக்கு தேவன் ஜீவக் கிரீடத்தையும், வாடாத கிரீடத்தையும் கொடுப்பார். இவ்வித கிரீடங்களை பரலோகிலுள்ள அனைவரும் பெற முடியாது. எனினும் எதையும் வாங்காதவர்கள் பரலோக சந்தோஷத்தில் இருந்தாலும் அவர்களால் தேவனால் கொடுக்கப்படும் பரிசை பெற்றுக் கொள்ளும் சந்தோஷத்தை அடைய முடியாது.

இரட்சிப்பினால் உண்டான சந்தோஷம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பரலோகில் ஒன்றுபோல் இருந்தாலும், அவரவர் பூமியில் செய்த கிரியைகளுக்குத் தக்கதான பலன் பரலோகில் வேறுபட்டிருப்பதால், குறைவான பலனைப் பெற்ற கிறிஸ்தவர்கள் பூமியில் தாங்கள் கிறிஸ்துவுக் காக குறைவாகப்பட்ட பிரயாசத்தை நினைத்து வருத்தப்படலாம். கிறிஸ்துவுக்காக பூமியில் அதிகமாக உழைத்து பரலோகில் அதிக பலனைப் பெறுகிறவர்கள் அதிகமான மகிழ்ச்சியில் திளைப்பார்கள். எனவே பரலோகில் அனைவருக்கும் பொதுவான மகிழ்ச்சி இருந்தாலும் இயேசுவின் கரங்களால் பாராட்டு பெறுகிறவர்கள் அதிக மகிழ்ச்சியாய் இருப்பார்கள்.

28

# இரட்சிக்கப்படாத நம்முடையவர்கள் நரகத்திலிருந்தால் பரலோகில் நம்மால் மகிழ்ச்சியாய் இருக்க முடியுமா?

தேவனும், இயேசு கிறிஸ்துவும், ஆவியானவரும் எக்காலத்தையும் அறிந்தவர்கள் மட்டுமல்லாமல் சகலவற்றையும் அறிந்தவர்கள். தேவன் பரலோகத்திலிருந்தும், பூலோகத்திலிருந்தும் கூப்பிடும் குரலை மட்டும் கேட்காமல், பாதாளத்திலிருந்து கூக்குரலிட்ட ஐசுவரியவானின் சத்தத்தையும் பரலோகத்திலிருந்து கேட்டவர் என்பதை வேதம் குறிப்பிடுகிறது (லூக். 16:23). அவர் நமது தேவன் ஒவ்வொரு ஆத்துமாவைக் குறித்தும் கரிசனையுடைவராய் இருப்பதோடல்லாமல், ஒரு ஆத்துமாவும் நரகத்திற்குச் செல்வதை விரும்பாதவர். அவர் மிகுந்த இரக்கமுள்ளவராய் இருக்கிறார். எனினும் அந்த இரக்கத்திற்கு ஒரு முடிவையும் வைத்திருக்கிறார். இந்த இரக்கம் முடிவதற்குள் எந்த மனிதனாகிலும் அவரிடம் வந்துவிட்டால் அவன் எரிகிற அக்கினிக்கடலில் தள்ளப்படமால் தப்பித்துக்கொள்ள வழியுண்டு. மாறாக தேவனது நீடிய இரக்கத்தை கடைசி மட்டும் அவமதிக்கிறவனோ நரகத்திற்கு செல்வான். நரகத்திற்குச் செல்வது தேவனது தவறல்ல. அது மனித தவறே.

உலகிலுள்ள எல்லா மனிதரும் மீட்படையும்படி தேவன் தான் செய்யக்கூடிய மிகப்பெரிய தியாகமான பலியாக தம்முடைய குமாரனையே பூமிக்குக் அனுப்பி, அழியும் மனுக்குலத்திற்காய் அவரது இரத்தத்தை சிந்தும்படி வைத்தார். இதற்கு மிஞ்சிய ஒரு பெரிய தியாகம் தேவனிடத்தில் இல்லை. மாத்திரமல்ல இயேசு கிறிஸ்துவும் தம் சொந்த இரதத்தத்தை சிந்தி, தம் சொந்த மாம்சத்தை பிட்கக் கொடுத்து, சாதாரண மரணத்தைவிட கொடிய வேதனையுடையை மரணத்தை ஏற்றுக்கொண்டதின் நிமித்தம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்காக மிகுந்த தியாகத்தை செய்தார். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், (ஏசா. 53:11) அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்தார் (எபி. 12:2) என்று நாம் வாசிக்கிற வசனத்தின்படி ஒவ்வொரு மனிதனும் நரகம் போகக்கூடாது என இயேசு பாடுபட்டிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் தியாகத்தைக் கண்டும் இயேசுவை புறக்கணிக்கிற மனிதன் பரலோகில் பங்கடைய முடியாததால் அவனது நித்தியத்தை நரகத்தில் செலவிட வேண்டியதாய் இருக்கிறது. கடைசி நியாயத்தீர்ப்பின் போது மனந்திரும்பாத பாவிகளும், இயேசுவை நிராகரித்த துரோகிகளும், பரிசுத்தாவியானவரை புறக்கணித்த துன்மார்க்கரும், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை கால்களின் கீழ் மிதித்து உதாசீனப்படுத்தின மகாபெரிய பாவிகளும் நிச்சயமாகவே கந்தகமும் அக்கினியும் எரிகிற கடலிலே தள்ளப் படுவார்கள்.

அவர்களுக்கு கிருபையாய் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளை அவர்கள் புறக்கணித்துத் தள்ளியதால், அவர்களுக்குக் கிடைக்கும் தண்டனையைக் குறித்து எவரும் வருத்தப்பட நியாயமில்லை. அதிலும் விசுவாசிகள் அதிகம் வருந்த மாட்டார்கள். பூமியில் கர்த்தருடைய பிள்ளைகள் இரட்சிக்கப்படாத மக்களோடு போராடி சோர்ந்து போனதால் பரலோகில் இரட்சிக்கப்படாத மக்களை நினைத்து கவலைப்பட தேவன் அவர்களை அனுமதிக்கமாட்டார். ஒருவேளை தன் சொந்தக் குடும்பத்தில் உள்ளவர்களே நரகம் சென்றிருந்தாலும் பரலோகிலுள்ள நித்திய சந்தோஷம் இந்த வருத்தத்தையும் துக்கத்தையும் முற்றிலுமாக எடுத்துப்போட்டுவிடும். பரலோகத்தில் கண்டுபிடிக்க முடியாத தங்களுடைய குடும்பத்தாரை நினைத்து எவரேனும் கண்ணீர் விடுவார்களானால் அவர்கள் கண்ணீரையும் தேவன்தாமே துடைப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

நித்திய மகிழ்ச்சி என்பது நாம் காண்கின்ற, காணக்கூடாத அண்ட சராசரத்திற்கு ஒப்பாயிருக்கிறதென்றால், இந்த பூமியிலுள்ள உறவுகளைக் குறித்து உண்டாகின்ற துக்கம் அந்த வான்வெளியில் கரைந்துபோகின்ற ஒரு சிறிய புகைக்கு ஒப்பாயிருக்கின்றது. கண்மூடி கண்திறக்கும் முன் புகை காணப்படாமல் மறைந்துவிடுவதுபோல இந்தத் துக்கமும் அந்த நித்திய மகிழ்ச்சிக்குள் மறைந்து விடுகிறது. எனவே மீட்படைந்த கிறிஸ்தவர்களும், அவர்களை மீட்ட கிறிஸ்துவும் இனி துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின (வெளி. 21:4) என்ற வசனத்தின்படி துக்கமில்லாத நித்தியத்தில் தங்கள் வருத்தங்களை நினைக்க போவதில்லை.

29

## பரலோகத்தில் நாம் எத்தனை நாள் இருப்போம்?

தேவன் வானத்தையும் பூமியையும் படைத்த ஆரம்ப நாட்களில் மனிதனுக்காகவே அனைத்தையும் படைத்து வைத்தார். பூமியில் மனிதன் ஆசீர்வாதமாய் இருப்பதற்கு அவனுக்குத் தேவையான எல்லாவற்றையும் படைத்து இயற்கையின் ஆசீர்வாதங்களால் சுற்றுப்புறத்தை நிரப்பினார்.

சிருஷ்டிப்பிற்கு முன் நேரமும் காலமும் கிடையாது.தேவன் எப்பொழுதிலிருந்து இருக்கிறார் என்றும், தேவன் எப்பொழுதிலிருந்து செயல்படுகிறார் என்றும், நாட்களைக் காட்டும் குறிப்புகள் உலகில் இல்லை. எனவே அவர் அநாதி தேவன் என அழைக்கப்படுகிறார். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். ஆழத்தின் மீது தேவ ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார். இருளும் வெளிச்சமும் படைக்கப்பட்டு முதல் நாள் ஆனபோதே (ஆதி. 1:5). கால நேரம் துவங்கியது. தேவன் பகலுக்கும், இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத் தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும், நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறவதற்காகவும் இருக்கக் கடவது என்றார் (ஆதி. 1:14). நமக்குக் காலங்களும், நாட்களும், வருஷங்களும் ஆகாய விரிவிலே இருக்கிற சுடர்களால் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த சுடர்கள் பூமியில் மனிதனுக்கு இரவையும், பகலையும் தெரிவிப்பதோடு நொடி, நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், வருடம் ஆகியவைகளை காட்டிக்கொண்டிருக்கின்றன. ஆனால் இயேசுவின் வருகையில் உலகம் முடிந்துபோவதால் வானங்கள் மடமடவென அகன்று போவதால் சூரியனும், சந்திரனும் இருண்டுபோய் அகன்று விடுகிறது (யோவா.2:10). இவைகள் அழிந்தபின்பு நாட்களைக் குறிப்பிடுவதற்கு சுடர்கள் ஏதும் இல்லாதபடியால் நாட்களைக் கணக்கிட ஏதுவில்லை என்பது ஒரு காரணம்.

மற்றொரு பதிலும் உண்டு. பரலோகத்தில் சுடர்களால் வெளிச்சம் பெறுவதில்லை. தேவன் ஒளியாய் இருக்கிறார். அவரில் எவ்வளவும் இருள் இல்லை (1 யோவா. 1:5). அங்கே தேவனே சூரியனைப்போல பிரகாசமாக இருப்பார் (வெளி. 22:5). அவர் ஒளியாய் இருப்பதால் அங்கே சூரியனும் சந்திரனும் தேவையில்லை. இவைகள் இல்லாததினால் அங்கே நாட்களைக் காட்டுவ

தற்கும், வருஷங்களைத் தெரிவிப்பதற்கும் வாய்ப்பில்லை. நாட்களே இல்லாமல் வாழும் வாழ்க்கையே நித்தியம் என அழைக்கப்படுகிறது. நித்தியத்தின் அளவை நேரத்தை வைத்தும், நாட்களை வைத்தும் கணக்கிட முடியாதது. நித்திய ஜீவன் என்பது ஆயிரம் வருடங்களோ, லட்சம் ஆண்டுகளோ, கோடி ஆண்டுகளோ, நூறு கோடி ஆண்டுகளோ அல்ல. அது கணக்கில்லாதது. எப்பொழுதும் கர்த்தரோடு கூட இருப்பதே (1தெச. 4:17) நித்தியமாகும். எனவே பரலோகத்தில் அங்கே நாட்களும் நேரமும் கிடையாது. நித்தியம் என்ற ஒன்றே நேரமாகும்.

30

## பரலோகத்தில் நாம் எப்படி இருப்போம்?

பரலோகத்தில் எப்படி இருப்போம் என்பது ஆவல் நிறைந்த வாஞ்சையாக இருந்தாலும் அந்த மகிமையின் வாழ்க்கையையும், மகிழ்ச்சி நிறைந்த நித்தியத்தையும் வார்த்தைகளால் விவரிக்கமுடியாது. இந்த மனுக்குலம் மாம்சத்தாலும், இரத்தத்தாலும் ஆனது. பரலோகமோ ஆவியினாலும், மகிமையினாலும் ஆனது. இந்த பூமி வருத்தமும் கண்ணீரும் நிறைந்தது. அந்த மோட்சம் சந்தோஷத் தாலும், இன்பத்தாலும் நிறைந்தது. பூமிக்குரிய இந்த வாழ்க்கை தரும் மகிழ்ச்சி சில வருடங்களே நீடிக்கும். மோட்சத்திற்குரிய வாழ்க்கை தரும் மகிழ்ச்சியோ நித்தியமாய் நீடிக்கும்.. எனவே இந்த பூமியின் வாழ்க்கையை விரும்பாமல் அந்த மோட்சத்தின் வாழ்க்கையை விரும்புகின்றோம்.

நித்தியமாய் நீடிக்கும் வாழ்க்கையில் பகலெல்லாம் உழைத்து இரவெல்லாம் உறங்கும் வாய்ப்பிருக்காது. உண்ண உணவையும், உடுக்க உடையையும், உறங்க இடத்தையும் அங்கே தேடவேண்டியதில்லை. எந்தக் கவலையும் இல்லாமல், எந்தத் தேவையும் இல்லாமல், எந்தக் குறையும் இல்லாமல், எந்த யோசனையும் இல்லாமல், எந்த வருத்தமும் இல்லாமல், எந்த நோயும் இல்லாமல், மகிழ்ச்சி ஒன்றே அங்கு வியாபித்திருக்கும். இவைகள் மட்டுமின்றி பரலோகத்தில் நாம் எப்படி இருப்போம் என்பதற்கு முழுப்பட்டி யலையும் நம்மால் பெறமுடியா விட்டாலும், போதுமான குறிப்புகளை வேதம் நமக்குக் கொடுத்திருக்கிறது.

1. பரலோகத்தில் மக்கள் தேவ தூதர்களைப்போல் இருப்பார்கள்– லூக். 20:36
2. அவர்கள் சகல இனங்களிலிருந்தும் வருவார்கள் – வெளி. 7:9
3. சகல கோத்திரங்களிலிந்தும் அவர்கள் வருவார்கள் – வெளி. 7:9
4. சகல மொழி பேசுவோரும் அங்கு வருவார்கள் – வெளி. 7:9
5. அதில் ஒருவரும் எண்ணக்கூடாத அளவு திரளாய் இருப்பார்கள்– வெளி. 7:9
6. அவ்விடத்தில் வெள்ளை அங்கிகளைத் தரித்திருப்பார்கள் – வெளி. 7:9
7. தங்கள் அங்கிகளை அவர் இரத்தத்தால் தோய்த்திருப்பார்கள் – வெளி. 7:14
8. கைகளில் குருத்தோலைகளைப் பிடித்திருப்பார்கள் – வெளி. 7:9
9. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பு நிற்பார்கள் – வெளி. 7:9
10. தேவன் இவர்களுக்குள் வாசமாய் இருப்பார் – வெளி. 7:15
11. அவர்களை பசியும் தாகமும் இல்லாதிருப்பார்கள் – வெளி. 7:16
12. அவர்களின் கண்ணீர் யாவும் துடைக்கப்பட்டிருப்பார்கள்– வெளி. 7:17
13. அவர்களனைவரும் தேவ வெளிச்சத்தில் இருப்பார்கள் – வெளி. 22:5
14. எல்லாருமே தங்களுக்குரிய வாசஸ்தலத்தில் இருப்பார்கள் – யோவா. 14:2
15. அவர்கள் எப்பொழுதும் கர்த்தரோடு கூட இருப்பார்கள் – 1 தெச. 4:17

பரலோகத்தில் எப்படி இருப்போம் என்பதற்கு மேற்கூறிய குறிப்புகளை தியானித்தாலே மோட்சத்தின் இனிமையை உணர்ந்துகொள்ள முடியும். அங்கு தேவனும் மக்களுமே நெருங்கி வாழும் பாக்கியத்தைப் பெருகின்றனர். ஏதேன் தோட்டத்தில் தேவன் மனிதனோடு எப்படி உறவாடி மகிழ்ந்தாரோ அப்படியே பரலோகிலும் நம்மோடும் உறவாடி மகிழுவார். ஆதாம் எப்படி தோட்டத்தில் தேவனோடு மகிழ்ந்தானோ அப்படி மற்றவர்களும் மோட்சத்திலும் தேவனோடு மகிழுவார்கள்.

31

## பரலோகத்தில் நாம் என்ன செய்வோம்?

மோட்சம் என்பது அமைதி ஸ்தலம் அல்ல. அங்கே மயான அமைதியைக் காண முடியாது. அது ஆராதனைக் கூடமாகவும், தேவனின் ஆலயமாகவும் இருப்பதால் அங்கே தொழுகையும், ஆரவாரமும் தொனித்துக்கொண்டே இருக்கும். நமது பூலோக வாழ்க்கையில் நம் காதுகளால் கேட்ட இசையுடன் கூடிய பாடல்கள் அங்கேயிராமல், தெய்வீக இராகத்தோடு மகிமையான பிரசன்னத்தில் கோடிக்கணக்கானவர்கள் ஒரே விதமாய் இசைக்கும் இனிய கீதங்களால் மோட்சம் நிறைந்திருக்கும்.

நமக்குத் தெரியாத பல நிகழ்ச்சிகள் பரலோகத்தில் இருக்கின்றன. அவைகளை அங்கு போய்ப் பார்க்கும்போதுதான் அறிந்து கொள்ளமுடியும்.

பரலோகத்தில் நாம் என்ன செய்வோம் என்ற கேள்வியைப் கேட்பதற்கு முன் அங்கு என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வது நலமாயிருக்கும். தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். அவரது சிங்காச னத்தை சுற்றிலும் சேராபீன்கள் தங்கள் செட்டைகளை அடித்து கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என நிறுத்தாமல் புகழ்ந்துகொண்டே இருப்பதால் அவர்கள் கூப்பிடுகிற சத்தத்தில் தேவாலயம் நிரம்பியிருக்கிறது. மகிமையின் புகையினால் நிரம்பியிருப்பதுமின்றி (ஏசா.6:3–4) கணக்கற்ற தேவ தூதர்கள் பரம சேனையின் திரளாய் கூடி தேவனைத் துதித்துக்கொண்டே இருக்கிறார்கள் (லூக். 2:13–14). இத்தகைய இடத்தில் மனிதர்களாகிய நாம் நுழைந்ததும் அமைதியாய் கைக்கட்டி, வாய் பொத்தி இருக்கமுடியாது. துதிபாடல்களின் மகிமையில் நாமும் நிறைந்து அவரைத் துதிக்க ஆரம்பித்துவிடுவோம்.

1. மோட்சத்தில் நாம் தேவனை ஆர்ப்பரிப்போம் – வெளி. 7:10
2. தேவனை முகங்குப்புற விழுந்து தொழுதுகொள்வோம் – வெளி. 7:11
3. தேவனை ஓய்வின்றித் துதிப்போம் – வெளி. 7:12
4. தேவனை இடைவிடாமல் முகமுகமாய் சேவிப்போம் – வெளி. 7:15
5. ஆட்டுக்குட்டியானவர் நம்மை மேய்ப்பார் – வெளி. 7:17
6. ஜீவ நதியில் நம்மை நடத்துவார் – வெளி. 7:17
7. கண்ணீர் யாவையும் துடைத்துவிடுவார் – வெளி. 7:17
8. அவருடைய ஊழியர்கள் அவரை சேவிப்பார்கள் – வெளி. 22:4
9. அவருடைய முகத்தை தரிசிப்பார்கள் – வெளி. 22:4
10. மணவாட்டியாக அவரிடத்தில் இருப்போம் – வெளி. 21:2

மேற்கூறிய குறிப்புகள் அனைத்தும் வெளிப்படுத்தின விசேஷத்தில் மட்டும் நமக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளாகும். அந்தப் பரலோக புத்தகத்தில் நாம் காண்கிற பரம பாக்கியம் முழுமையாக இடம்பெறாவிட்டாலும், திருப்திகரமாக இடம்பெற்றுள்ளது. மோட்சத்தில் நாம் என்ன செய்வோம் என்பதை அங்கு சென்ற பின்பு முழுமையாக அறிந்துகொள்வோம். செல்வதற்கு முன்பு அதற்கு ஆயத்தமாக இருக்க சில செயல்களை பூமியில் பழகிக்கொள்ளவேண்டும். பரம பிதாவை பரலோகத்தில் ஆராதனை செய்வதற்கு முன்னாயத்தமாக பூமியில் அவரை ஆராதித்து, துதித்து தொழுதுகொள்ள கற்றுக்கொள்ளவேண்டும்.

32

# பரலோகம் செல்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

தேவன் ஒருவரே உண்மையான கடவுள் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வது நல்லது. உலகத்தின் துவக்கமுதல் முடிவுவரை அன்புள்ள வராகவே இருப்பது அவர் ஒருவரே. வேதத்தின் முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரைக்கும் தேவன் அன்பாகவே இருப்பதற்கான அடையாளங்களும், சாட்சி களும் நிறைந்திருக்கின்றன. இந்த அன்பை மனுக்குலத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் புரிந்துகொள்ள வேண்டும் என்றே அவர் எதிர்பார்க்கிறார். ஆனால் மனிதன் அவரது அன்பை உதாசீனப்படுத்தி அவமதித்துவிடுகிறான். எத்தனையோ தலைமுறை மக்கள் இப்படி அவரது அன்பைத் தள்ளி பாவத்தின் இன்பத்தைப் பருகுவதில் கவனம் செலுத்தி வந்தனர். இதனால் நீண்டகாலம் பொறுமையாய் இருந்த தேவன் அவரே மனுவுருகொண்டு பூமியில் இயேசு என்ற பெயரில் இறங்கிவந்தார்.

இயேசு பிதாவின் அன்பை வெளிப்படுத்த முப்பத்தி மூன்றரை ஆண்டுகள் பூமியில் வாழ்ந்து ஒவ்வொரு மனிதனின் பாவங்களுக்காகவும், அவர் மரணத்தை ருசிப்பார்த்து இரத்தம் சிந்தி ஜீவனை விட்டார். மூன்றாம் நாள் மகிமையோடு உயிர்த்தெழுந்தார். இயேசு எல்லா மக்களுக்காகவும் பிறந்தார் (லூக். 2:10). ஒவ்வொரு மனிதனுக்காவும் மரித்தார் (எபி. 2:9), பாவிகளை இரட்சிக்க உலகத்தில் வந்தார் (1 தீமோ. 1:15). எனவே அவர் கிறிஸ்தவர் களுக்கு மட்டும் தெய்வம் அல்ல, மண்ணில் வாழும் ஒவ்வொரு மனிதனுக் கும் தெய்வமாகவும், இரட்சகராகவும் இருக்கிறார்.

தேவன் ஆவியாய் இருக்கிறார் (யோவா. 4:24), பிதாவானவர் ஒளியாக இருக்கிறார் (1 யோவா. 1:5). சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறார் (1 தீமோ. 6:16), பட்சிக்கும் அக்கினியாய் இருக்கிறார் (எபி. 12:29), மகா பரிசுத்தராய் காணப்படுகிறார் (தானி. 9:24), இத்தனை சிறப்புகள் நிறைந்த அவரிடம் பாவியான மனிதன் நெருங்க முடியாது. மண்ணான இந்த மனிதன் ஆவியாய் இருக்கிற தேவனிடம் அணுக முடியாது. அவரைக் காண் கிறவர்கள் எவரும் உயிரோடுகூட வாழமுடியாத நிலை இருந்தது. ஆனால் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து பூமிக்கு

இறங்கிவந்து தமது ஜீவனைக் கொடுத்து ஒவ்வொரு மனிதனையும் அழைத்துக்கொண்டுபோய் சேரக்கூடாத தேவனிடத்தில் கொண்டுபோய் விட்டு அங்கே பிதாவிடம் இந்த மனிதனுக்காக பரிந்து பேசி அவரிடம் மன்றாடுகிறார். சர்வ வல்லவரிடத்தில் நெருங்கமுடியாதிருந்த மனிதன் கிறிஸ்து இயேசுவினால் மகனைப்போல அவரிடம் நெருங்கி நிற்கும் வாய்ப்பைப் பெறுகிறான்.

மகா பெரிய தேவன் இருக்கும் இடத்திற்குச் செல்லவும், மகத்துவமான பிதாவினிடத்தில் நெருங்கவும் வாய்ப்பை உண்டாக்கியது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே. இவரேயல்லாமல் ஒருவரும் அவரிடத்தில் செல்லமுடியாது. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; **என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்** (யோவா. 14:6) என்பதை ஆண்டவர் தெளிவாகக் கூறியிருக்கிறார். எனவே பிதாவினிடத்தில் செல்வதற்கு நாம் இயேசு கிறிஸ்துவின் துணையோடு செல்லவேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்த இயேசு கிறிஸ்துவினிடத்தில் செல்வதற்கு என்ன செய்யவேண்டும் ?

மகத்துவம் நிறைந்த இரட்சகராகிய இயேசு பரலோகத்திற்குச் செல்லும் வழியாகவும் (யோவா. 14:6), வாசலாகவும் (யோவா. 10:7), ஒளியாகவும் (யோவா. 8:12 ), உயிராகவும் (யோவா. 14:6), வாழ்க்கையாகவும் (யோவா. 10:10), வசன மாகவும் (யோவா. 1:1) இருக்கிறார். பாவமே செய்யாத இவர் பாவியை இரட்சிக்கிற இரட்சகர் என்று நம்பி அவரிடத்தில் வந்து உள்ளத்தைத் திறந்து எனக்குள்ளே வாரும் என அழைத்தால் போதும். அவர் உள்ளே வந்து வாசம் பண்ணிவிடுவார். அவரிடத்தில் நம்பிக்கையோடு வந்தால் வருகிறவர்களின் உள்ளத்தில் அவர் வாசம்பண்ணுவார். இயேசு யார் யார் உள்ளத்தில் தங்கி வாசம்பண்ணுகிறாரோ அவர்களெல்லாம் பிதா வாசம்பண்ணும் பரலோகத்தில் இடம்பெறுவர்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவோம் (அப். 16:31), அவரே என்னுடைய பாடுகளை ஏற்று நம்முடைய துக்கங்களை சுமந்தார்(ஏசா.53:4), என்னுடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டார், எனது அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசா. 53:5) என்று அவரை விசுவாசித்து , பாவங்களை அறிக்கை செய்து அவரிடத்தில் இரக்கம் கேட்டு பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறவர்கள் பரலோகத்தில் இருப்பார்கள். அவரே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாய் இருக்கிறார் என்பதை விசுவாசிப்போர் பிழைத்துக்கொள்வார்கள் (யோவா.

**11:25–26)**. நீங்கள் பிழைக்கவேண்டு மென்றால் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். அவரை விசுவாசிப்பீர்களானால் பாவக் கழுவுதலுக்கு அடையா ளமாக திருமுழுக்கு எடுக்கவேண்டும். விசுவாசித்து திருமுழுக்கு எடுப்போர் இரட்சிக்கப்படுவர் **(மாற்.16:16)**. அப்படி விசுவாசித்து இரட்சிக்கப் படுவோர் விசுவாசிக்குரிய அற்புத அடையாளங்களைச் செய்வர் **(மாற். 16:17–18)**. அப்படி விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு அற்புத அடையாளம் செய்வோர் முடிவில் அவரைப்போல பரலோகத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டு பிதாவின் சமுகத்தில் இருப்பர் **(மாற். 16:19)**. இயேசுவின் மீது வைக்கும் எளிய விசுவாசம் உங்களுக்கு விண்ணரசு என்றும், மோட்சம் என்றும் அழைக்கப்படும் பரலோகத்தை அளித்துவிடுகிறது !

# பைபிள் கால்ஸ்

## வெளியிடும் எமது புத்தகங்கள்

1. வேதாகம விளக்கம் – புதிய ஏற்பாடு
2. வேதாகம விளக்கம் – பழைய ஏற்பாடு
3. வேதாகம அகராதி
4. வேதாகம முன்னுரை – பழைய & புதிய ஏற்பாடு
5. வேதாகம கால வாழ்க்கை முறை
6. வேதாகமக் குறிப்புகள்
7. பரலோகம் எப்படி இருக்கும் ?
8. நரகம் எப்படி இருக்கும் ?
9. எப்படி ஜெபிக்கவேண்டும் ?
10. எப்படி ஜெபிக்கக்கூடாது ?
11. அசுத்த ஆவிகள் என்ன செய்கின்றன ?
12. தேவதூதர்கள் என்ன செய்கிறார்கள்?
13. மரணத்திற்குப் பின் நடப்பது என்ன?
14. நியாயத்தீர்ப்பு எப்படி நடக்கும்?
15. இயேசுவின் டைரி
16. நெறிந்த நாணல்
17. துர்உபதேசங்கள்
18. ஜெபத்தின் ரகசியம்
19. ஜெபவாழ்க்கை
20. Dictionary of Bible Names
21. Dictionary of Baby Names
22. Golden Words (Quotations)

# இயேசுவின் இயக்கம்

- ஸ்தாபகர் -

**Dr. ஆண்ட்ரு தேவ்**

**Dr. ஜெயராணி தேவ்**

*இயேசுவின் இயக்கம் என்ற இவ்வூழியம் இயேசுவின் அன்பையும், இயேசுவின் வார்த்தையையும், பூமியின் கடைசி மனிதனுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற தரிசனத்தோடு ஸ்தாபிக்கப்பட்டதாகும்.*

| | |
|---|---|
| நற்செய்திக் கூட்டங்கள் | ❖ குடும்பக் கருத்தரங்கு |
| வேதாகம பயிற்சிக் கல்லூரி | ❖ இலக்கிய ஊழியம் |
| பெண்கள் ஊழியம் | ❖ சிறுவர் ஊழியம் |
| பத்திரிக்கை ஊழியம் | ❖ ஒலி ஒளி நாடாக்கள் |
| தொலைக்காட்சி ஊழியம் | ❖ மருத்துவப் பணிகள் |

போன்ற ஊழியங்கள் இவ்வியக்கத்தின் மூலம் நடைப்பெற்று வருகின்றன, இம்மாபெரும் பணிக்கு தங்களின் ஜெபமும், ஆதரவும் தேவைப்படுகின்றன.

மேலும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

**இயேசுவின் இயக்கம்,**

த.பெ.எண். 1040, சென்னை - 10, இந்தியா.

E-Mail : thejesusmission@yahoo.com Website : thejesusmission.org

உங்களுக்காக நாங்கள் எப்பொழுதும் ஜெபிக்கிறோம் ...

உங்கள் அவசர ஜெபதொடர்புக்கு

போன் : 91- 9244448080 / 9444498080

*பைபிள் காலிங்*


வெளியிடும் எமது புத்தகங்களை வாசித்து பயனடையுங்கள்

ஆன்ட்ரு தேவ்

# பரலோகம்

## எப்படி இருக்கும்?

பேரின்ப வாழ்வின் ஆனந்த சத்தியங்களை அறியாத காரணத்தால் புரியாத கவலைகளுக்குள் புதைந்துவிடுகிறோம். ஆனால் இப்புத்தகத்திலுள்ள செய்திகளை படித்தப்பின் உங்களுக்கு இந்த பூமிக்குரிய வாழ்க்கையின் மேல் வெறுப்பாகி, அந்த மேலோக வாழ்க்கையில் எப்போது வாழ்வேனென ஏங்கித்தவிப்பீர்கள்...



சகோதரன் ஆன்ட்ரு தேவ் தேவனால் பயன்படுத்தப்படும் பாத்திரமாவார். இவரும் இவரது துணைவியார் டாக்டர் ஜெயராணியும் இறைவனின் சேவைக்காய் தங்களை முழு நேரமாய் அர்ப்பணித்தவர்கள். "இயேசுவின் இயக்கம்" என்ற ஊழியத்தின் ஸ்தாபகருமான இப்புத்தக ஆக்கியோன் கூட்டங்களில் பிரசங்கிப்பதோடு எழுத்துப்பணியிலும் கவனம் செலுத்தி வருகிறார். எளிய நடையுள்ள இவரது புத்தகங்கள் அனைத்து கிறிஸ்துவ உலகிற்கு மிகுந்த ஆசிர்வாதமாய் இருப்பதோடு விசுவாசிகளுக்கும், இறையியல் கல்லூரி மாணவர்களுக்கும், சபை போதகர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாய் இருக்கின்றன.

THE JESUS MISSION
Chennai, India

1440
MAXIMUM RETAIL PRICE INCLUSIVE OF ALL TAXES
Rs 40